# சிந்திக்கத்தூண்டும் சின்னஞ்சிறு இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ ஆய்வுக் கட்டுரைகள்

**(FaithBrowser articles in Tamil language)**

**March 2020**

Source: https://www.answering-islam.org/tamil/authors/umar/faith_browser.html

# பொருளடக்கம்


1. முஸ்லிம்களே! இந்த கேள்வியை நீங்கள் எப்போதாவது கேட்டுள்ளீர்களா? ..... 3

2. சொர்க்கம் போகும் வழி? ..... 4

3. நீ ஒரு அடிமையா அல்லது மகனா? ..... 6

4. கண்களுக்கு தெரியாத அல்லாஹ் காணப்படுவானா? ..... 9

5. கடைசியாக அனுப்பப்பட்டவர் உவமையும் இஸ்லாமும் ..... 11

6. ”ஆதி பாவம் (ஒரிஜினல் சின்)” என்றால் என்ன? ..... 13

7. நான் எறும்பு-மனிதன். . .(அல்லாஹ்விற்கு அனைத்தும் சாத்தியமா?) ..... 15

8. ஷைத்தானின் புண்ணியத்தினால் ஆயத்துல் குர்ஸியை முஸ்லிம்கள் (ஷைத்தானை துரத்த) ஓதிக்கொண்டு இருக்கிறார்கள்! ..... 19

9. இஸ்லாமிய வணக்க வழிபாடுகள் எங்கேயிருந்து வந்தன? ..... 24

10. குர்ஆன் 5:47ல் அல்லாஹ் சொன்னதை நான் பின்பற்ற முடியுமா? ..... 27

11. முஸ்லிம் நண்பரே! அந்த புத்தகங்கள் எங்கே? ..... 30

12. முதலில் வந்தது எது? பைபிளா அல்லது குர்ஆனா? ..... 33

13. யார் முதலாவது வந்தார்கள்? ஜோசப் ஸ்மித்தா அல்லது முஹம்மதுவா? ..... 35

14. அல்லாஹ் மூன்று நபர்களா? (ARE THERE THREE ALLAHS?) ..... 38

15. இவர்களில் யார் உண்மையான இயேசு? (WHO IS THE REAL JESUS?) ..... 39

16. உங்களுடைய தண்டனையை மற்றவர்கள் மீது சுமத்தி, அல்லாஹ் அவர்களை தண்டிப்பானா? ..... 41

17. இஸ்மாயீலை காட்டுக்கழுதை என அழைத்து பைபிள் அவமானப்படுத்தியதா? ..... 43

18. இயேசு என்ன சொன்னார்? வித்தியாசமான வினாடி வினா கேள்வி பதில்கள் ..... 49

19. இயேசுவைப் பற்றி உங்களுக்கு எவ்வளவு தெரியும்? ..... 53

20. சலீமுடைய குர்ஆன் எங்கே? ..... 55

21. முஸ்லிம்களே, இஸ்லாமின் படி ஈஸா தம் அழைப்பு பணியில் படுதோல்வி அடைந்தாரா? ..... 57

22. சுலைமான் (சாலமோன்) ராஜா ஒரு முஸ்லிமா? ..... 59

23. முஸ்லிம்கள் நித்திய ஜீவனைப்பெற என்ன செய்யவேண்டும்? ..... 62

24. முஸ்லிம்கள் இறைவனோடு எப்படி தொடர்பு கொள்ளமுடியும்? ..... 65

25. எலியா(எலியாஸ்) நபியின் இறைவன் யார்? - யெகோவா? / அல்லாஹ்? 67

## 1. முஸ்லிம்களே! இந்த கேள்வியை நீங்கள் எப்போதாவது கேட்டுள்ளீர்களா?

ஒவ்வொரு முஸ்லிமும் விரும்பி கேட்கும் கேள்வி இது தான்:

"இயேசு இறைவன் என்றால், அவர் எங்கு இப்படி சொல்லியுள்ளார் என்று எனக்கு பைபிளிலிருந்து காட்டமுடியுமா?"

ஒரு முறை, நான் மத்தேயு 4ம் அத்தியாயத்தை வாசித்துக்கொண்டு இருந்தேன். அப்போது திடீரென்று எனக்குள் ஒரு கேள்வி தோன்றியது, அதாவது "**முஸ்லிம்கள் அனைவரும் இந்த கேள்வியை கேட்கும் படி ஏன் போதிக்கப்பட்டுள்ளார்கள்?**" என்பதாகும்.

மத்தேயு நற்செய்தி நூலில், சாத்தான் அடிக்கடி இயேசுவிடம் சவால் விடுவதை காணமுடியும், அதாவது "நீ உண்மையாகவே தேவகுமாரன் என்றால், இதை செய்துக்காட்டு" என்று இயேசுவிடம் சவால் விட்டான்.

முஸ்லிம்கள் "இயேசு இறைவன் என்றுச் சொன்னால். . ." என்ற கேள்வியை கிறிஸ்தவர்களிடம் கேட்கிறார்கள். இதே கேள்வியைத் தான் சாத்தானும் இயேசுக் கிறிஸ்துவிடம் கேட்டான்.

நீங்கள் இந்த கேள்வியை கூர்ந்து கவனித்தால், இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்பது, ஆதாம் ஏவாள் காலத்திலிருந்தே சாத்தானுடைய ஒரு யுக்தியாக உள்ளது என்பதை காணமுடியும்.

சாத்தான் அன்று ஏவாளிடம் என்ன கேட்டான் என்று உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா? அவன் தேவனுடைய வார்த்தையை கீழ்கண்டவாறு சந்தேகம் உண்டாகும் படி கேள்வி கேட்டான்:

**ஆதியாகமம் 3:1**

. . . அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் **என்று தேவன் சொன்னது உண்டோ என்றது**.

இங்கு சாத்தான் தேவனுக்கு சவால் விட்டான், தேவனுடைய வார்த்தைக்கு சவால் விட்டான்.

இயேசு சிலுவையில் அறைப்பட்ட அந்த நேரத்தில், அங்கு சாத்தான் கூட இருந்தான் என்று உங்களுக்குத் தெரியுமா?

மத்தேயு 27:39-43வரையுள்ள வசனங்களை வாசித்துப் பாருங்கள். மக்களில் சிலர், பிரதான ஆசாரியர்கள் மற்றும் இதர யூத தலைவர்கள், இயேசுவை எப்படி கேலி செய்தார்கள், சவால் விட்டார்கள் தெரியுமா?

“நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வாa” என்று கேட்டார்கள்.

ஏதோன் தோட்டத்தில் சவால் விட்ட அதே சாத்தானின் யுக்தி தான், அப்போது இயேசுவின் தெய்வீகத்தைக் குறித்து சவால் விட்டது.

ஏதோன் தோட்டத்தில் சாத்தான் தானாகவே சவால் விட்டான். இயேசுவை சிலுவையில் அறையப்பட்டபோது, அவன் சவால் விட மனிதர்களை பயன்படுத்தினான். அது மட்டுமல்ல, இயேசுவின் தெய்வீகத்தைக் கேள்விகேட்க, யூத மத தலைவர்களையும் பயன்படுத்திக்கொண்டான். இன்று, சாத்தான் 1.5 மில்லியன் ஜனத்தொகைக் கொண்ட முஸ்லிம்களை அதே சவால் விட பயன்படுத்திக்கொண்டு இருக்கிறான். அதாவது, “இயேசு இறைவன் என்றால்,. . . “ என்ற கேள்வியை முஸ்லிம்கள் கேட்கும் படி செய்திருக்கிறான்.

முஸ்லிம்களே! தூக்கத்திலிருந்து எழுந்திருங்கள்! உங்கள் கண்களையும் இருதயங்களையும் திறக்கப்பட முயற்சி செய்யுங்கள். சாத்தானின் தந்திரமான வலையில் விழாதீர்கள். நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று அவன் விரும்புகிறானோ, அதனை நீங்கள் அறியாமையில் செய்துக்கொண்டு இருக்கிறீர்கள். உங்களை அவன் அடிமைப் படுத்தி, தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறான்.

அன்று சாத்தான் கிறிஸ்துவிற்கு சவால் விட்டான், இன்று அவனைப் பின்பற்றும் சிலர் கிறிஸ்துவை பின்பற்றுபவர்களிடம் அதே சவாலை விடுகிறார்கள்.

ஆங்கில மூலம்: **HAVE YOU EVER ASKED THIS QUESTION?**

------🙞🙞🙞🙞------

## 2. சொர்க்கம் போகும் வழி?

இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவத்திற்கும் இடையே இருக்கும் மிகப்பெரிய வித்தியாசம் இது தான்.

**முஸ்லிம்களின் கூற்று:** “நான் எல்லா மத சடங்குகளை சரியாக பின்பற்றுவேன், முடிந்த அளவிற்கு எல்லா நல்ல காரியங்களைச் செய்வேன், இதன் மூலமாக நான் சொர்க்கத்தில் அனுமதிக்கப்படலாம்”.

**கிறிஸ்தவர்களின் கூற்று:** “நான் செய்யும் அனைத்து நற்காரியங்களும் என்னை சொர்க்கத்தில் கொண்டுச் சென்று விடுவதற்கு போதுமானதாக இல்லை. தேவன் செய்த காரியம் தான் என்னை சொர்க்கத்திற்குள் செல்ல உதவும்”.

எந்த ஒரு மனிதனும் தன்னுடைய சொந்த நற்செயல்களினால் சொர்க்கம் சென்றடையமுடியாது என்று பைபிள் சொல்கிறது. தேவன் மட்டுமே நம்மை இரட்சித்து, நம்மை சொர்க்கத்தில் அனுமதிக்கமுடியும். பரிசுத்தமான தேவனுக்கு முன்பாக மனிதன் செய்யும் நல்ல செயல்கள் அனைத்தும் அழுக்கு படிந்த கந்தை துணிகளாகும். தேவன் தன்னிடம் சேருவதற்கு என்ன வழி என்று காட்டியுள்ளார். அவர் காட்டிய வழியை யார் ஏற்றுக்கொள்கிறாரோ, அவருக்கு தேவன் வாக்கு கொடுத்த பரலோகம் உறுதி செய்யப்பட்டு விடுகின்றது.

முஸ்லிம்களே! உங்களுக்கு ஒரு மிகப்பெரிய பிரச்சனை உள்ளது. எத்தனை நற்காரியங்கள் செய்தால், சொர்க்கம் செல்வதற்கு போதுமானதாக இருக்கும் என்ற எண்ணிக்கை உங்களுக்குத் தெரியாது. நீங்கள் இதுவரை செய்துக்கொண்டு வந்துக்கொண்டு இருக்கும் நற்செயல்களை அல்லாஹ் ஏற்றுக்கொண்டானா? இல்லையா? என்று உங்களுக்குத் தெரியாது, அல்லது கடைசி நிமிடத்தில் அல்லாஹ் உங்களை நரகத்தில் தள்ளிவிடவும் வாய்ப்பு இருக்கின்றது. உங்களுக்கு சொர்க்கமா? நரகமா? என்ற நம்பிக்கைக்கு கியாரண்டி கிடையாது. ஒரு முக்கியமான கேள்வி, நீங்கள் செய்யும் நல்ல காரியங்கள் அனைத்தையும் "சுயமாக நீங்களே விரும்பிச் செய்கிறீர்களா?" அல்லது "சொர்க்கத்திற்கு செல்வதற்கான பயணச் சீட்டு கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் செய்கிறீர்களா?". இதனை நீங்கள் எப்போதாவது சிந்தித்து பார்த்து இருக்கின்றீர்களா? நீங்கள் செய்யும் நல்ல காரியங்கள் அனைத்தும் "சுயநலத்துடன்" கூடியவைகளாக இருக்கின்றன என்பதை நீங்கள் உணரவில்லையா? சுயநலம் என்பது பாவம் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். விஷயம் இப்படி இருக்க, பரிசுத்தமான, நீதிபதியாகிய நல்ல இறைவன், சுயநலத்துடன் செய்யப்படும் காரியங்களை எப்படி ஏற்றுக்கொள்வான் என்று எதிர்ப்பார்க்கிறீர்கள்?

நான் இந்த நற்காரியங்களைச் செய்தால், அல்லாஹ் எனக்கு சொர்க்கம் கொடுப்பான் என்பது ஒரு சுயலமான நற்காரியமல்லவா? இதனை அல்லாஹ் அங்கீகரிப்பனா?

இறைவன் காட்டிய வழியை கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள், அதனால் அவர்களுக்கு சொர்க்கம் சுதந்திரமாக கொடுக்கப்படுகின்றது. அந்த ஒரே வழியை பின்பற்றும் கிறிஸ்தவர்கள் "நல்ல காரியங்கள்" என்ற லஞ்சத்தை கொடுத்து சொர்க்கத்தை சம்பாதிக்கவேண்டிய அவசியமில்லை.

சொர்க்கத்தின் மக்களாக, உண்மையான கிறிஸ்தவர்கள், நல்ல காரியங்களை சுயநலமில்லாமல் செய்கிறார்கள். இந்த காரியங்கள் செய்தால் தான் சொர்க்கம் என்ற கோட்பாடு இல்லாமல், "நமக்கு சொர்க்கம் ஏற்கனவே வாக்களிக்கப்பட்டு இருப்பதினால், அதற்கு நன்றி செலுத்தும் வண்ணமாக நற்காரியங்களைச் செய்வோம்" என்று கிறிஸ்தவர்கள் கிரியை நடப்பிக்கிறார்கள். மேலும் நம்மை இறைவன் நேசித்தார், நமக்கு சொர்க்கமும் கொடுத்துள்ளார், கடைசியாக, சொர்க்கத்தில் அவரோடு நாம் இருக்கவும் அனுமதித்தார், எனவே ஒரு நன்றியுள்ள மனதோடு அவர் உண்டாக்கிய இதர மக்களுக்கு சுயநலமில்லாமல் உதவி செய்யவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் கிறிஸ்தவர்கள் "நற்கிரியைகள்" செய்கிறார்கள்.

தேவன் எப்படி உலக மக்களை நேசித்து அவர்களுக்கு நன்மைகள் செய்கிறாரோ, அவருடைய அன்பைப் பெற்ற கிறிஸ்தவர்களும் அதே போல, உலக மக்களுக்கு நல்லதைச் செய்ய முயலுகின்றார்கள், முடிந்த அளவிற்குச் செய்கிறார்கள்.

**இறைவன் காட்டிய அந்த வழி எது?**

அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவான் 14:6)

இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி . . . . நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும்சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான். (யோவான் 10:9)

ஆங்கில மூலம்: **The Way to Heaven**

------ஜஐஜஐஜஐஜஐ------

## 3. நீ ஒரு அடிமையா அல்லது மகனா?

முஸ்லிம்கள் தாங்கள் அல்லாஹ்வின் **அடிமைகள்** என்று நம்புகிறார்கள்.

இயேசுவை இரட்சகராகவும் தேவனாகவும் ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவர்கள், தாங்கள் தேவனின் **பிள்ளைகள்** (மகன்கள், மகள்கள்) என்று நம்புகிறார்கள்.

**1) இஸ்லாம் - ஒரு அடிமை தன் எஜமானனோடு தனிப்பட்ட உறவு கொண்டு இருக்கமாட்டான்.**

கிறிஸ்தவம் - ஒரு மகன் தன் தந்தையுடன் தனிப்பட்ட முறையில் சிறப்பான உறவு கொண்டு இருப்பான்.

அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். (யோவான் 1:12)

**2) இஸ்லாம் - எஜமானன் தன் அடிமையை பயன்படுத்திக் கொள்கிறான் (வேலை வாங்குகிறான்)**

கிறிஸ்தவம் - தந்தை தன் மகனை வளர்க்கிறான்

அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான்; குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார். (யோவான் 8:35)

**3) இஸ்லாம் - அடிமை தனக்கு சம்பளம் கிடைக்கும் என்பதற்காக என் எஜமானனுக்கு வேலை செய்கின்றான்**

கிறிஸ்தவம் - ஒரு மகன் தன் தந்தையின் சொத்துக்கள் அனைத்தும் தனக்கே சுதந்தரமாக கிடைக்கும் என்ற நம்பிக்கை மற்றும் வாக்கு இருப்பதினால், நன்றியுள்ள உள்ளத்தோடு தந்தைக்கு ஊழியம் செய்கின்றான்

**4) இஸ்லாம் - அடிமை தேவனுடைய ராஜ்ஜியத்தை (எஜமானனின் இராஜ்ஜியத்தை) சுதந்தரிக்க முடியாது.**

கிறிஸ்தவம் - குமாரன் தேவனுடைய இராஜ்ஜியத்தின் குடிமகனாக இருக்கிறான்

நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே;. . . (ரோமர் 8:17)

**5) முஸ்லிம்கள் தங்களை அல்லாஹ் நரக நெருப்பில் தள்ளக்கூடாது என்ற பயத்தினால் அவனை தொழுதுக் கொள்கிறார்கள்.**

கிறிஸ்தவர்கள், தங்களை தேவன் தம்முடைய சமூகத்தில் ஏற்றுக்கொண்டுவிட்டார் என்பதினால், அன்பின் வெளிப்பாடாக அவரை தொழுதுக்கொள்கிறார்கள்.

அந்தப்படி, திரும்பவும்பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். (ரோமர் 8:15)

**6) முஸ்லிம்கள் அதிக மதிப்பெண்கள் பெறவேண்டும், அதன் மூலம் நரகத்திலிருந்து தப்பவேண்டும் என்பதறகாக அதிகதிகமாக 'தொழுகிறார்கள், மற்றும் குர்-ஆனை ஓதுகிறார்கள்'.**

கிறிஸ்தவர்கள், தேவனோடு தங்களுக்கு இருக்கும் உறவை இன்னும் பலப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காக, அதிகமாக ஜெபிக்கிறார்கள், மற்றும் அதிகமாக பைபிள் வாசிக்கிறார்கள்.

**7) முஸ்லிம்கள், ரமளானில் நோன்பு இருக்கிறார்கள் ஏனென்றால், அது கட்டாயக் கடமை என்பதால்.**

கிறிஸ்தவர்கள், அதிக நேரத்தை தேவனோடு செலவிடவேண்டும் என்பதற்காக உபவாசம் இருந்து ஜெபம் செய்து, தேவனோடு நெருங்குகிறார்கள், இது கட்டாயத்தின் பெயரில் எடுத்த முடிவு அல்ல, சுயவிருப்பத்தின் படி எடுத்த முடிவு ஆகும்.

**8) முஸ்லிம்கள் தங்கள் தீய காரியங்களின் எண்ணிக்கையை விட, நல்ல காரியங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கவேண்டும் என்பதற்காக நற்காரியங்களைச் செய்கிறார்கள்.**

கிறிஸ்தவர்கள் தங்கள் நற்காரியங்கள் மூலமாக தேவனுடைய பெயர் மகிமைப்படுத்தப்படவேண்டும் என்பதற்காக நற்காரியங்களைச் செய்கிறார்கள்.

இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத்தேயு 5:16)

**9) அல்லாஹ் தங்களை நிச்சயம் ஏற்றுக்கொள்வான் என்ற நம்பிக்கை முஸ்லிம்களுக்கு கிடையாது.**

பிதாவாகிய தேவன் இயேசுக் கிறிஸ்து மூலமாக தங்களை ஏற்றுக்கொண்டார் என்ற நம்பிக்கை கிறிஸ்தவர்களுக்கு உண்டு.

> 13. இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.
>
> 14. [குமாரனாகிய] அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. (கொலோசெயர் 1:13-14)

- பரலோகத்திற்கு செல்லும் வழியை நீங்கள் விலை கொடுத்து வாங்க முடியாது.
- பரலோகத்திற்கு செல்லும் வழியை நீங்கள் லஞ்சம் கொடுத்து வாங்க முடியாது.
- பரலோகத்திற்கு செல்லும் வழியை நீங்கள் நற்காரியங்கள் செய்து சம்பாதிக்க முடியாது.
- பரலோகத்திற்கு செல்லும் வழியை நீங்கள் சுயமாக சம்பாதிக்கமுடியாது.
- பரலோகத்திற்கு செல்லும் வழியை நீங்கள் பொய் சொல்லி சம்பாதிக்கமுடியாது.
- பரலோகத்திற்கு செல்லும் வழியை நீங்கள் பணம் கொடுத்து பெற்றுக்கொள்ளமுடியாது.
- ஏனென்றால், அதற்கான விலையை உங்களுக்கு பதிலாக ஏற்கனவே செலுத்தியாகிவிட்டது.

எனக்கு அந்த விலை செலுத்தப்பட்டுள்ளது என்ற உண்மையை நீங்கள் ஏற்கலாம், அல்லது மறுக்கலாம். ஆனால், உங்களின் இந்த தீர்மானத்தின் மேல் தான் உங்கள் நித்தியம் நிர்ணயிக்கப்படுகின்றது.

> கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;
>
> ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; (எபேசியர் 2:8-9)

இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்;

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார். (யோவான் 8:31,32)

ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள், (யோவான் 8:36)

ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய். (கலாத்தியர் 4:7)

ஆங்கில மூலம்: **ARE YOU A SLAVE OR A SON?**

------ꕥꕥꕥꕥꕥꕥꕥꕥ------

## 4. கண்களுக்கு தெரியாத அல்லாஹ் காணப்படுவானா?

கண்களுக்கு தெரியாத அல்லாஹ் நாம் காணும்படி அவன் வெளிப்படுவானா?

இக்கேள்விக்கு இரண்டு பதில்கள் உள்ளன: **ஆம் (அ) இல்லை**

'**இல்லை, அல்லாஹ்வை பார்க்கமுடியாது**' என்பது உங்கள் பதிலாக இருந்தால், இதன் அர்த்தமென்ன தெரியுமா? அல்லாஹ் சர்வ வல்லமையுள்ள இறைவன் அல்ல என்பதாகும். அவன் ஒரு பலவீனமான, குறைபாடுள்ள இறைவனாக இருக்கிறான். ஏனென்றால், அவன் உருவாக்கிய தேவ தூதர்களுக்கு இருக்கின்ற வல்லமை கூட அவனுக்கு இல்லை, அதாவது மலக்குகள் என்றுச் சொல்லக்கூடிய தேவதூதர்கள் மனித வடிவில் காணப்படுவார்கள், அதே நேரத்தில், தங்களின் உண்மை நிலையை(தெய்வீகத் தன்மையை) இழக்கமாட்டார்கள். ஆனால், அல்லாஹ் இவர்களை விட பலவீனமானவன் என்று நீங்கள் ஒப்புக்கொண்டீர்கள் என்று அர்த்தமாகின்றது.

ஒருவேளை நீங்கள் '**ஆம், அல்லாஹ்வினால் காணப்படமுடியும்**' என்றுச் சொல்வீர்களென்றால், நீங்கள் ஒரு பிரச்சனையில் மாட்டிக்கொண்டு இருக்கிறீர்கள் என்று அர்த்தம். அது என்ன பிரச்சனை? இதனை கவனியுங்கள். அல்லாஹ் ஒரு தனி ஆள், ஏகத்துவ இறைவன். அவன் தன் உருவத்தை மாற்றிக்கொண்டு மக்கள் காணப்படும் படி இறங்கி வருகிறான் என்று தானே இதன் பொருள் (பார்க்கமுடியாத நிலையில் இருப்பவன், பார்க்கும் நிலையில் வருகிறான்).

உங்களின் கூற்றின்படி, ஒருவேளை அல்லாஹ் ஒரு மனித உருவில் தன்னை ஒரு நிமிடம் மட்டும் மாற்றிக்கொண்டு பூமியில் வந்துவிட்டால்,

அவன் அண்டைவெளியில் இருக்கமுடியாது. அதாவது நேரம் மற்றும் இடத்தை (Time and Space) கடந்து கடவுள் என்ற நிலையில் அவன் வானத்தில் இருக்கமாட்டான். இதனால், அவன் ஒரு நித்தியமானவனாக, சர்வ வல்லவனாக, சர்வ ஞானியாக, சர்வ வியாபியாக இருக்கமுடியாது. அல்லாஹ் மனிதனாக இருந்த அந்த ஒரு நிமிடம், உலகிற்கு இறைவன் என்பவன் இருக்கமாட்டான், என்பது தான் இதன் அர்த்தம். (இறைவன் இல்லாமல் இவ்வுலகம் ஒரு நிமிடமாவது இயங்குமா?!)

**இது தான் தவ்ஹீத் (ஏகத்துவம்) பற்றிய முஸ்லிம்களின் புரிதல்.**

ஆனால், பைபிளின் தேவனுக்கு இந்த பிரச்சனை இல்லை. யெகோவா என்ற ஆபிரகாமின், ஈசாக்கின், யாக்கோபின் தேவன் ஒருவரே ஆவார், ஆனால் மூன்று ஆள்தத்துவத்தில் இருக்கிறார்.

[ஒரு சிறிய உதாரணம். பிரபஞ்சம் (Universe) என்பது மூன்று காரியங்களை உள்ளடக்கியது காலியிடம், நேரம் மற்றும் பொருள் (The universe is made up of space, time and matter). இம்மூன்றைக் கொண்டு இருந்தாலும், நாம் அதனை ஒரு பிரபஞ்சம் என்றே அழைக்கிறோம், மூன்று பிரபஞ்சங்கள் என்று அழைப்பதில்லை. யூனிவர்ஸ் (Universe) என்ற பதத்தில் உள்ள 'Uni' என்பதற்கு ஒன்று என்று பொருள். எந்த ஒரு பிரபஞ்சத்தை எடுத்துக்கொண்டாலும், இம்மூன்றைக் கொண்டு தான் அது இருக்கும்.]

யெகோவா என்பவர் ஒரு தேவனாவார் ~ அவர் மூன்று ஆள்தத்துவங்கள் கொண்டுள்ளார், பிதாவாகிய தேவன், குமாரனாகிய (வார்த்தையாகிய) தேவன், மற்றும் பரிசுத்த ஆவியானவராகிய தேவன்.

நித்தியமான, ஒருவரும் பார்க்கமுடியாதவராகிய வார்த்தையாகிய தேவன், மனித வடிவில் மாறி தான் உண்டாக்கிய உலகில் வந்தார். இந்த வகையில் "பார்க்க முடியாத" நிலையில் இருக்கும் தேவன் "பார்க்கும்" நிலையில் தன்னை வெளிப்படுத்தினார்.

பிதாவாகிய தேவன் தம்மை மனிதன் பார்க்கும் படி, தன்னை மாற்றிக்கொள்ளவில்லை. அவர் நித்தியமானவராகவே, சர்வ வல்லவராகவே, சர்வ ஞானியாகவே, சர்வ வியாபியாகவே இருந்து, தம்முடைய வார்த்தையாகிய தேவனை மனித ரூபமெடுத்து பூமியில் இயேசுவாக காணப்படும்படி அனுப்பினார். அதன் பிறகு அந்த வார்த்தையாகிய தேவன் (பூமியில் அவருக்குப் பெயர் இயேசு) 33 ஆண்டுகள் தான் வந்த சரீரத்தில் வாழ்ந்து, மறுபடியும் தான் விட்டு வந்த இடத்திற்கே சென்றுவிட்டார்.

இப்படி அல்லாஹ்வினால் செய்யமுடியாது, ஏனென்றால், அவர் பூமியில் மனித வடிவில் இறங்கிவிந்துவிட்டால், மேலேயிருந்துக்கொண்டு யார் உலகை ஆளவது?

இயேசுவின் மனித அவதாரத்தை முஸ்லிம்களால் புரிந்துக்கொள்ள முடியாது என்பதில் ஆச்சரியமில்லையே!

ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. (யோவான் 1:1)

அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. (யோவான் 1:14)

பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை. (யோவான் 3:12-13)

அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார். (யோவான் 14:6,7)

ஆங்கில மூலம்: **CAN THE INVISIBLE GOD BECOME VISIBLE?**

------ꙮꙮꙮꙮ------

# 5. கடைசியாக அனுப்பப்பட்டவர் உவமையும் இஸ்லாமும்

மாற்கு சுவிசேஷத்தில் (**12:1-12**), இயேசு குத்தகைக்காரர்கள் பற்றி ஒரு உவமையைச் சொன்னார். இந்த உவமையை கவனமாக படித்து, இயேசு உண்மையில் அதில் என்ன சொல்கிறார் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

சுருக்கமாக சொல்வதென்றால், ஒரு மனிதன் திராட்சை தோட்டத்தை உருவாக்கி, அதனை சில விவசாய குத்தகைக்காரர்களுக்கு ‘குத்தகைக்கு’ விட்டுச் சென்றார். சில மாதங்கள் கடந்த பிறகு, தனக்கு வரவேண்டிய அறுவடையை (வாடகையை) கொடுங்கள் என்றுச் சொல்லி, தன்னுடைய வேலைக்காரர்களை ஒருவருக்கு பின்னால் ஒருவராக சிலரை அனுப்புகிறார். அந்த குத்தகைக்காரர்கள் தோட்டத்தின் எஜமான் அனுப்பிய வேலைக்காரர்களில் சிலரை அடித்து வெறுங்கையாக அனுப்பிவிடுகிறார்கள், சிலரை கொன்றும், சிலரை அவமானப்படுத்தியும் அனுப்பிவிடுகிறார்கள்.

இந்த கதையின் மையக்கருத்து என்ன? அல்லது இதன் மூலமாக இயேசு எவைகளைச் சொல்ல விரும்புகிறார்?

இந்த கதையில் வரும் தோட்டக்காரர் (எஜமான்) இறைவன் ஆவார். அவருடைய வேலைக்காரர்கள் என்பவர்கள், அவர் காலங்காலமாக அனுப்பிய தீர்க்கதரிசிகள் (நபிகள்) ஆவார்கள். மக்கள் அந்த தீர்க்கதரிசிகளில் சிலரை கேவலப்படுத்தினார்கள், சிலரை கொடுமைப்படுத்தினார்கள், சிலரை கொன்றார்கள்.

தன் வேலையாட்களை (நபிகளை/தீர்க்கதரிசிகளை) அனுப்பியும் ஒன்றும் நடக்காதபோது, அந்த தோட்டத்தின் எஜமான் என்ன செய்தான்? இப்போது மூன்று வசனங்களை படிப்போம்.

> 6. அவனுக்குப்பிரியமான ஒரே குமாரன் இருந்தான்; என் குமாரனுக்கு அஞ்சுவார்களென்று சொல்லி, அவனையும் கடைசியிலே அவர்களிடத்தில் அனுப்பினான்.
>
> 7. தோட்டக்காரரோ: இவன் சுதந்தரவாளி, இவனைக் கொலைசெய்வோம் வாருங்கள்; அப்பொழுது சுதந்தரம் நம்முடையதாகும் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு;
>
> 8. அவனைப் பிடித்துக் கொலைசெய்து, திராட்சத்தோட்டத்துக்குப் புறம்பே போட்டுவிட்டார்கள். (மாற்கு 12:6-8)

இயேசுவின் மேற்கண்ட உவமையின் மூலமாக எவைகளை கற்கிறோம்?

**நாம் மூன்று சத்தியங்களை கற்கிறோம்:**

1) தம்முடைய அனைத்து தீர்க்கதரிசிகளையும் அனுப்பிவிட்ட பிறகு தேவன், தம்முடைய ஒரே பேரான குமாரனை அதாவது இயேசுவை கடைசியாக அனுப்பினார்.

2) தம்முடைய குமாரனுக்கு அடுத்தபடியாக, வேறு எந்த ஒரு நபியையும், இறைத்தூதரையும் தேவன் அனுப்பவில்லை.

3) அவர் அனுப்பிய குமாரனை, அந்த குத்தகைக்காரர்கள் கொலை செய்தார்கள்.

[மேற்கண்ட உவமையில் அந்த தோட்டத்தின் எஜமான் அந்த தீய குத்தகைக்காரர்களை என்ன செய்தார் என்பதை நீங்கள் **மாற்கு 12:1-12** வரை படித்து தெரிந்துக்கொள்ளுங்கள்]

> 1. பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன்,
>
> 2. இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.

3. இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார். (எபிரேயர் 1:1-3)

(இயேசுவிற்கு பிறகு, தேவன் எந்த ஒரு தீர்க்கதரிசியையும் அனுப்பவில்லை, அனுப்பவேண்டிய அவசியமும் இல்லை. முஹம்மது தன்னை '**பைபிளின் இறைவன்**' தான் அனுப்பினார் என்றுச் சொன்னதிலிருந்து, அவர் ஒரு பொய் தீர்க்கதரிசி என்று நிரூபனமாகிறது)

ஆங்கில மூலம்: **THE LAST ONE SENT**

------ଓଃଓଃଓଃଓଃ------

## 6. "ஆதி பாவம் (ஒரிஜினல் சின்)" என்றால் என்ன?

"ஆதி பாவம்" என்பதைப் பற்றி முஸ்லிம்கள் தவறாக புரிந்துக் கொண்டுள்ளார்கள். அதாவது ஆதி பாவம் என்றால், ஆதாம் செய்த அதே பாவத்தை நாம் செய்திருக்கிறோம் என்று அர்த்தமல்ல. உண்மையில், நாம் செய்கின்ற (நம் சொந்த) பாவங்களுக்காகத் தான் நாம் குற்றவாளிகளாக இறைவனுக்கு முன்பு நிற்கிறோம்.

ஆதாமும் ஏவாளும் தேவன் கொடுத்த கட்டளைக்கு கீழ்படியாமல், எப்போது மீறி நடந்தார்களோ, அப்போது ஒன்று நடந்தது, அது என்னவென்றால் "**அவர்கள் தேவனைவிட்டு தூரமாகிவிட்டார்கள், பிரிந்துவிட்டார்கள்**". அதனால், தான் அவர்கள் ஏதோன் தோட்டத்திலிருந்து வேளியே அனுப்பிவிடப்பட்டார்கள். சரீர பிரகாரமாக (physical separation) ஆதாமும், ஏவாளும் தேவனைவிட்டு பிரிந்தார்கள், என்பது மட்டுமல்ல, அவர்கள் ஆவிக்குரிய விதத்திலும் (spiritual separation) பரிசுத்த தேவனை விட்டு பிரிந்துவிட்டார்கள். தூய்மையான மனநிலையுடன் படைக்கப்பட்ட மனிதன், தன் கீழ்படியாமையினால், கறைபடுத்தப்பட்டுவிட்டான். இதன் பிறகு அந்த ஆதாமுக்கு பிள்ளைகளாக பிறந்திருக்கும் நாம் அனைவரும், அதே பாவ மனநிலையுடன் தான் பிறக்கிறோம். இப்படி மனிதன் பாவ இயல்புடன் பிறப்பதினால் தான், அதனை '**ஆதி பாவம் (ஒரிஜினல் சின்)**' என்று நாம் சொல்கிறோம்.

இப்படியெல்லாம் இல்லை என்று நீங்கள் மறுக்கலாம். அதாவது பிறக்கும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பாவம் செய்ய ஈர்க்கப்படும் இயல்புடன் பிறப்பதில்லை என்று நீங்கள் சொல்லலாம். அப்படியென்றால், பிறக்கும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தங்கள் மரணம் வரை ஒருமுறை கூட பாவம் செய்யமாட்டார்கள் என்று நீங்கள் சொல்வதாக அர்த்தமாகின்றது. இது உண்மைதானா? இது சாத்தியமா? நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள், அதாவது உலகில் இன்று வாழும் 700 கோடி மக்களில் அல்லது இதுவரை சரித்திரத்தில் வாழ்ந்தவர்களில் "ஒருமுறைகூட பாவம் செய்யாமல்,

பரிசுத்தமாக வாழ்ந்த" ஒரே ஒரு நபரையாவது கண்டுபிடித்துக் காட்டுங்கள். சரி, உங்களுக்கு தெரிந்தவர்களில் இப்படி பரிபூரண பரிசுத்தமாக வாழ்ந்த / வாழும் ஒரு நபரின் பெயராவது உங்களுக்குத் தெரியுமா? உங்கள் தந்தை, தாய், இமாம் அல்லது பாஸ்டர்? இவர்களில் யாராவது இந்த பட்டியலில் இடம் பெறமுடியுமா? அவர்களிடம் சென்று இதுவரை நீங்கள் ஒரு பாவமும் செய்யவில்லையா? என்று அவர்களிடமே கேட்டுப்பாருங்களேன்?

ஒருவேளை மதர் தெரேசா அவர்கள் உலகில் மிகவும் நல்லவர்களாக வாழ்ந்தவர்களாக நாம் கருதமுடியுமா? அவர்களிடமே இதனை கேட்டுப்பார்த்தால், அவர்கள் சொல்லுவார்கள் 'பரிசுத்த நீதி தேவனுக்கு முன்பாக நான் ஒரு பாவி' என்று.

பாவ பிடியிலிருந்து யாருமே தப்ப முடியாது. இந்த இயல்பு நாம் பிறந்த நாள் முதற்கொண்டு நம்மோடு இருக்கும். நாம் ஆதாமின் மகன்களாக மகள்களாக பிறக்கும் போதே, பாவத்தை செய்ய ஈர்க்கும் இயல்புடன் தான் பிறக்கிறோம்.

இப்போது கவனியுங்கள்! இதிலிருந்து விடுபட ஒரே ஒரு வழி தான் இருக்கிறது, அது என்னவென்றால் "**மறுபடியும், புதிய ஆதாமாக நாம் பிறப்பது தான்**".

இது ஒரு பைத்தியக்காரத்தனமான பேச்சுபோல உங்களுக்குத் தோன்றும். ஆனால், இதனை விளக்கும் வசனத்தை நான் பைபிளிலிருந்து உங்களுக்கு காட்டுகிறேன்.

**பார்க்க**: **1 கொரிந்தியர் 15:21** மற்றும் **1 கொரிந்தியர் 15:45-49**

இவ்வசனங்களில் சொல்லப்பட்ட புதிய அல்லது கடைசி ஆதாம் இயேசு கிறிஸ்து ஆவார்.

அந்த பிரமீப்பூட்டும் வசன பகுதியை வாசிக்கும் போது, முதலாவது ஆதாம் தன் கீழ்படியாமையினால் எப்படி தோல்வி அடைந்தார் என்பதையும், கடைசி ஆதாமாகிய இயேசுக் கிறிஸ்து தம்முடைய கீழ்படிதலினால் எப்படி வெற்றி அடைந்தார் என்பதையும் காணமுடியும்.

முதலாவது ஆதாமின் செயலினால் நாம் பாவ சுபாவத்துடன் பிறக்கிறோம். இப்போது கடைசி ஆதாமினால் (இயேசுவினால்), ஒரு புதிய சுபாவத்துடன் பிறக்கிறோம், அதாவது முதலாவது மனிதனை தேவன் ஏதோன் தோட்டத்தில் படைத்த போது எந்த சுபாவத்துடன் இருந்தானோ (பாவமில்லாதவனாக), அதே சுபாவத்துடன் நாம் இயேசுவில் மறுபடியும் பிறக்கிறோம்.

இயேசு நம்மை ரீபூட் (Reboot), ரீ-ஸ்டார்ட் (re-start) செய்ய வந்தார், அதாவது நம்மை மறுபடியும் புதிதாக்க வந்தார். இதைத் தான் ஆதாம் இழந்திருந்தார். தேவனுடைய இராஜ்ஜியத்தின் கதவுகளை திறந்து, நாம் தேவனோடு ஒப்புரவாக, இயேசு நம் ஆதிநிலையை திரும்ப நமக்கு கொடுத்தார்

(அதாவது, நம்மை புதிய சுபாமுடைய மனிதர்களாக மாற்றினார்). ஒன்று மட்டும் நிச்சயம், இயேசு ஒருபோதும் நம்மை கட்டாயப்படுத்தமாட்டார்.

அதனால் தான், 2 கொரிந்தியர் 5:17 இப்படியாகச் சொல்கிறது:

> இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

நீங்களும் நானும் ஒரு முடிவை இப்போது எடுக்கவேண்டும்.

**தெரிவு 1:**

நாம் பிறந்த நாள் முதற்கொண்டு, மரிக்கும் நாள்வரையும், நாம் பழைய ஆதாமின் சுபாவத்துடனே வாழ்ந்துக்கொண்டு இருக்கலாம், அதன் விளைவாக, தேவனுடைய பிரசன்னத்திலிருந்து நாம் தள்ளிவிடப்படுவோம்.

**அல்லது**

**தெரிவு 2:**

நாம் இயேசுவிடம் எங்கள் சுபாவத்தை "Ctrl-Alt-Del" செய்து, ரீபூட் செய்யச்சொல்லலாம். இப்படி நாம் புதிய சுபாவத்துடன் ரீபூட் செய்யப்பட்டால், இனிமேல் புதிய சிருஷ்டியாக வாழமுடியும்.

ஆங்கில மூலம்: **WHAT IS ORIGINAL SIN?**

------ஐஐஐஐஐஐ------

## 7. நான் எறும்பு-மனிதன். . .(அல்லாஹ்விற்கு அனைத்தும் சாத்தியமா?)

(I AM ANT-MAN)

இறைவன் ஆவியாக இருக்கிறார், அதாவது நாம் அவரை பார்க்கமுடியாது. அவர் நித்தியமானவராகவும், எல்லையில்லாதவராகவும் இருக்கிறார். நம்மைப்போல அவர் நேரம், மற்றும் இடத்திற்கு (time and space) உட்பட்டவராகமாட்டார்.

இவ்வுலகையும், அதற்குள் செயலாற்றும் நேரத்தையும் அவரே படைத்தார். அவர் படைத்த அனைத்து படைப்புக்களுக்கு மேலே மற்றும் அவைகளுக்கு வெளியே இருக்கிறார். மனிதனின் கற்பனைக்கும் அப்பாற்பட்டவராக அவர் இருக்கிறார். அவருக்கு கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம்

அனைத்தும் ஒன்று போலவே தெரியும். ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள், காலத்திற்குள் அவரை அடக்கமுடியாது, ஏனென்றால், அவர் சர்வ வியாபியாக இருக்கிறார்.

**இப்போது கேள்வி என்னவென்றால்:**

சர்வ வல்லவரும், சர்வ வியாபியுமாகிய இறைவன், பூமியில் ஒரு மனிதனாக மாறி, நம்மைப் போல நடக்கவும், பேசவும் முடியுமா? அதாவது இறைவன் மனிதனாக வரமுடியுமா? அதே நேரத்தில் இறைவனாகவும் இருந்து, உலகை ஆளமுடியுமா?

இறைவனால் முடியாதது இவ்வுலகில் ஒன்றுமில்லை என்பதை நாம் அனைவரும் அறிவோம். உங்களிடம் யாராவது வந்து, 'இறைவனால் இப்படி மனிதனாக வரமுடியாது' என்றுச் சொல்வார்களானால், அவர்கள் 'இறைவனின் வல்லமையை குறைத்து மதிப்பிடுகிறார்கள்' என்று அர்த்தம்.

தேவனால் இப்படி செய்யமுடியும் என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். அதாவது, இயேசுக் கிறிஸ்து மூலமாக இறைவன் மனிதனாக இறங்கி வந்தார் என்று நம்புகிறார்கள்.

ஒரு முக்கியமான விஷயத்தை கவனிக்கவும். நித்திய தேவன், பூமியில் மனிதனின் உருவெடுத்து வரும் போது கூட, அவர் எல்லையில்லாதவராக, நித்தியமானவராகவே அண்டத்தில் (பூமிக்கு வெளியே - outside of time and space) இருந்தார். பிதாவாகிய இறைவன், தம்முடைய தெய்வீக சாரத்தை ஒரு வரையறைக்கு உட்பட்ட மனிதனின் வடிவில் பூமியில் இறக்கினார். கவனிக்கவும், தேவன் அப்படியே மனிதனாக மாறி பூமிக்கு வரவில்லை (அப்படி வந்திருந்தால், அவர் பூமிக்கு வந்துவிட்ட பிறகு, உலகை ஆள இறைவன் என்ற ஒருவர் அண்டத்தில்/வானத்தில் இல்லாமல் இருந்திருப்பார்).

இது எப்படி சாத்தியம்? இறைவன் மனிதனாக வந்தால், பூமியிலும் அவர் மனிதனாக இருக்கமுடியும், அதே நேரத்தில் வானத்திலும் இறைவனாக இருந்து உலகை ஆளமுடியும்? இது இறைவனுக்கு சாத்தியமே! இறைவன் தன்னுடைய தெய்வீகத்தில் மனுசீகத்தையும் சேர்த்துக்கொண்டு வந்தார். தன்னுடைய வல்லமையை குறைத்துக்கொண்டு, மனித சரீரத்தோடு உலகில் வாழ்ந்தார். பாவத்தைத் தவிர, மனிதன் செய்யக்கூடிய அனைத்தையும் செய்தார். அவர் பாவம் செய்யவில்லை, ஏனென்றால், அவர் பரிசுத்தராக இருக்கிறார்.

இந்த வகையில் இறைவன் தான் படைத்த தன் 'பூமிக்குள் வந்தார்'. தான் உருவாக்கிய படைப்பிற்குள் வரமுடியாத, வரவிரும்பாத தெய்வங்களுக்கு முன்பாக, கிறிஸ்தவர்கள் நம்பும் இறைவன், தான் உண்டாக்கிய படைப்பிற்குள் இறங்கிவந்தது, ஆச்சரியமான மற்றும் சந்தோஷமான விஷயமாகும். அவர் செய்த இந்தச் செயல், மற்றவர்களைக் காட்டிலும் இவர் விசேஷித்தவர் என்பதைக் காட்டுகிறது, இவர் சர்வ வல்லவர் என்பதைக் காட்டுகிறது, இவரால் எல்லாம் முடியும் என்பதை நிரூபிக்கிறது.

நிபந்தனையற்ற அன்பை பொழியும் தெய்வத்தால் மட்டுமே இப்படி செய்யமுடியும். தன்னுடைய பிரமாண்டமான அடையாளத்தை கட்டுப்படுத்தி, தான் உண்டாக்கிய படைப்பிற்குள் இறங்கி வந்தார். மனிதன் 'தன்னை தனிப்பட்ட முறையில் அறிந்துக் கொள்ளவேண்டும்' என்ற நோக்கத்தோடு இறங்கிவந்தது, மகா ஆச்சரியமாகும். மனிதனால் சுயமாக பரலோகம் சென்று தேவனை அறிந்துக்கொண்டு திரும்பி பூமிக்கு வரமுடியாது, ஆனால், அவர் பூமிக்கு இறங்கி வந்து தம்மை வெளிப்படுத்தி, மறுபடியும் வானத்துக்கு ஏறிச்செல்லமுடியும்.

தெய்வங்கள் என்றுச் சொல்லக்கூடியவர்கள், தங்கள் நபிகளை, நல்லவர்களை மக்களுக்கு போதனை செய்வதற்கு அனுப்புவார்கள், இது சாதாரணமே. ஆனால், உலகில் எந்த தெய்வம் இப்படி இருக்கிறது? அதாவது தம்மை மனிதன் அறிவதற்கு தானே சுயமாக மனிதனிடம் இறங்கி வருவது! 'மனிதனுக்கு தூரமாக வானத்தில் எங்கேயோ இருப்பதை' ஒரு பெருமையாக, கர்வமாக நினைக்கும் தெய்வங்கள் இப்படி செய்யாது, எந்த தெய்வம் நிபந்தனையற்ற அன்பு செலுத்துகின்றதோ, அந்த தெய்வம் தான் இப்படி செய்யமுடியும்!

இதுவரை சொன்ன விவரங்களின் பொருள் இன்னும் நன்றாக விளங்கவேண்டுமென்பதற்காக, நான் ஒரு எடுத்துக்காட்டைச் சொல்லட்டும். உங்களில் யாராவது '**ஆண்ட் மேன் - Ant-Man**' என்ற படத்தை பார்த்து இருக்கிறீர்களா? இந்த படத்தில், ஒரு மனிதன் திடீரென்று ஒரு எறும்பைப்போல மாறிவிடுகின்றான். அதன் பிறகு, அவனால், இதர எறும்புகளோடு உரையாடவும், நடக்கவும் பேசவும் முடிகின்றது.

இது ஒரு சுவாரசியமான கதை தான், ஆனால் இது ஒரு கற்பனைக் கதையாகும். மனிதன் சுயமாக எறும்பாக மாறும் திறமை படைத்தவன் அல்ல என்பதால், இது ஒரு கற்பனைக் கதையாகும்.

ஆனால், என்னோடு கூட ஒரு நிமிடம் ஒரு கற்பனை கதைக்கு தயாராகிவிடுங்கள். ஒரு எறும்பாக மாறும் சக்தி எனக்கு உள்ளது என்று நினைத்துக் கொள்ளுங்கள். நான் என்னுடைய சாரத்தை (essence of my being) எடுத்து, ஒரு எறும்பிற்குள் 'டிஎன்ஏ (DNA)'வாக வைத்துவிடுகிறேன் என்று கற்பனை செய்துக்கொள்ளுங்கள். அதாவது நான் ஒரு எறும்பாக அவதாரம் எடுத்து, எறும்புகள் வாழும் ஒரு புற்றில் (காலனியில்), மற்ற எறும்புகளோடு ஒரு எறும்பாக வாழ்ந்துக்கொண்டு இருக்கிறேன்.

கவனத்தில் வைத்துக்கொள்ளுங்கள், நான் 'மனிதன்' என்ற நிலையிலிருந்து இல்லாமல் போகவில்லை. நான் மனிதனாகவும் இருக்கிறேன், அந்த எறும்பு புற்றில் என்ன நடக்கிறது என்பதையும் மனிதனாக இருந்துக்கொண்டு பார்க்கிறேன். அதே நேரத்தில் என்னில் ஒரு பாகமாக இருக்கும், அந்த எறும்பு, புற்றில் என்னவெல்லாம் செய்கிறது என்பதையும் காண்கிறேன். அந்த எறும்பு (நான்), மற்ற எறும்புகளோடு உரையாடுவதையும், இதர காரியங்கள் செய்வதையும், மனிதனாக இருந்துக்கொண்டே பார்க்கிறேன், அறிகிறேன், ஏனென்றால், இப்படியெல்லாம் செய்யக்கூடிய சக்தி எனக்கு உண்டு.

இப்போது, "**நான் இரண்டு நபர்களாக**" இருக்கிறேனா? என்ற கேள்வி எழுகின்றது. '**இல்லை, நான் இரண்டுபேராக இல்லை**', நான் நானாகவே (மனிதனாகவே) இருக்கிறேன், ஒருவனாகவே இருக்கின்றேன். அதே நேரத்தில் என் சக்தியை பயன்படுத்தி, ஒரு எறும்பாக, புற்றுக்குள்ளும் வாழ்ந்துக் கொண்டு இருக்கிறேன். அதாவது, அந்த எறும்பு புற்றுக்குள் செய்வதெல்லாவற்றையும் என் சக்தியினால் மனிதனாக இருப்பதினால் அறிகிறேன்.

எனக்கு எறும்பு உடலும் உண்டு, அதன் மூலமாக, அந்த எறும்பு புற்றில் நான் சுற்றுகிறேன், மற்ற எறும்புகளோடு ஒரு சக எறும்பாக அவர்களோடு வாழ்கிறேன். அந்த எறும்பு (நான்) மற்ற எறும்புகளைப்போல சாப்பிடுகிறேன், அவர்களோடு நடக்கிறேன், அவர்களைப்போலவே நானும் உருவத்தில் காணப்படுகிறேன். ஒரு எறும்பு எப்படி நடந்துக்கொள்ளுமோ அதே போல நானும் நடந்துக்கொள்கிறேன். ஆனால், தான் யார் என்றும், எங்கேயிருந்து வந்தது என்றும், எனக்கு (அந்த எறும்புக்கு) நன்றாகத்தெரியும். மற்ற எறும்புகளிடம் நான் சென்று, '**ஹலோ எறும்புகளே, நான் ஒரு மனிதன், எறும்பாக வந்திருக்கிறேன், என்னை வணங்குங்கள்**' என்றுச் சொல்கிறேன்.

நான் ஒரு மனிதனாகவும் இருக்கிறேன், அதே நேரத்தில் எறும்பாகவும் புற்றில் வாழ்கிறேன். நான் எறும்பாக மாறியதால் மனிதனாக இல்லாமல் போய்விடவில்லை, **அதற்கு பதிலாக, என்னில் ஒரு பாகத்தை (அல்லது) சாரத்தை, எறும்பாக மாற்றியிருக்கிறேன்**. மனிதனாக இருந்து, அந்த எறும்பு புற்றையும் பார்க்கிறேன், புற்றுக்குள்ளே எறும்பாக இருந்துக்கொண்டு, புற்றுக்கு மேலே நடக்கும் அனைத்தையும் அறிகிறேன்.

ஒரு முறை, மற்ற எறும்புகளிடம், 'அதோ, அந்த மனிதரைப் பாருங்கள். அவரும் நானும் ஒன்று தான்' என்றுச் சொல்கிறேன். மேலும், 'எறும்பு நிலையில் இருக்கும் என்னைவிட, அந்த மனிதன் பெரியவன்' என்றும் மற்றவர்களிடம் சொல்கிறேன்.

இதனை சில எறும்புகள் சரியாக புரிந்துக்கொள்ளவில்லை. ஒரு மனிதனாக இருந்த நான், என் சக்தியை பயன்படுத்தி, எறும்பாக மாறிய செயலை அனேக எறும்புகள் புரிந்துக்கொள்ளவில்லை. புரிந்துக்கொள்ளாத சில எறும்புகள், நான் சொல்வதைக் கேட்டு சிரித்தார்கள், இப்படியெல்லாம் செய்ய முடியாது என்றுச் சொல்லி, கேலி செய்தார்கள்.

> அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. (யோவான் 1:14)

> பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை. (யோவான் 3:13)

அவர் அவர்களை நோக்கி: நீங்கள் தாழ்விலிருந்துண்டானவர்கள், நான் உயர்விலிருந்துண்டானவன்; நீங்கள் இந்த உலகத்திலிருந்துண்டானவர்கள், நான் இந்த உலகத்திலிருந்துண்டானவனல்ல. (யோவான் 8:23)

இக்கட்டுரையை ஆங்கிலத்தில் படிக்க, கீழ்கண்ட தொடுப்பை சொடுக்கவும்.

ஆங்கில மூலம்: **I am ant-man**

------ღஐღஐღஐღஐღஐ------

## 8. ஷைத்தானின் புண்ணியத்தினால் ஆயத்துல் குர்ஸியை முஸ்லிம்கள் (ஷைத்தானை துரத்த) ஓதிக்கொண்டு இருக்கிறார்கள்!

ஷைத்தானிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக ஆயத்துல் குர்ஸி[1] என்ற ஒரு குர்ஆன் வசனத்தை முஸ்லிம்கள் ஓதுகிறார்கள்.

முஸ்லிம்களே! இந்த வசனத்தை ஓதினால் ஷைத்தானிடமிருந்து பாதுகாப்பு கிடைக்குமென்று உங்களுக்கு கற்றுக் கொடுத்தவன் யார் என்று சிந்தித்து பார்த்து இருக்கின்றீர்களா? சரி, இப்போதாவது அதனை அறிந்துக்கொள்வோம்.

**ஆயத்துல் குர்ஸியை ஓதினால், ஷைத்தான் நெருங்கமாட்டான் என்று கற்றுக்கொடுத்தவன் யார்?**

**அல்லாஹ் கற்றுக்கொடுத்தானா - இல்லை!**

**முஹம்மது கற்றுக்கொடுத்தாரா - இல்லை!**

**அப்படியானால் இதனை கற்றுக் கொடுத்தவர் யார்?**

**இதனை கற்றுக் கொடுத்தவன் ஷைத்தான் ஆவான்!** ஆம் அவன் தான் கற்றுக்கொடுத்தான். மேலும் முஹம்மது அதனை அங்கீகரித்தும் இருக்கிறார் என்பதை அறியும் போது, மனது உண்மையாகவே வலிக்கிறது.

சஹீஹ் புகாரி ஹதீஸ் தொகுப்பில் பதிவு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியை படித்துப் பாருங்கள், அப்போது தான் உண்மை உங்களுக்கே புரியும்.

**நூல்: புகாரி ஹதீஸ், எண்: 5010**

**5010. முஹம்மத் இப்னு சீரீன்(ரஹ்) அறிவித்தார்**

அபூ ஹுரைரா(ரலி), 'இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ரமளானின் (ஃபித்ரா) ஸகாத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்கள். அப்போது யாரோ ஒருவன் என்னிடம் வந்து அந்த (ஸகாத்) உணவுப் பொருளை அள்ளலானான். உடனே அவனை நான் பிடித்து, 'உன்னை இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் கொண்டு செல்லப் போகிறேன்' என்று சொன்னேன்' என்று கூறிவிட்டு, - அந்த நிகழ்ச்சியை முழுமையாகக் குறிப்பிட்டார்கள். - (இறுதியில், திருட வந்த) அவன், 'நீங்கள் படுக்கைக்குச் செல்லும்போது (ஆயத்துல் குர்ஸீ'யை ஓதுங்கள்! (அவ்வாறு செய்தால்,) விடியும்வரை அல்லாஹ்வின் தரப்பிலிருந்து (உங்களைப் பாதுகாக்கின்ற) காவலர் (வானவர்) ஒருவர் இருந்துகொண்டேயிருப்பார்; எந்த ஷைத்தானும் உங்களை நெருங்கமாட்டான்' என்று கூறினான். (இதை நான் நபி(ஸல்) அவர்களிடம் தெரிவித்தேன்). அப்போது நபியவர்கள், 'அவன் பெரும் பொய்யானாயிருப்பினும அவன் உம்மிடம் உண்மையாகத்தான் சொல்லியிருக்கிறான்; (உம்மிடம் வந்த) அவன்தான் ஷைத்தான்' என்று கூறினார்கள் என்றும் கூறினார்கள். 35

Volume :5 Book :66 (மேலும் பார்க்க புகாரி ஹதீஸ் எண்கள்: 2311 & 3275)

**என்ன ஆச்சரியம்!**

**இந்த நிகழ்ச்சியை நீங்கள் கற்பனை செய்து பார்க்கமுடியுமா?**

ஷைத்தான், தன்னை எப்படி விரட்ட வேண்டும் என்று தானே முஸ்லிம்களுக்கு நேரடியாக சொல்லிக் கொடுக்கின்றானா! இது எப்படி சாத்தியமாகும்? இதுவும் ஒரு உண்மையான நிகழ்ச்சி என்று நம்பும் அளவிற்கு முஸ்லிம்கள் அறியாமையில் இருக்கிறார்களா?

**ஒரு திருடனின் அறிவுரை:**

இதனை கற்பனை செய்துப்பாருங்கள், அதாவது ஒரு திருடன் அல்லது கொலைக்காரன், உங்களிடம் குழந்தைகள் விளையாடும் தண்ணீர் பாய்ச்சும் போலி துப்பாக்கியைக் கொடுத்து, என்னிடமிருந்து உங்களை காப்பாற்ற இந்த ஆயுதம் உதவும். இதனைக் கொண்டு என்னை சுட்டால், என்னால் உங்களை ஒன்றுமே செய்யமுடியாது. என்னை நம்புங்கள், நான் உண்மையைச் சொல்கிறேன். இதோ இந்த துப்பாக்கியை உங்கள் படுக்கையின் பக்கத்தில் வைத்துக்கொண்டு நீங்கள் நிம்மதியாக தூங்கலாம். நான் வரும் போது, இதனைக் கொண்டு என்னை சுட்டால் போதும் என்று சொல்கிறான் என்று வைத்துக்கொள்வோம்.

ஒரு திருடன் இப்படி உங்களிடம் சொன்னால், எப்படி இருக்கும் உங்களுக்கு? அதனை நீங்கள் நம்புவீர்களா?

இதுமட்டுமல்ல, தன்னை எப்படி விரட்டமுடியும் என்று ஷைத்தான் கொடுத்த ஆலோசனையை (அல்லது குறுக்குவழியை) அல்லாஹ்வின் இறைத்தூதரான முஹம்மது அங்கீகரித்தும் விட்டார், என்னே ஆச்சரியம்!

**இக்கேள்விகளை சிந்தித்துப்பாருங்கள்:**

1. தன்னை விரட்டும் வழிமுறைகளை முஸ்லிம்களுக்கு ஏன் ஷைத்தான் கற்றுக்கொடுப்பான்?
2. ஷைத்தான் தனக்கு தானே குழி தோண்டிக்கொள்வான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?
3. இப்படி ஷைத்தான் சொன்னான் என்று நம்புவது அறிவுடமையாக இருக்கின்றதா?

சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்? (இயேசு - மத்தேயு 12:26),

முஹம்மது கூறிய விவரத்தில் உள்ள லாஜிக்கை பார்த்தீர்களா?

**அப்போது நபியவர்கள், 'அவன் பெரும் பொய்யானாயிருப்பினும்**

**அவன் உம்மிடம் உண்மையாகத்தான் சொல்லியிருக்கிறான்;' (புகாரி எண்: 5010)**

இது என்ன ஆச்சர்யம்! ஒரு பெரும் பொய்யன், சொன்னது உண்மையா?

வேடிக்கையாக உள்ளதல்லவா? முஹம்மது அல்லாஹ்வின் இறைத்தூதராக இருப்பதோடு மட்டுமல்லாமல், ஷைத்தானுக்காக வழக்காடும் வழக்கறிஞராகவும் இருக்கிறாரா என்ன? என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

ஒருவனைப் பார்த்து, "**நீ உலக மகா பொய்யன்**" என்ற பட்டத்தை கொடுத்துவிட்ட பிறகு, "**நீ சொன்னதும் உண்மையே**" என்றுச் சொன்னால், இப்போது நாம் யாரை நொந்துக்கொள்வது? அந்த பொய்யனையா (ஷைத்தானையா) அல்லது அவனை அங்கீகரித்தவரையா (முஹம்மதுவையா)?

**அடுத்ததாக, ஷைத்தான் கூறியதையும் கவனியுங்கள்:**

அதற்கவன் 'என்னைவிட்டுவிடு! அல்லாஹ் உமக்குப் பயனளிக்கக் கூடிய சில வார்த்தைகளைக் கற்றுத் தருகிறேன்!' என்றான். (நூல்: புகாரி ஹதீஸ், எண் 2311)

1. அல்லாஹ் “இந்த நன்மையைச் செய்வான்” என்ற முடிவு எடுக்க ஷைத்தானுக்கு அதிகாரம் கொடுத்தவன் யார்?
2. ஷைத்தான் சொல்லிவிட்டானே என்பதற்காக, அதன் படி செய்ய அல்லாஹ்வால் முடியுமா? அல்லாஹ் ஷைத்தானுக்கு ஏதாவது கடமைப்பட்டுள்ளானா?
3. அல்லது ஷைத்தான் அல்லாஹ்வோடு சேர்த்து செயல்படும் கூட்டாளியா?

இந்த ஹதீஸ் முழுவதையும் படித்தால், இன்னும் பல தர்மசங்கடமான கேள்விகள் எழும்புகின்றன, ஆனால், இதோடு என் கேள்விகளை முடித்துக்கொள்கிறேன்.

முஸ்லிம்களே, அடுத்த முறை நீங்கள் ஆயத்துல் குர்ஸியை ஓதும் போது, இதனை மனதில் நிறுத்திக்கொள்ளுங்கள், அது என்னவென்றால், இந்த ஆயத்தை ஓதினால், ஷைத்தான் ஒன்றுமே உங்களை செய்யமுடியாது என்று உங்களுக்கு ஆலோசனை சொன்னவனே, அதே ஷைத்தான் தான்.

உண்மையைச் சொல்லவேண்டுமென்றால், ஷைத்தான் உங்களை (முஸ்லிம்களை) தெளிவாக குழப்பி ஏமாற்றியுள்ளான். நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று அவன் விரும்பினானோ, அதனைத் தான் நீங்கள் பல நூற்றாண்டுகளாக செய்துக்கொண்டு இருக்கிறீர்கள், **அல்ஹம்துலில்லாஹ்**!

**அடிக்குறிப்புக்கள்:**

**1) ஆயத்துல் குர்ஸி என்பது, குர்ஆனின் இரண்டாம் அத்தியாயத்தின் 255வது வசனமாகும்.**

2:255. அல்லாஹ்-அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறு இல்லை; அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன்; என்றென்றும் நிலைத்திருப்பவன்; அவனை அரி துயிலோ, உறக்கமோ பீடிக்கா; வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன; அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? (படைப்பினங்களுக்கு) முன்னருள்ளவற்றையும், அவற்றுக்குப் பின்னருள்ளவற்றையும் அவன் நன்கறிவான்; அவன் ஞானத்திலிருந்து எதனையும், அவன் நாட்டமின்றி, எவரும் அறிந்துகொள்ள முடியாது; அவனுடைய அரியாசனம் (குர்ஸிய்யு) வானங்களிலும், பூமியிலும் பரந்து நிற்கின்றது; அவ்விரண்டையும் காப்பது அவனுக்குச் சிரமத்தை உண்டாக்குவதில்லை - அவன் மிக உயர்ந்தவன்; மகிமை மிக்கவன். (முஹம்மது ஜான் டிரஸ்ட் தமிழாக்கம்).

**2) இந்த நிகழ்ச்சி பற்றி பதிவு செய்யப்பட்ட ஸஹீஹ் புகாரி ஹதீஸ்கள்:**

2311. அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.

நபி(ஸல்) அவர்கள் ரமளானுடைய (ஃபித்ரா) ஜகாத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை என்னிடம் கொடுத்தார்கள். அப்போது ஒருவர் வந்து உணவுப் பொருட்களை அள்ளலானார். அவரை நான் பிடித்து, 'உன்னை நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு செல்லப் போகிறேன்!' என்று கூறினேன். அதற்கவர், 'நான் ஓர் ஏழை!' எனக்குக் குடும்பம் இருக்கிறது. கடும் தேவையும் இருக்கிறது! என்று கூறினார். அவரை நான்விட்டு விட்டேன். விடிந்ததும் நபி(ஸல்) அவர்கள், 'அபூ ஹுரைராவே! நேற்றிரவு உம்மால் பிடிக்கப்பட்டவர் என்ன செய்தான்? என்று கேட்டார்கள்.நான், 'இறைத்தூதர் அவர்களே! தாம் கடுமையான வறுமையில் இருப்பதாகவும் தமக்குக் குடும்பம் இருப்பதாகவும் அவர் முறையிட்டார். எனவே, இரக்கப்பட்டு அவரைவிட்டு

விட்டேன்! என்றேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள், 'நிச்சயமாக அவன் பொய் சொல்லியிருக்கிறான்! மீண்டும் அவன் வருவான்! என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதால் அவன் மீண்டும் வருவான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதால் அவன் மீண்டும் வருவான் என்று நம்பி அவனுக்காக(அவனைப் பிடிப்பதற்காக) காத்திருந்தேன். அவன் வந்து உணவுப் பொருட்களை அள்ளத் தொடங்கியபோது அவனைப் பிடித்தேன். 'உன்னை நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு செல்லப் போகிறேன்! என்று கூறினேன். அதற்கவன், 'என்னைவிட்டுவிடு! நான் ஓர் ஏழை! எனக்குக் குடும்பமிருக்கிறது! இனிநான் வரமாட்டேன்! என்றான். அவன் மேல் இரக்கப்பட்டு அவனைவிட்டு விட்டேன். விடிந்ததும் நபி(ஸல்) அவர்கள் அபூ ஹுரைராவே! உம்மால் பிடிக்கப்பட்டவன் என்ன செய்தான்! என்று கேட்டார்கள். நான் 'இறைத்தூதர் அவர்களே! அவன் (தனக்குக்) கடும் தேவையும் குடும்பமும் இருப்பதாக முறையிட்டான்; எனவே, அவன் மேல் இரக்கப்பட்டு அவனைவிட்டுவிட்டேன்! என்றேன். 'நிச்சயமாக அவன் உம்மிடம் பொய் சொல்லியிருக்கிறான். திரும்பவும் உம்மிடம் வருவான்! என்றார்கள். மூன்றாம் முறை அவனுக்காகக் காத்திருந்தபோது,அவன் வந்து உணவு பொருட்களை அள்ளத் தொடங்கினான். அவனைப் பிடித்து, 'உன்னை நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு செல்லப்போகிறேன்! (ஒவ்வொரு முறையும்) 'இனிமேல் வரமாட்டேன்! என்று செல்லிவிட்டு, மூன்றாம் முறையாக நீ மீண்டும் வந்திருக்கிறாய்! என்று கூறினேன். அதற்கவன் 'என்னைவிட்டுவிடு! அல்லாஹ் உமக்குப் பயனளிக்கக் கூடிய சில வார்த்தைகளைக் கற்றுத் தருகிறேன்!' என்றான். அதற்கு நான் 'அந்த வார்த்தைகள் என்ன? என்று கேட்டேன். 'நீர் படுக்கைக்குச் செல்லும்போது ஆயத்துல் குர்ஸியை ஆரம்பத்திலிருந்து கடைசிவரை ஓதும்! அவ்வாறு செய்தால், விடியும் வரை அல்லாஹ்வின் தரப்பிலிருந்து உம்மைப் பாதுகாக்கிற (வானவர்) ஒருவர் இருந்து கொண்டேயிருப்பார். ஷைத்தானும் உம்மை நெருங்கமாட்டான்!' என்றான். விடிந்ததும் நபி(ஸல்) அவர்கள் 'நேற்றிரவு உம்மால் பிடிக்கப்பட்டவன் என்ன செய்தான்? என்று கேட்டார்கள். 'இறைத்தூதர் அவர்களே! அல்லாஹ் எனக்குப் பயனளிக்கக் கூடிய சில வார்த்தைகளைக் கற்றுத் தருவதாக அவன் கூறினான்; அதனால் அவனைவிட்டு விட்டேன்!' என்றேன். 'அந்த வார்த்தைகள் என்ன? என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். 'நீர் படுக்கைக்குச் செல்லும்போது ஆயத்துல் குர்சியை ஆரம்பம் முதல் கடைசிவரை ஓதும்! அவ்வாறு ஓதினால், விடியும் வரை அல்லாஹ்வின் தரப்பிலிருந்து உம்மைப் பாதுகாக்கிற (வானவர்) ஒருவர் இருந்துகொண்டேயிருப்பார். ஷைத்தானும் உம்மை நெருங்கமாட்டான்! என்று என்னிடம் அவன் கூறினான்' எனத் தெரிவித்தேன். நபித்தோழர்கள் நன்மையான(தைக் கற்றுக் கொண்டு செயல் படுத்துவதில் அதிக ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள். அப்போது நபி(ஸல்) அவர்கள் 'அவன் பெரும் பொய்யனாக இருந்தாலும் அவன் உம்மிடம் உண்மையைத்தான் சொல்லியிருக்கிறான்! மூன்று இரவுகளாக நீர் யாரிடம் பேசி வருகிறீர் என்று உமக்குத் தெரியுமா? என்று கேட்டனர். 'தெரியாது' என்றேன். 'அவன்தான் ஷைத்தான்!' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

Volume :2 Book :40

**3275. அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.**

ரமளானுடைய ஸகாத் பொருளைப் பாதுகாத்திடும் பொறுப்பை இறைத்தூதர்(ஸல்) அவர்கள் என்னிடம் ஒப்படைத்தார்கள். அப்போது (இரவில்) ஒருவன் வந்து அந்த (ஸகாத்) உணவுப் பொருளை அள்ளலானான். உடனே, நான் அவனைப் பிடித்துக் கொண்டேன்; 'உன்னை அல்லாஹ்வின் தூதரிடம் இழுத்துச் சென்று முறையிடுவேன்' என்று கூறினேன். (அறிவிப்பாளர் முழு நிகழ்ச்சியையும் விபரமாகச் சொல்கிறார்..) இறுதியில் அவன், 'நீங்கள் படுக்கைக்குச் செல்லும்போது ஆயத்துல் குர்ஸீயை ஓதுங்கள். (அவ்வாறு ஓதினால்) உங்களுடன் பாதுகாவலர் (வானவர்) ஒருவர் இருந்து கொண்டேயிருப்பார். காலை நேரம் வரும் வரை ஷைத்தான் உங்களை நெருங்க மாட்டான்' என்று என்னிடம் சொன்னான். (இதை நபி(ஸல்) அவர்களிடம் சொன்னபோது,) 'அவன் பொய்யனாயிருந்தும், உங்களிடம் உண்மை பேசியுள்ளான். அவன் ஷைத்தான் தான்' என்று கூறினார்கள்.

Volume :3 Book :59

**5010. முஹம்மத் இப்னு சீரீன்(ரஹ்) அறிவித்தார்**

அபூ ஹுரைரா(ரலி), 'இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ரமளானின் (ஃபித்ரா) ஸகாத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்கள். அப்போது யாரோ ஒருவன் என்னிடம் வந்து அந்த (ஸகாத்) உணவுப் பொருளை அள்ளலானான். உடனே அவனை நான் பிடித்து, 'உன்னை இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் கொண்டு செல்லப் போகிறேன்' என்று சொன்னேன்' என்று கூறிவிட்டு, - அந்த நிகழ்ச்சியை முழுமையாகக் குறிப்பிட்டார்கள். - (இறுதியில், திருட வந்த) அவன், 'நீங்கள் படுக்கைக்குச் செல்லும்போது (ஆயத்துல் குர்ஸீ'யை ஓதுங்கள்! (அவ்வாறு செய்தால்,) விடியும்வரை அல்லாஹ்வின் தரப்பிலிருந்து (உங்களைப் பாதுகாக்கின்ற) காவலர் (வானவர்) ஒருவர் இருந்துகொண்டேயிருப்பார்; எந்த ஷைத்தானும் உங்களை நெருங்கமாட்டான்' என்று கூறினான். (இதை நான் நபி(ஸல்) அவர்களிடம் தெரிவித்தேன்). அப்போது நபியவர்கள், 'அவன் பெரும் பொய்யானாயிருப்பினும அவன் உம்மிடம் உண்மையாகத்தான் சொல்லியிருக்கிறான்; (உம்மிடம் வந்த) அவன்தான் ஷைத்தான்' என்று கூறினார்கள் என்றும் கூறினார்கள். 35 Volume :5 Book :66

மூலம்: **http://www.faithbrowser.com/ayat-al-kursi-by-courtesy-of-satan/**

------ꕥꕥꕥꕥꕥꕥ------

## 9. இஸ்லாமிய வணக்க வழிபாடுகள் எங்கேயிருந்து வந்தன?

ஒரு **நாளைக்கு ஐந்து வேளை தொழவேண்டும்** என்று ஆதாம், நூஹ், இப்ராஹிம், மூஸா, தாவூத், சுலைமான், யஹ்யா மற்றும் வேறு எந்த ஒரு தீர்க்கதரிசிக்கும் இறைவன் கட்டளை இடவில்லை.

இறைவனை தொழுதுக்கொள்ளும் போது, **உளூ (முஸ்லிம்கள் செய்வது போல) செய்யுங்கள்** என்று ஆதாம், நூஹ், இப்ராஹிம், மூஸா, தாவூத், சுலைமான், யஹ்யா மற்றும் வேறு எந்த ஒரு தீர்க்கதரிசிக்கும் இறைவன் கட்டளை இடவில்லை.

நீங்கள் **ஷஹாதா சொல்லுங்கள்** என்று ஆதாம், நூஹ், இப்ராஹிம், மூஸா, தாவூத், சுலைமான், யஹ்யா மற்றும் வேறு எந்த ஒரு தீர்க்கதரிசிக்கும் இறைவன் கட்டளை இடவில்லை.

**ரமளான் நோன்பு 30 நாட்கள் கட்டாயம் கடைபிடிக்கவேண்டும்** என்று ஆதாம், நூஹ், இப்ராஹிம், மூஸா, தாவூத், சுலைமான், யஹ்யா மற்றும் வேறு எந்த ஒரு தீர்க்கதரிசிக்கும் இறைவன் கட்டளை இடவில்லை.

**வெள்ளை ஆடையை அணிந்துக்கொண்டு ஒரு கருப்புக்கல்லை** இத்தனை முறை சுற்றிவரவேண்டும் என்று ஆதாம், நூஹ், இப்ராஹிம், மூஸா, தாவூத், சுலைமான், யஹ்யா மற்றும் வேறு எந்த ஒரு தீர்க்கதரிசிக்கும் இறைவன் கட்டளை இடவில்லை.

இப்படி பல இஸ்லாமிய வழிபாட்டு முறைகளை பட்டியல் இடமுடியும். ஒன்றை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு மிகப்பெரிய நபி என்று முஸ்லிம்கள் நம்பும், இயேசுக் கிறிஸ்து கூட, இவைகளில் எந்த ஒரு முறையை கூட செய்யவேண்டும் என்று கற்றுக் கொடுத்ததில்லை மற்றும் போதித்ததில்லை.

இப்படி முந்தைய தீர்க்கதரிசிகள் யாருமே செய்யாத இந்த வணக்க வழிபாடுகள் எங்கேயிருந்து வந்து, இஸ்லாமில் புகுந்து, சட்டமாக மாறிவிட்டன?

**பதில்: ஸாபியீன்கள் என்பவர்களிடமிருந்து தான் இவைகள் வந்து, இஸ்லாமின் சட்டமாக மாறிவிட்டன.**

**யார் இந்த ஸாபியீன்கள்(Sabians):**

ஸாபியீன்கள் என்பவர்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு காலகட்டத்திலிருந்து சந்திர கடவுளை வணங்கும் விக்கிர ஆராதனை செய்பவர்களாக இருந்தார்கள். இவர்களின் வழிப்பாட்டு முறையினால் முஹம்மது அதிகமாக ஈர்க்கப்பட்டார், மேலும் குர்ஆனிலும் இவர்கள் பற்றிய குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது குர்ஆன் 2:62ன் படி, இவர்களை அல்லாஹ் அங்கீகரித்துள்ளான்.

2:62. ஈமான் கொண்டவர்களாயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும், ஸாபியீன்களாயினும் நிச்சயமாக எவர்

அல்லாஹ்வின் மீதும், இறுதி நாள் மீதும் நம்பிக்கை கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ அவர்களின் (நற்) கூலி நிச்சயமாக அவர்களுடைய இறைவனிடம் இருக்கிறது; மேலும், அவர்களுக்கு யாதொரு பயமும் இல்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். (முஹம்மது ஜான் தமிழாக்கம்).

டாக்டர் ர..பர் அமரி(Dr Rafat Amari [1]) என்பவரின் "Occultism in the Family of Muhammad" என்ற ஆய்வுக் கட்டுரையின்படி, வராகா என்பவர் இந்த ஸாபியீன்களின் தலைவர் ஆவார். ஆம், இந்த வராகா (கதிஜாவின் உறவினர்) தான் முஹம்மது ஒரு நபி என்றுச் சொல்லி, அவரை சம்மதிக்கவைத்தவர். முஹம்மது ஆரம்பநாட்களில் யாரால் ஈர்க்கப்பட்டு இருந்தார் என்பதை இப்போது புரிந்திருக்கும்.

இப்னு அல்நதீம்(Ibn al-Nadim) தம்முடைய "அல் ..பஹ்ரிஸிட் - al-Fahrisit" என்ற புத்தகத்தில், மத்திய கிழக்கு நாடுகளில் பல மத பிரிவுகள் அக்காலத்தில் இருந்ததாக கூறுகிறார். அவரின் கூற்றின் படி, ஸாபியீன்கள் ஒரு குறிப்பிட்ட மாதத்தில் 30 நாட்கள் நோன்பு இருப்பார்கள். அவர்களது சந்திர கடவுளான "சின்"ஐ கனப்படுத்த இப்படி நோன்பு இருப்பார்கள்.

இந்த ஸாபியீன்கள் ..பித்ர்(Fitr) என்ற பண்டிகையை அனுசரிப்பார்கள் மேலும் ஹிலல் என்ற புது பிறை நாளையும் அனுசரிப்பார்கள். இதனை அவர்கள் மக்காவின் இறைவீட்டை (காபா) கனப்படுத்த செய்வார்கள்.

டாக்டர் ர..பர் அமரியின் படி, ஸாபியீன்கள் யெமன் நாட்டு திசையை நோக்கி (கிப்லா), தினமும் ஐந்து வேளை தொழுகை புரிகின்றனர். அக்காலத்தில் இதர மத பிரிவுகளில் காணப்பட்ட இப்படிப்பட்ட மத சடங்காச்சாரங்களை தான் முஹம்மது புதிதாக உருவாக்கிய மதத்தில் புகுத்திவிட்டார், இவைகள் அல்லாஹ்வினால் கட்டளையிடப்பட்டன என்று சொல்லிவிட்டார்.

அவ்வளவு ஏன், முஸ்லிம்கள் கூறும் விசுவாச அறிக்கையாகிய ஷஹதா கூட, ஸாபியீன்களிடமிருந்து எடுத்துக் கொண்டதுதான்.

இஸ்லாமிய அறிஞர் அப்த் அல் ரஹ்மான் இப்னு ஜைத் (Abd al-Rahman Ibn Zayd) கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இப்படி எழுதுகிறார்: பல தெய்வ பழிப்பாட்டு மக்கள், இறைத்தூதர் மற்றும் அவரது சஹாபாக்களைப் பார்த்து, "இவர்கள் ஸாபியீன்கள்" என்று கூறினார்கள், ஏனென்றால், ஈராக்கில் வாழ்ந்துக்கொண்டு இருந்த ஸாபியீன்கள் கூட "லா இலாஹா இலா அல்லாஹ்" என்றே கூறிக் கொண்டு இருந்தார்கள்.

இதர இஸ்லாமிய மத சட்டங்களான, உளூ செய்வது, மிஸ்வாக் பயன்படுத்துவது, கஜல் செய்து சுத்தம் செய்வது போன்றவை ஜொராஷ்ட்ரியம் (Zoroastrianism) என்ற மத பிரிவிலிருந்து வந்தவைகளாகும்.

இஸ்லாமின் முக்கிய வணக்க வழிபாடுகள் எங்கேயிருந்து வந்தன என்பது இப்போது புரிந்திருக்கும்.

**அடிக்குறிப்புக்கள்:**

[1] **https://www.goodreads.com/author/show/708864.Rafat_Amari**

மூலம்: **http://www.faithbrowser.com/where-do-islamic-rituals-come-from/**

------ꕥꕥꕥꕥꕥ------

## 10. குர்ஆன் 5:47ல் அல்லாஹ் சொன்னதை நான் பின்பற்ற முடியுமா?

முஸ்லிம்களே! குர்ஆனில் அல்லாஹ் சொன்னவைகளை நாம் நம்பவேண்டுமா? அல்லது நம்பவேண்டாமா? குர்ஆனில் சொல்லப்பட்டவைகளை நீங்கள் நம்புகிறீர்களா?

**குர்ஆனின் கீழ்கண்ட வசனத்தின் காரணமாகத் தான் நான் இக்கேள்வியை கேட்கிறேன், மூன்று குர்ஆன் தமிழாக்கங்களில் இவ்வசனத்தை படிப்போம்:**

> 5:47. (ஆதலால்) இன்ஜீலையுடையவர்கள், அதில் அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்பு வழங்கட்டும்; அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு யார் தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் தான் பாவிகளாவார்கள். (முஹம்மது ஜான் தமிழாக்கம்)
>
> 5:47. ஆகவே, இன்ஜீலை உடையவர்கள் அதில் அல்லாஹ் அறிவித்து இருக்கும் (கட்டளைகளின்)படியே தீர்ப்பளிக்கவும். எவர்கள், அல்லாஹ் அறிவித்த (கட்டளைகளின்)படியே தீர்ப்பளிக்க வில்லையோ அவர்கள் நிச்சயமாக பாவிகள்தான். (அப்துல் ஹமீது பாகவி தமிழாக்கம்)
>
> 5:47. மேலும், இன்ஜீல் அருளப்பட்டவர்கள், அதில் எந்தச் சட்டத்தை அல்லாஹ் இறக்கி வைத்தானோ அந்தச் சட்டத்திற்கேற்ப தீர்ப்பு வழங்கட்டும் (என்பதே நம் கட்டளையாக இருந்தது)! மேலும், எவர்கள் அல்லாஹ் இறக்கியருளிய சட்டத்திற்கேற்ப தீர்ப்பு வழங்கவில்லையோ, அவர்கள்தாம் ஃபாஸிக்கள் பாவிகளாவர்.(இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட் தமிழாக்கம்)

கிறிஸ்தவர்கள் இன்ஜிலில் சொல்லப்பட்டதின் படியே தீர்ப்பு அளிக்கவேண்டுமாம். குர்ஆனின் இந்த வசனத்துக்கு கீழ்படிய என்னை அனுமதிப்பீர்களா?

இல்லை.. இல்லை, இன்ஜில் தொலைந்துவிட்டது அல்லது மாற்றப்பட்டுவிட்டது என்று முஸ்லிம்கள் நம்மிடம் கூறுவார்கள்.

இன்ஜில் தொலைந்து போய் இருந்தால், ஏன் அல்லாஹ், அதனைக் கொண்டு தீர்ப்பு அளியுங்கள் என்று கட்டளையிடுகின்றான்?

**குர்ஆன் 5:47 என்ற வசனத்துக்கு நான் கீழ்படிவது எப்படி?**

இவ்வசனத்தை இறக்கும் போது, இன்ஜில் என்பது தொலைந்துவிட்டது அல்லது எதிர்காலத்தில் தொலையப்போகிறது என்ற விவரம் அல்லாஹ்விற்கு தெரியவில்லையா? சர்வ ஞானியான அல்லாஹ் இதனை அறிந்திருக்கவேண்டுமல்லவா?

அல்லாஹ் இவ்வசனத்தை இறக்கும் போது, சொல்லாத விஷயத்தை, முஸ்லிம்களே, நீங்கள் எப்படி அறிந்துக்கொண்டீர்கள்?

ஒருவேளை நீங்கள் (முஸ்லிம்கள்), குர்ஆன் இறக்கப்பட்ட பிற்பாடு தான் இன்ஜில் தொலைந்துவிட்டது என்று சொல்வீர்களானால், இன்னமும் நீங்கள் அல்லாஹ்வின் வார்த்தையை கனவீனப்படுத்துகிறீர்கள் என்று அர்த்தம். ஏனென்றால், உங்கள் கூற்றின்படி, அல்லாஹ்வின் 5:47 என்ற வசனமானது **இனி உபயோகத்தில் இல்லை, அது செல்லுபடியாகாது என்று சொல்லவருகிறீர்கள்.** அல்லாஹ்வின் வசனங்கள் ஒரு காலத்தில் (7ம் நூற்றாண்டில்) செல்லுபடியாகும், எதிர்காலத்தில் அவைகளினால் உபயோகமில்லை, அவைகள் செல்லுபடியாகாது என்று நீங்கள் சொல்கிறீர்கள், அப்படித்தானே!

**இதுமட்டுமல்ல, அல்லாஹ் தன்னுடைய இன்னொரு வசனத்தின் மூலமாக, தன்னைத் தானே தர்மசங்கடத்தில் தள்ளிக்கொள்கிறான்:**

**ஸூரா 5:68ஐ படிக்கவும்:**

> 5:68. “வேதமுடையவர்களே! நீங்கள் தவ்ராத்தையும், இன்ஜீலையும், இன்னும் உங்கள் இறைவனிடமிருந்து உங்கள் மீது இறக்கப்பட்டவற்றையும் நீங்கள் கடைப்பிடித்து நடக்கும் வரையிலும் நீங்கள் எதிலும் சேர்ந்தவர்களாக இல்லை” என்று கூறும்; மேலும் உம் இறைவனால் உம்மீது இறக்கப்பட்ட (வேதமான)து அவர்களில் பெரும்பாலோருக்கு குஃப்ரை (நிராகரித்தலை)யும் வரம்பு மீறுதலையும் நிச்சயமாக அதிகப்படுத்துகிறது; ஆகவே நிராகரித்துக் கொண்டிருக்கும் கூட்டத்தாருக்காக நீர் கவலைப்பட வேண்டாம். (முஹம்மது ஜான் தமிழாக்கம்)

முஸ்லிம்களே, ஸூரா 5:68 ஐ கிறிஸ்தவர்கள் பின்பற்ற அனுபதிப்பீர்களா?

குர்ஆன் 5:68ல் சொல்லப்பட்டதின்படி யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு வழிகாட்டுதல் கிடைக்காது ஏனென்றால் தோராவும், இன்ஜிலும் தொலைந்துவிட்டன என்று முஸ்லிம்கள் கூறுகிறார்கள்.

ஆனால், இவ்வசனத்தில் அல்லாஹ் தோராவும், இன்ஜிலும் தொலைந்துவிட்டன என்று சொல்லவில்லையே! முஸ்லிம்கள்

அல்லாஹ்வின் வார்த்தைகளுக்கு எதிராக பேசுகிறார்கள். நல்வழிகாட்டுதலை தோராவிலும், இன்ஜிலிலும் காணலாம் என்று அல்லாஹ் சொல்கிறான். அல்லாஹ் ஒருவகையாக சொல்கிறான், அதற்கு எதிராக முஸ்லிம்கள் சொல்வதினால். இப்போது நாம் என்ன செய்வது?

**குர்ஆன் சொல்வதை நாம் நம்பவேண்டுமா? இல்லையா?**

குர்ஆன் 5:47 செல்லுபடியாகாது என்று நாம் மேலே கண்டோம், இப்போது அந்த பட்டியலில் குர்ஆன் 5:68ம் வசனமும் சேர்ந்துவிட்டது. முஸ்லிம்களே, குர்ஆனிலிருந்து இன்னும் எத்தனை வசனங்களை நீங்கள் இரத்து செய்யப்போகிறீர்கள்? அல்லாஹ் சொல்லாத ஒன்றை சொன்னதாக நீங்கள் கற்பனை செய்துக்கொண்டு இன்னும் எத்தனை ஸூராக்களை பொய்யாக்கப்போகிறீர்கள்?

அல்லாஹ் தன் வேதத்தை நித்தியத்தில் எழுதியதாக முஸ்லிம்கள் நம்புகிறார்கள், ஆனால், அதனை பாதுகாக்க அல்லாஹ் தவறியிருக்கின்றான் என்று அவர்களே சாட்சியிடுகிறார்கள். முஸ்லிம்களிடமிருந்து இன்னும் எப்படிப்பட்ட அவமானங்களை அல்லாஹ் சகிக்கவேண்டி இருக்குமோ தெரியவில்லை!

**சிந்திக்க சில வரிகள்:**

முஹம்மது வாழ்ந்த காலத்தில் இருந்த கையெழுத்துப் பைபிள் பிரதிகள், கீழ்கண்ட இரண்டு பிரதிகளாக இப்போதும் நம்மிடம் உள்ளது.

1. கோடக்ஸ் வாடிகனஸ் - The Vatican (Codex Vaticanus)
2. கோடக்ஸ் சினாடிகனஸ் - British Museum (Codex Sinaticus)

இயேசு உலக மக்களுக்காக மரித்து, உயிர்த்தெழுந்த விவரங்கள், மேலும் பல சாட்சிகளுக்கு முன்பாக அவர் பரமேறிய விவரங்கள் அனைத்தும் இந்த பிரதிகளில் உள்ளது. புதிய ஏற்பாடு, இவ்விரு கிரேக்க கையெழுத்து பிரதிகளில் பத்திரமாக பாதுக்காக்கப்பட்டு இருக்கிறது. இவைகள் முஹம்மதுவிற்கு முன்பு 200 ஆண்டுகள் பழைய பிரதிகள் என்பது குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவ பைபிள் முஹம்மதுவிற்கு முன்பு 575 ஆண்டுகள் முந்தையதாகும். அதே போல, யூதர்களின் தோரா (பைபிளின் முதல் ஐந்து நூல்கள்), முஹம்மதுவிற்கு முன்பு 1000 லிருந்து 3000 ஆண்டுகள் முந்தையதாகும். இவைகளில் வெளிச்சமும், நேரான வழிகாட்டுதலும் இருக்கிறது, எனவே முஸ்லிம்கள் இவைகளை படிக்கவேண்டும் என்று முஹம்மது குர்ஆனில் கட்டளையிட்டுள்ளார். இவைகள் மாற்றப்பட்டுவிட்டன என்று இஸ்லாம் சொல்லுமானால், முஹம்மது ஒரு பொய்யர் என்று இஸ்லாம் அவர் மீது முத்திரை குத்துகிறது என்று அர்த்தம், ஏனென்றால் அவர் தான் தோரா, இன்ஜில் மற்றும் ஜபூரை படிக்கச் சொன்னவர் - Steve Perez

மூலம்: http://www.faithbrowser.com/can-i-follow-what-allah-said-in-sura-547/

------ௐௐௐௐ------

## 11. முஸ்லிம் நண்பரே! அந்த புத்தகங்கள் எங்கே?

**முஸ்லிம்:** உங்கள் பைபிளில், எங்கள் இறைத்தூதர் முஹம்மது பற்றி பல வசனங்கள் உள்ளன என்று உங்களுக்குத் தெரியுமா?

**கிறிஸ்தவர்**: பைபிள் கறைபடுத்தப்பட்டுவிட்டது என்று முஸ்லிம்களாகிய நீங்கள் சொல்கிறீர்கள் அல்லவா?

**முஸ்லிம்**: ஆமாம், பைபிள் மாற்றப்பட்டுவிட்டது தான்..

**கிறிஸ்தவர்**: அப்படியானால், கறைபடுத்தப்பட்ட புத்தகத்தில் உங்கள் இறைத்தூதர் முஹம்மது பற்றிய வசனங்கள் உள்ளன என்று எப்படி நீங்கள் சொல்கிறீர்கள்? அல்லாஹ் தன் தூதர் முஹம்மதுவின் பெயர் உள்ள புத்தகத்தை பாதுகாத்து இருந்திருப்பான்? என்பதை சிந்திக்கமாட்டீர்களா?

**முஸ்லிம்**: பைபிள் முழுவதும் கறைபடுத்தப்படவில்லை, சில விவரங்கள் மட்டுமே கறைபடுத்தப்பட்டது.

**கிறிஸ்தவர்**: அப்படியானால், அந்த சில விவரங்களை பாதுகாக்க அல்லாஹ்வினால் முடியவில்லை அப்படித்தானே? தன் வார்த்தைகளை தானே காப்பாற்ற முடியாத நிலையில் அல்லாஹ் இருக்கிறான் என்றுச் சொல்கிறீர்கள்!

**முஸ்லிம்**: அது அல்லாஹ்வின் தவறல்ல, அது மனிதனின் தவறு.

**கிறிஸ்தவர்**: ஆமாம், இதைத் தான் நானும் சொல்கிறேன். அல்லாஹ் தான் உண்டாக்கிய பலவீனமான படைப்பான மனிதன் தன் வார்த்தைகளை மாற்றும் போது, அவனை தடுக்க முடியாத அளவிற்கு அல்லாஹ் இருந்துள்ளான்..

**முஸ்லிம்**: இல்லை, இல்லை. சில வசனங்கள் மாற்றப்பட்டன, மீதமுள்ள விவரங்கள் அனைத்தும் மாற்றப்படாமல் இருக்கின்றன.

**கிறிஸ்தவர்**: எந்த வசனங்கள் மாற்றப்பட்டன? எவைகள் மாற்றப்படவில்லை என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?

**முஸ்லிம்**: குர்ஆன் தான் சொல்கிறது. முந்தைய வேதங்கள் மாற்றப்பட்டன என்பதால் தான் கடைசியாக குர்ஆன் இறங்கியது.

**கிறிஸ்தவர்**: ஓ அப்படியா! ஆக, குர்ஆன் வருவதற்கு முன்பே பைபிள் மாற்றப்பட்டது என்பதால் தான் குர்ஆன் வந்தது என்றுச் சொல்கிறீர்கள்? அப்படித்தானே!

**முஸ்லிம்**: ஆமாம்.

**கிறிஸ்தவர்**: அப்படியானால், என் கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள்:

1) முந்தைய வேதங்கள் பற்றி ஏன் குர்ஆன் புகழ்ந்து பேசுகின்றது?

2) கிறிஸ்தவர்களின் வேதம் மாற்றப்பட்டு இருந்திருந்தால், ஏன் குர்ஆனில் அல்லாஹ், கிறிஸ்தவர்களைப் பார்த்து, உங்களுக்கு நான் இறக்கிய இன்ஜிலின் படி தீர்ப்பு வழங்குங்கள் என்றுச்சொல்கிறான்?

3) கிறிஸ்தவர்களைப் பார்த்து, ஏன் அல்லாஹ் 'வேதமுடையவர்கள்' என்று அழைக்கின்றான், அந்த வேதம் தான் மாற்றப்பட்டுவிட்டதே!

**முஸ்லிம்**: உண்மையில் குர்ஆன் தோரா, ஜபூர் மற்றும் இன்ஜில் பற்றி தான் பேசுகின்றது, பைபிளைப் பற்றி பேசவில்லை.

**கிறிஸ்தவர்**: அப்படியானால், ஏன் நீங்கள் முஹம்மதுவின் பெயரை பைபிளில் தேடிக்கொண்டு இருக்கிறீர்கள்?

**முஸ்லிம்**: . . .

**கிறிஸ்தவர்**: தோரா, ஜபூர் மற்றும் இன்ஜில் புத்தகங்கள் இப்போது எங்கே உள்ளன?

**முஸ்லிம்**: இந்த புத்தகங்கள் தொலைந்துவிட்டன.

**கிறிஸ்தவர்**: இந்த மூன்று புத்தகங்களும் தொலைந்துவிட்டன என்று அல்லாஹ், குர்ஆனில் எங்கேயாவது சொல்லியுள்ளானா? ஏதாவது வசன எண்ணை தரமுடியுமா?

**முஸ்லிம்**: ம்ம்ம். . .இல்லை வசன எண்களை கொடுக்கமுடியாது. குர்ஆன் இறங்கிய நேரத்தில், அப்புத்தகங்கள் தொலைக்கப்படாமல் இருந்தன.

**கிறிஸ்தவர்**: ஓ.. அப்படியானால், முஹம்மதுவின் வாழ்நாட்களில் இப்புத்தகங்கள் முழுவதுமாக இருந்தன, ஆனால், குர்ஆனுக்கு பிறகு அவைகள் தொலைந்துவிட்டன என்றுச் சொல்கிறீர்கள், சரி தானே!

**முஸ்லிம்**: ஆமாம்.

**கிறிஸ்தவர்**: ஒரு சின்ன சந்தேகம். இதற்கு முன்பு தானே நீங்கள் சொன்னீர்கள், "முந்தைய வேதங்கள் மாற்றப்பட்டுவிட்டன என்பதால் தான் குர்ஆனை அல்லாஹ் கடைசி வேதமாக இறக்கினான் என்று"? இப்பொழுது மாற்றி தலைகீழாகச் சொல்கிறீர்கள்?

**முஸ்லிம்**: பைபிளில் மாற்றப்பட்ட தோராவும், ஜபூரும், இன்ஜிலும் உள்ளன.

**கிறிஸ்தவர்**: குர்ஆனுக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, பைபிள் முழுமை அடைந்துவிட்டது, மற்றும் உலகின் பல நாடுகளுக்கும் கண்டங்களுக்கும் பரவி விட்டுஇருந்தது. உங்களின் கூற்றுப்படி, பைபிளில் காணப்படும் தோரா, ஜபூர் மற்றும் இன்ஜில் மாற்றம் அடைந்துவிட்டது என்றுச் சொன்னால், ஆரம்ப காலத்தில் இருந்த கைப்பிரதி தோரா, ஜபூர் மற்றும் இன்ஜிலோடு

நாம் ஒப்பிட்டுப்பார்த்து சரி பார்க்கலாம். குர்ஆனுக்கு பிறகு பைபிள் மாற்றப்பட்டுவிட்டது என்ற உங்கள் குற்றச்சாட்டுக்கு பதில், குர்ஆனுக்கு முன்பு இருந்த பைபிளோடு ஒப்பிட்டுப்பார்ப்பது தான். இன்று நம்மிடம் இவை இரண்டும் உள்ளன, முழு உலகமும் இதனை ஒப்பிட்டுப்பார்த்து தெரிந்துக்கொள்ளலாம். இதுவரை எந்த ஒரு முஸ்லிமும் இதனை செய்யவில்லை, ஆனால், முஸ்லிமல்லாத இதர அறிஞர்கள் அனைவரும் செய்தாகிவிட்டது.

குர்ஆனுக்கு முன்பு, குர்ஆனுக்கு பின்பு உள்ள பைபிளை ஒப்பிட்டுப்பார்த்து, முஹம்மதுவின் பெயர் இல்லாததைப் பார்த்து, இஸ்லாமிய கோட்பாடுகள் இல்லாததைப் பார்த்து அறிஞர்கள் அமைதியாகிவிட்டனர். ஏழாம் நூற்றாண்டுக்குப் பிறகு, பல நாடுகள் மற்றும் கண்டங்களுக்கு நெடிய பணம் செய்து, அனைத்து பைபிள்களையும் சேகரித்து வைத்துக்கொண்டு, எல்லாவற்றிலும் மாற்றம் செய்வது என்பது கற்பனையில் மட்டுமே நடக்கக்கூடிய ஒன்றாகும். இப்படிப்பட்ட ஒரு பெரிய எழுத்து ஊழல் நடந்ததாக சரித்திரம் சாட்சியிடவில்லை, இது சாத்தியமும் இல்லை. குர்ஆன் ஏழாம் நூற்றாண்டில் பிறந்த போது, முந்தைய வேதங்களில் இப்படிப்பட்ட ஒரு நிகழ்வு நடந்ததாக அது சொல்லவில்லை, மேலும் தனக்கு பின்பாக நடக்கும் என்றும் குர்ஆன் சொல்லவில்லை. மாறாக, முந்தைய வேதங்களை உறுதிப்படுத்தவே தாம் வந்ததாக கூறுகிறது, முந்தைய வேதங்களை புகழ்ந்து பேசுகின்றது.

முஸ்லிம்: பவுல் என்பவர் தான் பைபிளை மாற்றிவிட்டார்.

கிறிஸ்தவர்: இந்த வாதம் அறிவுடையோர் சொல்லும் வாதமல்ல.. முஹம்மதுவிற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் பவுலடியார். பவுலடியார் என்பவர் தன் வேதங்களை இவ்விதமாக மாற்றிவிட்டார் என்று அல்லாஹ் முஹம்மதுவிற்கு குர்ஆனை இறக்கும் போது சொன்னதுண்டா? அபூ லஹப் செய்த செயலுக்கான தண்டனையாக நரகத்தில் அவரை தள்ளுவேன் என்று சொன்ன அல்லாஹ், பவுலடியார் பற்றி ஏதாவது சொல்லியுள்ளானா? அவருக்கு ஏதாவது தண்டனை கொடுப்பேன் என்று பெயர் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளானா அல்லாஹ்? முஸ்லிம்களின் படி, பவுலடியாரின் செயல்கள் அபூ லஹப்பின் செயலை விட பெரியது என்பதால், அல்லாஹ் ஏதாவது குர்ஆனில் சொல்லியிருக்கக்கூடும் என்பதால் தான் இந்த கேள்வியைக் கேட்டேன்!

ஒரு பலவீனமான சாதாரண மனிதனால், சர்வ வல்லவனாகிய அல்லாஹ்வின் வார்த்தைகளை அழிக்கமுடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? உங்களை பொறுத்தமட்டில், தன் வார்த்தைகளை காத்துக்கொள்ள திராணியில்லாத, வல்லமையற்ற ஒரு பலவீனமான இறைவனாக அல்லாஹ் காணப்படுகின்றானா?

இதுமட்டுமல்ல, ஒரு முக்கியமான விவரத்தை நீங்கள் மறைமுகமாகச் சொல்லவருகிறீர்கள். அதாவது, பலவீனமான மனிதன் மாற்றிய புத்தகங்கள் 2000 ஆண்டுகளாக மாற்றமடையாமல் இருக்கின்றன, ஆனால்,

அல்லாஹ்வின் புத்தகங்கள் தொலைந்துவிட்டன, அல்லது மற்றப்பட்டுவிட்டன என்று முஸ்லிம்களாகிய நீங்கள் கூறுகின்றீர்கள்.

அல்லாஹ்வின் புத்தகங்கள் எங்கே!

மூலம்: http://www.faithbrowser.com/where-are-the-books/

------ꙮꙮꙮꙮꙮꙮꙮꙮ------

## 12. முதலில் வந்தது எது? பைபிளா அல்லது குர்ஆனா?

ஒருவேளை, நான் நாளை காலை எழுந்தவுடன்:

> "எனக்கு ஒரு தேவதூதன் காணப்பட்டான், ஒரு புத்தகத்தை எழுதும்படி சொன்னான், அந்த புத்தகத்தின் வசனங்களை தானே இறைவனிடமிருந்து கொண்டு வருவதாகச் சொன்னான். அது பரிசுத்த புத்தகமாகும். அது முழு உலகத்திற்கும் இறைவனால் அனுப்பப்பட்ட கடைசி வேதம் ஆகும்"

என்று அந்த தேவதூதன் சொன்னான் என்று நான் ஒரு அறிக்கையை வெளியிட்டால் எப்படி இருக்கும்? நான் சொல்வதை நீங்கள் நம்புவீர்களா?

நீங்கள் என்னை பார்த்து சிரிப்பீர்கள்! நான் ஒரு மனநிலை பாதிக்கப்பட்டவன் என்று பட்டம் கட்டி விடுவீர்கள். ஒருவேளை, நான் பிடிவாதமாக திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருந்தால், நான் சொல்வதை நம்பும்படியாக ஏதாவது சான்றுகளை காட்டும்படி என்னிடம் கேட்பீர்கள். அதாவது "**நான் ஒரு தேவதூதனை சந்தித்தேன்**" என்பதற்கு சான்றுகளை கேட்பீர்கள்.

"இப்படி சான்றுகளை கேட்கக் கூடாது, நான் ஒரு தேவதூதனை சந்தித்தேன் என்று சொல்லும்போது, அதனை நீங்கள் நம்பவேண்டும்" என்று நான் சொன்னால், என்னை ஒரு பைத்தியக்காரன் என்று முடிவு செய்துவிடுவீர்கள் அல்லவா?

ஒரு பேச்சுக்காக நான் சொல்வதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். உடனே நீங்கள் நான் எழுதிய புத்தகத்தைப் படித்து பார்ப்பீர்கள். அதனை படிக்கும்போது முஸ்லிம்களின் வேதமாகிய குர்ஆனுக்கு முரண்படும் அனேக விவரங்கள் அதில் சுட்டிக்காட்டுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம்.

"என்னுடைய இந்த புத்தகத்தை மட்டுமே நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுதான் நேர் வழி, இது தான் வேதம், உங்களின் முந்தைய வேதமாகிய குர்ஆனை நீங்கள் புறக்கணிக்க வேண்டும். முஸ்லிம்களுக்கும் மற்றுமுள்ள அனைத்து மக்களுக்கும் இது தான் வேதம்" என்று உங்களிடம் நான் சொன்னால், நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? நிச்சயமாக ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள் அல்லவா? ஏனென்றால் என்னுடைய புத்தகத்தில் சொன்ன விவரங்களுக்கு சான்றுகளை நான் காட்டினால் தான் என் கருத்துக்கள் உண்மையானவைகளாக கருதப்படும்.

உடனே நான், என் புத்தகத்தில் சொன்னவைகள் தான் உண்மையானவைகள். என் புத்தகத்தில் சொல்லப்பட்ட விவரங்கள் குர்ஆனுடன் முரண்படுகிறது என்றால், குர்ஆன்

மாற்றப்பட்டுவிட்டது என்று பொருள், அதை முஸ்லிம்கள் மாற்றிவிட்டார்கள் அதனால் தான் அது என் புத்தகத்திற்கு மாறுபடுகிறது என்று நான் சொன்னால், இதை ஏற்றுக் கொள்வீர்களா நீங்கள்? நிச்சயமாக ஏற்கமாட்டீர்கள்! மேலும் இது ஒரு மடமையான கருத்து என்பீர்கள் அல்லவா! அறிவுடையோர் யாரும் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று சொல்வீர்கள் தானே!

அதாவது, நான் ஒரு புதிய வேதத்தைக் கொண்டு வந்தால், குர்ஆனுக்கு முரணாக சொல்லப்பட்ட ஒவ்வொரு கருத்துக்கும் சரியான சான்றுகளை நான் தயாராக வைத்துக் கொண்டிருக்க வேண்டுமே தவிர, குர்ஆனை நான் குற்றப்படுத்தக்கூடாது. இதனை யாருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நான் கொண்டு வந்த புத்தகம் உண்மையானது என்பதை நிரூபிப்பதற்கு இதற்கு முன்பாக வந்த குர்ஆன் மாற்றப்பட்டது என்று சொல்வது முட்டாள்தனமாகும்.

கடைசியாக வந்த என்னுடைய புத்தகத்தின் கருத்துக்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு, குர்ஆனை நியாயம் தீர்க்கக் கூடாது. இதற்கு பதிலாக, என்னுடைய புதிய புத்தகத்தை, இதற்கு முன்பு வந்த குர்ஆனின் கருத்துக்களின் அடிப்படையில் தான் நியாயம் தீர்க்க வேண்டும். ஒருவேளை, குர்ஆனுக்கு பின்பு வந்த என்னுடைய புத்தகமானது, குர்ஆனுக்கு முரண்படுமானால், என்னுடைய புத்தகம்தான் தவறானதாக கருதப்பட வேண்டுமே தவிர, குர்ஆன் தவறானது என்று சொல்லக்கூடாது. ஏனென்றால் முதலாவது குர்ஆன் வந்தது அதன் பிறகுதான் நான் ஒரு புதிய புத்தகத்தை அறிமுகம் செய்தேன். ஆகையால் குர்ஆனை அடிப்படையாகக் கொள்ள வேண்டும், என்னுடைய புது வேதத்தை குர்ஆனைக் கொண்டு சரிபார்க்க வேண்டும்.

### சான்றுகளை யார் கொண்டு வர வேண்டும்? (The Burden Of Proof)

கிறிஸ்துவுக்குப் பின் ஏழாம் நூற்றாண்டில், குர்ஆன் எழுதப்பட்டது. மக்கா என்னும் பாலைவன நகரில் ஒரு மனிதர், தன்னை ஒரு தேவதூதன் சந்தித்தான் குர்ஆன் வசனங்களை இறக்கினான் என்று சொன்னார். இப்படி நடக்கவில்லை என்று நான் சொல்ல வரவில்லை, ஆனால், என்னுடைய கேள்வி என்னவென்றால் "ஒரு தூதன் முஹம்மதுவை சந்தித்தான், என்பதற்கு சான்று என்ன? இதனை யார் சரி பார்ப்பது? முஹம்மதுவை ஒரு தூதன் சந்தித்தான் என்பதை நாம் எப்படி அறிந்து கொள்வது"? ஒரு தூதன் முஹம்மதுவை சந்தித்தான் என்பதற்கு முஹம்மதுவை தவிர வேறு யாருமே கண்கண்ட சாட்சி இல்லையே! உண்மையாகவே, அப்படிப்பட்ட ஒரு சந்திப்பு நடந்ததா? என்பதற்கு எந்த ஒரு சான்றும் இல்லை. இது மட்டுமல்ல, தன்னுடைய வாதத்திற்கு ஆதாரமாக முஹம்மது எந்த ஒரு அற்புதத்தையும் செய்து காட்டவில்லை. உதாரணத்திற்கு முந்தைய தீர்க்கதரிசிகளாகிய மோசேயும், எலியாவும் இன்னும் இதர தீர்க்கதரிசிகளும் செய்து காட்டியது போல அற்புதங்களை முஹம்மது செய்து காட்டவில்லை.

முஹம்மது எந்த ஒரு அற்புதத்தையும் செய்து காட்டாமலேயே, குர்ஆன் என்ற ஒரு புத்தகத்தை இறைவேதம் என்று சொல்லி அறிமுகம் செய்தார். அந்த குர்ஆனில் முந்தைய வேதங்களாகிய தோரா ஜபூர் மற்றும் இன்ஜிலுக்கு எதிரான கருத்துக்கள் உள்ளன. அதாவது பைபிளுக்கு முரணான அநேக கருத்துக்கள் குர்ஆனில் உள்ளன. பைபிள் எழுதப்பட்ட காலக்கட்டம், கி. மு. 1400 லிருந்து கி.பி. 95 வரைக்கும் ஆகும். மேலும் முஹம்மதுவுக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பே பரிசுத்த பைபிள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அக்காலத்தில் இருந்த அநேக நாடுகளில், பரவலாக பயன்படுத்தப்பட்டு கொண்டு இருந்தது. இருந்தபோதிலும் ஏழாம் நூற்றாண்டில் வந்த குர்ஆனை வைத்துக் கொண்டு, முஸ்லிம்கள் பைபிள் மாற்றப்பட்டு விட்டது என்று குற்றம்சாட்டி கொண்டிருக்கிறார்கள். இதற்கு பதிலாக முஸ்லிம்கள், குர்ஆன் சொல்வது தான் உண்மை என்று சான்றுகளை சேகரித்து கொடுத்திருக்கலாம். இது மட்டுமல்ல, முஹம்மது கூட முந்தைய வேதங்கள் திருத்தப்பட்டுவிட்டன என்று சொல்லவில்லை, முந்தைய வேதங்களில் உள்ளவைகள் தொலைந்து விட்டன என்றும் அவர் சொல்லவில்லை, அதற்கு பதிலாக குர்ஆனில் பல இடங்களில் முந்தைய வேதங்களை புகழ்ந்து தான் வசனங்கள் காணப்படுகின்றன. முந்தைய வேதங்கள் நேர்வழி என்றும்,

வெளிச்சம் என்றும் இறைவனின் சத்தியம் என்றும் குர்-ஆன் சொல்கிறது.

இதுவரை கண்ட விவரங்களின் படி, குர்ஆனைக் கொண்டு நீங்கள் பைபிளை சரி பார்க்க முடியாது அல்லது நியாயம் தீர்க்க முடியாது. அதற்கு பதிலாக, பைபிளைக் கொண்டு தான் நீங்கள் குர்ஆனின் நம்பகத்தன்மையையும் தெய்வீகத்தன்மையையும் சோதித்துப் பார்க்க வேண்டும். குர்ஆனின் நம்பகத்தன்மையை சரி பார்க்க, பைபிள் தான் அடிப்படையாக இருக்க வேண்டும்.

கிறிஸ்துவத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு பிறகு இஸ்லாம் வந்தது. ஆகையால் சான்றுகளைக் கொண்டு வர வேண்டியது இஸ்லாமின் மீது விழுந்த கடமையாகும், முஸ்லிம்களின் மீது விழுந்த கடமையாகும். அது கிறிஸ்தவர்களின் மீது விழுந்த கடமை அல்ல. பைபிள் தான் குர்ஆனை பரிசோதிக்கிறது. குர்ஆன் உண்மையான வேதமா இல்லையா என்பதை பைபிளின் போதனைகள், கோட்பாடுகள் தான் முடிவு செய்யும். பைபிளும் மற்றும் குர்ஆனும் ஒன்றையொன்று முரண்படுமானால், முந்தைய வேதமாகிய பைபிளுக்கு தான் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். கடைசியாக குர்ஆன் வந்த படியினாலே, தன்னுடைய கருத்துக்களுக்கு சரியான ஆதாரங்களையும் சான்றுகளையும் கொண்டு வந்து தன்னுடைய நம்பகத்தன்மையை நிரூபித்துக்கொள்ளவேண்டியது குர்ஆனின் கடமையாகும். அப்படி குர்ஆன் கொண்டுவரவில்லையென்றால், அது ஒரு பொய்யான புத்தகம் என்று முடிவு செய்யப்படவேண்டும்.

மூலம்: **http://www.faithbrowser.com/bible-or-quran/**

------ஐஐஐஐஐ------

## 13. யார் முதலாவது வந்தார்கள்? ஜோசப் ஸ்மித்தா அல்லது முஹம்மதுவா?

19வது நூற்றாண்டில், ஜோசப் ஸ்மித் (Joseph Smith) என்ற பெயருடைய ஒரு நபர் ஒரு தரிசனத்தை காண்கிறார். ஒரு தேவதூதன் அவரை சந்தித்து, ஒரு புதிய மதத்தை உருவாக்கும் படி சொன்னான். ஏன் புதிய மதம்? ஏனென்றால் முந்தைய மதங்கள் அனைத்தும் கெடுக்கப்பட்டுவிட்டன, எனவே உலகத்துக்கு ஒரு புதிய மதம் தேவைப்படுகிறது என்று அந்த தூதன் கட்டளையிட்டான், என்று ஜோசப் ஸ்மித் கூறினார்.

இதோடு மட்டுமில்லாமல், அவருக்கு ஒரு புதிய புத்தகமும் அதாவது வேதமும் கொடுக்கப்பட்டது, அதன் பெயர் "Book of Mormon (மர்மொன் புத்தகம்)" என்பதாகும். இந்தப் புத்தகம், முந்தைய அனைத்து வேதங்களையும் தள்ளுபடி செய்கிறது என்று கூறினார்.

இந்த ஜோசப் ஸ்மித் என்பவர், மோசே மற்றும் எலியா போன்ற தீர்க்கதரிசிகளின் வழியாக வந்த கடைசி தீர்க்கதரிசி என்று தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.

இவர் உருவாக்கிய புதிய மதமாகிய "மர்மொன்" என்ற மதம், அமெரிக்காவில் அதிவேகமாக வளர்ந்து வரும் ஒரு மதமாக உள்ளது. 2014 ஆம் ஆண்டின் கணக்குப்படி, 1,60,00,000 மக்கள் இதனைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். 2080ல் இவர்களின் வளர்ச்சி 2,50, 00,000 ஆக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

ஆனால், ஒரு நிமிடம் நில்லுங்கள். உலகத்தில் உள்ள அனைத்து முஸ்லிம்களும் ஜோசப் ஸ்மித்தின் மதத்தை கண்டு சிரிக்கிறார்கள். ஏன்?

ஏனென்றால், ஜோசப் ஸ்மித் என்பவருக்கு முன்பாகவே, இஸ்லாம் உலகில்

வந்துவிட்டது, மேலும் இவர் செய்த அதே உரிமை பாராட்டலை, முஹம்மது ஏற்கனவே செய்துவிட்டார். முஹம்மதுவிற்கு பின்பு ஜோசப் ஸ்மித் என்பவர் வந்ததால், இவர் ஒரு ஏமாற்றுக்காரர் என்றும், பொய்யர் என்றும் முஸ்லிம்கள் முத்திரை குத்துகிறார்கள்.

முஸ்லிம்களின் நம்பிக்கையின்படி, முஹம்மது தீர்க்கதரிசிகளுக்கு முத்திரையாக இருக்கிறார், அதாவது அவர்தான் உலகத்தின் கடைசி தீர்க்கதரிசியாக இருக்கிறார். அதேபோல, குர்ஆன் தான் உலகத்தின் கடைசி வேதமாக இருக்கிறது, ஏனென்றால் முந்தைய வேதங்கள் அனைத்தும் கெடுக்கப்பட்டுவிட்டன. எனவே கடைசியாக குர்ஆன் வெளிப்பட்டது. ஆகையால் இஸ்லாம் தான் உண்மையான மதம் என்று முஸ்லிம்கள் நம்புகிறார்கள். ஒரு முக்கியமான விஷயம், மர்மொன் என்ற மதம் அமெரிக்காவிலே அதிவேகமாக வளருகிறது என்பதினால் அது உண்மையான மதமாக இருக்க முடியாது என முஸ்லிம்கள் கூறுகிறார்கள். ஆகையால் ஜோசப் ஸ்மித் என்பவர் ஒரு பொய்யர் என்று முஸ்லிம்கள் அவரை புறக்கணிக்கிறார்கள்.

சரி, இருக்கட்டும் இதற்கு என்ன பிரச்சனை இப்போது என்று கேட்கத்தோன்றுகிறதா? இன்னும் ஒரே நிமிடம், பொறுமையாக இருங்கள் விடை கிடைத்துவிடும்.

இயேசு கிறிஸ்து, ஒரு உவமையின் மூலம் "**தாம் கடைசியாக வந்தவர்**" என்று சொன்னார்.

- "கடைசியிலே அவன் (தேவன்): என் குமாரனுக்கு அஞ்சுவார்கள் என்று சொல்லி, தன் குமாரனை (இயேசுவை) அவர்களிடத்தில் அனுப்பினான்." (மத்தேயு 21:37)* அடைப்பிற்குள் இருப்பவைகளை நான் எழுதினேன்

- அவரை(இயேசுவை) பிதாவாகிய தேவன் **முத்திரித்திருக்கிறார்** (யோவான் 6:27)

- "நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகள் யாவரும் யோவான்வரைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு." (மத்தேயு 11:13)

- தேவனுடைய வருகைக்கு வழியை ஆயத்தம் செய்யும்படி யோவான் ஸ்நானகன் அனுப்பப்பட்டான் (மல்கியா 3:1 & மாற்கு 1:12).

- "உலக மக்களுக்கு தேவனுடைய இராஜ்ஜியத்தின் நற்செய்தியை கொடுக்க இயேசு உலகில் வந்தார் "(யோவான் 5:39-40, 10:10).

உங்களுக்கு (இயேசுவிற்கு) பிறகு யாராவது வரவேண்டியுள்ளதா? என்ற கேள்வி இயேசுவிடம் கேட்கப்பட்டது.

- "வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான்." (மத்தேயு 11:3)

இந்த கேள்விக்கு இயேசு பதில் அளிக்கும் போது, தாம் செய்துக்கொண்டு இருக்கும் அற்புதங்கள், மற்றும் அடையாளங்களை பட்டியலிடுகிறார், இதன் மூலமாக, தனக்கு பிறகு இன்னொருவர் வரவேண்டிய அவசியமில்லை என்று இயேசு சொல்கிறார்.

- இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள்; தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார். (மத்தேயு 11:4-6)

பைபிள் மாற்றப்பட்டுவிட்டது என்று முஸ்லிம்கள் சொல்கிறார்களே, இது பற்றி என்ன? அதே போல, ஜோசப் ஸ்மித் குர்ஆனும் முந்தைய வேதங்களும் மாற்றப்பட்டுவிட்டது என்கிறாரே இது பற்றி என்ன? ஜோசப் ஸ்மித்தின் இந்த வாதத்தை முஸ்லிம்களிடம் கூறினால், "இல்லை, இல்லை, குர்ஆன் மாற்றப்படவில்லை, ஏனென்றால், குர்ஆனை மாற்றமுடியாது என்று குர்ஆனே சொல்கிறது" என்ற பதிலைச் சொல்வார்கள்.

- “. . .அவனுடைய வார்த்தைகளை மாற்றுவோர் எவரும் இல்லை . . .” (குர்ஆன் 6:115)

ஓ.. அப்படியானால், பைபிளும் இதே போலச் சொல்கிறதே! இதற்கு முஸ்லிம்களின் பதில் என்ன?

- . . . நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் என்பதையே சொல்லென்று உரைத்தது. (ஏசாயா 40:8)

**இயேசு தம்முடைய வார்த்தைகள் பற்றி கூறும் போது:**

- வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை. (மாற்கு 13:31)

**கிறிஸ்தவம் தான் உண்மையான மார்க்கம் என்று பைபிள் கூறுகின்றதா?**

மத்தேயு (13:24-29 & 36-43) வசனங்களின் படி, இயேசு ஒரு உவமையின் மூலமாக, இராஜ்ஜியத்தின் மக்களாகிய உண்மை கிறிஸ்தவர்கள், நல்ல விதைகளாக அவரால் உலகில் விதைக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறுகிறார்.

அதன் பிறகு, சாத்தான் வந்து கெட்ட விதைகளை நல்ல விதைகளுக்கு மத்தியில் விதைத்தான். (அவைகள் தான் மர்மொன் மற்றும் இஸ்லாம் போன்ற மதங்களாகிய களைகள் என்று இயேசு கூறுகிறார்). இதில் என்ன ஆச்சரியம் என்றால், இந்த களைகள் மிகவும் வேகமாக வளருகின்றது என்று இயேசு சொல்கிறார். (அமெரிக்காவில் மர்மொன் வேகமாக வளரும் மதம், இஸ்லாம் உலகில் வேகமாக வளரும் மதமென்று சொல்கிறார்கள்).

கடைசியில், இயேசு திரும்ப வரும் போது, இந்த களைகள் பிடுங்கப்பட்டு அக்கினியில் போடப்படும் என்று இயேசு தன் உவமையை முடித்தார்.

- மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே

சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன். (மத்தேயு 13:41-43)

கிறிஸ்தவத்திற்கு பிறகு வரும் புத்தகங்கள் (குர்ஆன் & மர்மொன் புத்தகம்), தீர்க்கதரிசிகள் (முஹம்மது & ஜோசப் ஸ்மித்), மதங்களைப் பற்றி பைபிள் என்ன சொல்கிறது என்பதை கவனித்தீர்களா?

- வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். (கலாத்தியர் 1: 7,8,9)

அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவான் 14:6)

மூலம: **http://www.faithbrowser.com/whos-first/**

------ஸ்ஸஸ்ஸஸ்ஸஸ்ஸ------

## 14. அல்லாஹ் மூன்று நபர்களா? (ARE THERE THREE ALLAHS?)

**(ARE THERE THREE ALLAHS?)**

அல்லாஹ், கலிமதுல்லாஹ் (அல்லாஹ்வின் வார்த்தை) மற்றும் ருஹுல்லாஹ் (அல்லாஹ்வின் ஆவி).

இதன் அர்த்தம் 'மூன்று அல்லாஹ்க்கள்' என்றா?

**இப்போது கிறிஸ்தவத்திற்கு வருவோம்.**

தேவன், தேவனின் வார்த்தை, தேவனின் ஆவி.

அல்லாஹ்வையும் அல்லாஹ்வின் வார்த்தையையும், அல்லாஹ்வின் ஆவியையும் சேர்த்துச் சொல்லும் போது "ஒன்று" என்று முஸ்லிம்கள் சொல்கிறார்கள். ஆனால், தேவனையும், தேவனுடைய வார்த்தையையும், தேவனுடைய ஆவியையும் சேர்த்துச் சொல்லும் போது மட்டும் "மூன்று" என்று ஏன் முஸ்லிம்கள் சொல்கிறார்கள்?

**கர்த்தருடைய வார்த்தையினால்** வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது (சங்கீதம் 33:6)

தேவன் தம்முடைய வார்த்தை மற்றும ஆவியின் வல்லமையினால் உலகமனைத்தையும் படைத்தார்.

அடுத்தபடியாக,

அந்த **வார்த்தை மாம்சமாகி**, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; . . . (யோவான் 1:14)

தேவனுடைய வார்த்தை = இயேசு

தேவனுடைய ஆவி = பரிசுத்த ஆவியானவர்

ஆக,

ஒரே தேவன் = தேவன் + தேவனுடைய வார்த்தை + தேவனுடைய ஆவி

ஒருவேளை முஸ்லிம்கள், தேவனும் அவருடைய வார்த்தையும், அவருடைய ஆவியும் சேர்த்து மூன்று என்று சொல்வார்களானால், அல்லாஹ்வும், அல்லாஹ்வுடைய வார்த்தையும், அல்லாஹ்வுடைய ஆவியும் சேர்த்து மூன்று அல்லாஹ்க்கள் என்று சொல்வார்களா?

**மூலம**: http://www.faithbrowser.com/are-there-three-allahs/

------ꙮꙮꙮꙮ------

## 15. இவர்களில் யார் உண்மையான இயேசு? (WHO IS THE REAL JESUS?)

(WHO IS THE REAL JESUS?)

உலகில் இயேசு பற்றி பல கதைகள் உலா வந்துக்கொண்டு இருக்கின்றன.

அவைகளில் சிலவற்றை இங்கு சுருக்கமாக தருகிறேன். கடைசியாக, இயேசுவின் உண்மையான சரித்திரம் எங்கு கிடைக்கும் என்ற விவரத்தையும் தருகிறேன்.

**1. ஜப்பானில் இயேசு:**

இயேசு ஜப்பான் தேசத்திற்கு தப்பித்துச் சென்றுவிட்டாராம். அங்கு ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் வெள்ளைப்பூண்டுகளை பயிரிட்டு வாழ்ந்தாராம். அங்கு மியுகோ (Miyuko) என்ற பெண்ணை திருமணம் செய்து, மூன்று பிள்ளைகளைப் பெற்று தம்முடைய 106வது வயதில் மரணமடைந்தாராம். எருசலேமில் சிலுவையில் மரித்தவர் இயேசுவின் சகோதரர் இசுகிரி (Isukiri) என்பவராம். இன்றும், ஜப்பான் வடக்கு பகுதியில் ஷிங்கோ (Shingo) என்ற இடத்தில் இயேசுவின் கல்லறையைக் காணலாம் என்று ஜப்பானில் இயேசு பற்றிய கதைகள் உலா வருகின்றன.

**2. இந்தியாவில் இயேசு:**

இந்தியாவிலும், இமயமலையிலும் நேபாளத்திலும் இயேசு பல ரிஷிகளிடம் பலவற்றைக் கற்றார் என்ற இன்னொரு கதை இந்தியாவில் உண்டு.

**3. எகிப்தில் இயேசு:**

இயேசு எகிப்திற்கு சென்றுவிட்டார் என்றும், அங்கு தம்முடைய முதிர் வயதுவரை வாழ்ந்து கடைசியாக மரித்தார் என்றும் ஒரு கதை உண்டு.

**4. காஷ்மீரில் (இந்தியா) இயேசு:**

இயேசு காஷ்மீர் பகுதிக்குச் சென்றார். அந்த காலத்தில் ஷாலிவாஹன்(Shalivahan) அரசன் காஷ்மீரை ஆட்சி செய்துக்கொண்டு இருந்தார். அவரை இயேசு சிரிநகரில் சந்தித்தார். அந்த அரசன் இயேசுவிடம் நீர் யார்? உம் பெயர் என்ன? என்று கேட்டபோது, என் பெயர் "யுசாஸபத் (Yusashaphat)” என்று இயேசு பதில் அளித்தாராம்.

**5. திபேத்தில் இயேசு:**

மஹாயான புத்தமதத்திலும் இயேசு வருகிறார். இயேசு திபேத்தில் 'போதிசத்வா அவலோகிதேஸ்வராவாக இருந்தராம். அவரது கைகள் மற்றும் கால்களில் ஒரு சிறிய துவாரம் போன்ற காயம் இருந்ததாம். இந்த காயங்கள் அவரை சிலுவையில் அறையப்பட்டபோது உண்டானவைகள். இந்த காயங்களை புத்த பிட்சுக்கள், 'புத்தரின் வாழ்க்கை சக்கரங்கள்' இவைகள் என்று சொல்கிறார்கள்.

**6. ரோம கட்டுக்கதையில் இயேசு:**

ரோமர்களின் கதைகளிலும் இயேசு வருகின்றார். இயேசு சிலுவையிலிருந்து தப்பித்துவிட்டாராம், அதன் பிறகு அவர் "அப்பொல்லோனியஸ் (டைனா ஊரிலிருந்து வந்தவர்)" என்ற பெயரில் தலைமறைவாக வாழ்ந்தாராம்.

**7. செவ்விந்தியர்களின் இயேசு:**

அமெரிக்க இந்தியர்களிடம் (செவ்விந்தியர்கள்) கூட ஒரு கதை உள்ளது. அதாவது இந்த செவ்விந்தியர்களின் இனக்குழுவில் 'மிகப்பெரிய சுகமளிப்பவர் (Pale Great Healer)' என்ற பட்டப்பெயரோடு ஒருவர் அவர்கள் மத்தியில் வாழ்ந்தாராம்.

### 8. இஸ்லாமில் இயேசு:

இயேசுவின் சிலுவைக்கு 600 ஆண்டுகள் கழித்து, பல ஆயிர மைல்களுக்கு அப்பால் உள்ள அரேபியா தீபகர்ப்பத்தில் 7ம் நூற்றாண்டில், ஒரு கதை உலா வந்தது. அந்த கதையின் படி, இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது (அ) சிலுவைக்கு முன்பு, யாரோ ஒரு நபர் இயேசுவைப்போல முகம் மாற்றப்பட்டு, இயேசுவின் இடத்தில் அமர்த்திவிட்டார்களாம். ஆகையால், இயேசுவிற்கு பதிலாக, அந்த முகவரி இல்லாத நபர் சிலுவையில் மரித்தானாம். இந்த கதை 7ம் நூற்றாண்டில் தோன்றிய மதத்தின் வேதமாகிய குர்ஆனில் காணப்படுகின்றது.

இயேசுவைப் பற்றி இன்னும் அனேக கதைகள் உலகில் உலாவுகின்றன. ஆனால், அவைகள் எல்லாம் பொய்யான கட்டுக்கதைகளாகும்.

இயேசுவின் உண்மையான வாழ்க்கை வரலாறை தெரிந்துக்கொள்ள, அவரோடு வாழ்ந்த அவரது உள்வட்ட சீடர்கள் எழுதிய சரித்திரங்களை படிக்கவேண்டும். இவர்கள் தான் இயேசுவோடு வாழ்ந்தவர்கள்: மத்தேயு, யோவான், பேதுரு மற்றும் இதர சீடர்கள்.

உண்மையான இயேசுவை நீங்கள் அறிய விரும்பினால், அவரது வாழ்க்கை வரலாறை பைபிளில் படிக்கலாம்.

இயேசுவின் சீடர் பேதுருவின், எழுத்தாளராகிய மாற்கு கீழ்கண்ட விதமாக இயேசுவின் வாழ்க்கை வரலாறை தொடங்குகிறார்.

> தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம். (மாற்கு 1:1)

இயேசுவின் சரித்திரத்தை படிக்க சொடுக்கவும்: **http://www.tamil-bible.com/lookup.php?Book=Mark&Chapter=1**

மூலம: **http://www.faithbrowser.com/who-is-the-real-jesus/**

------ꕥꕥꕥꕥꕥꕥꕥꕥ------

## 16. உங்களுடைய தண்டனையை மற்றவர்கள் மீது சுமத்தி, அல்லாஹ் அவர்களை தண்டிப்பானா?

(CAN SOMEONE ELSE TAKE YOUR PUNISHMENT?)

ஒருவரின் பாவங்களுக்காக மற்றொருவர் தண்டிக்கப்படமாட்டார்கள் என்று முஸ்லிம்கள் கூறுவார்கள். ஆனால், இஸ்லாம் இப்படி போதிப்பதில்லை, அது வேறு விதமாக போதிக்கிறது.

அல்லாஹ் முஸ்லிம்களின் பாவங்களை கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்கள் மீது சுமத்தி முஸ்லிம்களுக்கு பதிலாக யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் நரகத்தில் தள்ளுவான் என்று இஸ்லாம் சொல்கிறது.

**நூல்: சஹீ முஸ்லிம் ஹதீஸ், எண் 5342, 5343, 5344**

**5342. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

> வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் மறுமை நாளில் ஒவ்வொரு முஸ்லிமிடமும் ஒரு யூதரையோ அல்லது கிறித்தவரையோ ஒப்படைத்து, "இவன்தான் உன்னை நரகத்திலிருந்து விடுவித்தான்" என்று சொல்வான். இதை அபூமூசா அல்அஷ்அரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**5343. அவ்ன் பின் அப்தில்லாஹ் (ரஹ்), சயீத் பின் அபீபுர்தா (ரஹ்) ஆகியோர் கூறியதாவது:**

> "ஒரு முஸ்லிமான மனிதர் இறக்கும்போது நரகத்தில் அவரது இடத்திற்கு யூதர் ஒருவரையோ கிறித்தவர் ஒருவரையோ அல்லாஹ் அனுப்பாமல் இருப்பதில்லை" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக (தம் தந்தை) அபூமூசா (ரலி) அவர்கள் கூறினார்கள் என அபூபுர்தா (ரஹ்) அவர்கள் (கலீஃபா) உமர் பின் அப்தில் அஸீஸ் (ரஹ்) அவர்களிடம் அறிவித்தார்கள்.. . . .

**5344. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

> மறுமை நாளில் முஸ்லிம்களில் சிலர் மலைகளைப் போன்ற பாவங்களுடன் வருவார்கள். ஆனால், அவற்றை அவர்களுக்கு அல்லாஹ் மன்னித்துவிட்டு, யூதர்கள்மீதும் கிறித்தவர்கள் மீதும் அவற்றை வைத்துவிடுவான். . . .

குர்ஆன் 2:62ல், யூதர்களும் கிறிஸ்தவர்களுக்கும் நற்கூலி அல்லாஹ்விடம் உள்ளது என்று சொல்கிறது. ஆனால், மேலே கண்ட ஹதிஸ் குர்ஆனுக்கு மாற்றமாகச் சொல்கிறது.

> குர்ஆன் 2:62. ஈமான் கொண்டவர்களாயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும், ஸாபியீன்களாயினும் நிச்சயமாக எவர் அல்லாஹ்வின் மீதும், இறுதி நாள் மீதும் நம்பிக்கை கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ அவர்களின் (நற்) கூலி நிச்சயமாக அவர்களுடைய இறைவனிடம் இருக்கிறது; மேலும், அவர்களுக்கு யாதொரு பயமும் இல்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். (முஹம்மது ஜான் தமிழாக்கம்)

இஸ்லாமின் படி, தாம் விரும்புபவர்களை அல்லாஹ் வழிதவறச் செய்கின்றான், தான் விரும்புபவர்களை நேர்வழியில் நடத்துகிறான். ஆகையால், இஸ்லாமில் அழைப்புப்பணி (தாவா பணி) செய்யவேண்டிய அவசியமில்லை, ஏனென்றால், யார் இஸ்லாமை ஏற்கவேண்டும் என்று அவன் ஏற்கனவே முடிவு செய்துவிட்டானே!

முஸ்லிம்கள் தாவா பணி செய்து அல்லாஹ்வின் முடிவை மாற்ற முயலுவது சாத்தியமான காரியமா? இதுமட்டுமல்ல, குர்ஆனில் எங்கும் முஸ்லிம்கள் தாவா பணி செய்யும்படி சொல்லப்படவில்லை. இது மட்டுமல்ல, வேதம் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவர்களிடம் சென்று, உங்களுக்கு எவைகள் இறக்கப்பட்டுள்ளதோ அதனை பின்பற்றுங்கள் என்று சொல்லுவது முஸ்லிம்கள் செய்யவேண்டியது. ஏனென்றால், இதைத் தான் குர்ஆன் சொல்கிறது.

முஸ்லிம்களுக்கு குர்ஆன் 'வேதங்கள் மீதும், மலக்குகள் (தேவ தூதர்கள்) மீதும், நபிகள் மற்றும் கடைசி நியாயத்தீர்ப்பு நாள் மீதும் நம்பிக்கைக் கொள்ளுங்கள்' என்று அடிக்கடி சொல்கிறது. ஆனால், இந்த குர்ஆனின் கட்டளையை பின்பற்றக்கூடிய ஒரு முஸ்லிமையும் நான் இதுவரை காணவில்லை. அதற்கு பதிலாக முந்தைய வேதங்கள் தொலைந்துவிட்டன அல்லது மாற்றப்பட்டுவிட்டன என்று சொல்லும் முஸ்லிம்கள் தான் உள்ளனர். குர்ஆனின் மேலே கண்ட கட்டளை நியாயத்தீர்ப்பு நாள்வரையுள்ள கட்டளையென்று முஸ்லிம்களுக்குத் தெரியுமா?

மூலம்: **http://www.faithbrowser.com/can-someone-take-your-pubishment/**

------ഝഛഝഛഝഛഝഛ------

## 17. இஸ்மாயீலை காட்டுக்கழுதை என அழைத்து பைபிள் அவமானப்படுத்தியதா?

ஒரு முஸ்லிம் நண்பர் என்னிடம், 'பைபிள் இஸ்மவேலுக்கு துரோகம் புரிந்துள்ளது, அதாவது ஈசாக்கை முன் நிறுத்தும்படி இஸ்மவேலின் பெயர் வெளியே தெரியாமல் பைபிள் மறைத்துவிட்டது' என்று தான் எண்ணுவதாக கூறினார்.

முஸ்லிம் நண்பரே, உங்களின் கருத்து தவறானதாகும். ஆபிரகாமுக்கு (இப்ராஹீமுக்கு) இஸ்மவேல் மற்றும் ஈசாக்கு மட்டுமல்லாமல், வேறு மகன்களும் இருந்தார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர்களின் பெயர்களையும் பைபிள் பதிவு செய்யதவறியதில்லை என்ற உண்மையை தாழ்மையுடன் உங்களிடம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஈசாக்கை உயர்த்தும் படி பைபிள் நினைத்து இருந்திருந்தால், ஆபிரகாமுக்கு பிறந்த மற்ற மகன்களின் பெயர்களை ஏன் குறிப்பிடுகின்றது? ஆரம்பத்திலிருந்து அந்த மகன்கள் பற்றிய பெயர்களையே சொல்லாமல் இருந்திருந்தால், பிரச்சனை தீர்ந்தது அல்லவா? உண்மை என்னவென்றால், பைபிள் உள்ளதை உள்ளது போலவே சொல்கிறது, அது நமக்கு சரியாக தெரிந்தாலும் சரி

தவறாக தெரிந்தாலும் சரி, வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்றுச் சொல்கிறோமே, அது போல ஒளிவு மறைவு இன்றி பைபிள் பேசுகின்றது.

### மேசியாவின் (மஸீஹாவின்) வம்சாவழி:

இதை கவனியுங்கள். ஈசாக்கிற்கு இரண்டு மகன்கள் இருந்தார்கள், ஒருவரின் பெயர் ஏசா, இன்னொருவரின் பெயர் யாக்கோபு. யாக்கோபு பற்றிய விவரங்கள் தொடர்ச்சியாக பைபிள் சொல்லிக்கொண்டு வருகிறது, ஆனால் ஏசாவின் விவரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக குறைக்கப்பட்டுவிட்டது. இப்போது ஏசாவின் பெயரைக்கூட பைபிள் வேண்டுமென்றே மறைத்துவிட்டது என்று முஸ்லிம்கள் சொல்வார்களா?

இஸ்மவேலை ஆபிரகாம் நேசித்தார் என்று பைபிள் சொல்கிறது என்பதை நீங்கள் அறிவீர்களா? ஆனால், முக்கியமாக கவனிக்கவேண்டிய விவரம் என்னவென்றால், 'இஸ்மவேல்' கர்த்தரால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர் அல்ல என்பதாகும்.

இது தான் திருப்புமுனை, அதாவது பைபிளின் விவரங்களை கவனித்தால், அது மேசியாவை (Messiah - மஸீஹா) நோக்கியே நகர்வதைக் காணமுடியும். அதாவது மேசியாவின் வருகைப் பற்றிய விவரங்களுக்கு ஆதிக முக்கியத்துவம் கொடுத்து, பைபிள் தொடர்கிறது.

பைபிளின் மொத்த சாராம்சத்தை கவனித்தால், மேசியாவின் விவரங்களில் 'இஸ்மவேல் மற்றும் ஏசாவின்' விவரங்களை தேவையான அளவிற்கு மட்டுமே அது சொல்கிறது, தேவையில்லாதவைகளை சொல்வதில்லை.

இஸ்மவேலும் ஏசாவும் ஈசாக்கோடும், யாக்கோபோடும், அடுத்தடுத்த பகுதிகளில் வாழ்ந்தார்கள் என்று பைபிள் சொல்கிறது. ஆனால், அவர்கள் மேசியா வரப்போகும் வம்சமாக இல்லாததால், அவர்கள் பற்றிய விவரங்களை குறைத்துக் கொண்டது பைபிள், அவ்வளவு தான், இதில் எந்த ஒரு இரகசிய துரோகமோ, வஞ்சனையோ இல்லை.

ஈசாக்கோ அல்லது இஸ்மவேலோ, யாராவது ஒருவரின் குடும்ப பரம்பரையில் எதிர்காலத்தில் மேசியா வரவேண்டும். அந்த நபர் ஈசாக்கு என்று தேவன் முடிவு செய்தார், அவ்வளவு தான். யாக்கோபா அல்லது ஏசாவா? யாருடைய பரம்பரையில் மேசியா வரவேண்டும்? யாராவது ஒருவரின் பரம்பரையில் தான் மேசியா வரமுடியும். யாக்கோபை தேவன் தெரிவு செய்தார், அவ்வளவு தான். இந்த முடிவை தேவன் தான் செய்தார், மனிதன் அல்ல.

முஸ்லிம் நண்பர்களே, உங்களுக்கு ஒரு உண்மை தெரியுமா? ஈசாக்கு தனக்கு பிற்பாடு தன் சொத்துக்கள் அனைத்தும் அல்லது ஆசீர்வாதங்கள் அனைத்தும் தன் மூத்த மகன் ஏசாவிற்கு வரவேண்டும் என்று தான் விரும்பினார், யாக்கோபுக்கு அல்ல. இதையும் பைபிளே சொல்கிறது என்பதை மறக்கவேண்டாம். ஆனால், தேவனுடைய திட்டம் வேறுவிதமாக இருந்தது. தேவனுடைய திட்டம் மற்றும் ஞானத்திற்கு முன்பு மனிதனின்

(ஈசாக்கின் விருப்பம்) ஒரு பொருட்டல்ல. தேவன் யாக்கோபை தெரிவு செய்தார்.

பைபிளில் தேவன் தன்னைப் பற்றி பேசும் போது, தான் ஆபிரகாமின் தேவன், லோத்துவின் தேவன், இஸ்மவேலின் தேவன், ஈசாக்கின் தேவன், ஏசாவின் தேவன் மற்றும் யாக்கோபின் தேவன் என்று சொல்லவில்லை. அதற்கு பதிலாக, தாம் ஆபிராமின், ஈசாக்கின் யாக்கோபின் தேவன் என்று சொன்னார், காரணம் இந்த வம்சா வழியில் தான் மேசியா வரவேண்டும் என்பதற்காக அவர் அப்படிச் சொன்னார். இப்படி அவர் சொன்னதால் அவர் மற்றவர்களின் தேவனாக இல்லாமல் போய்விட்டாரா என்று கேட்டால் இல்லை, அவர் சர்வ உலக மக்களின் தேவன் தான், ஆனால், மேசியாவின் நேரடி வம்சா வழியில் வருபவர்களின் பெயர்களை அவர் குறிப்பிடுகின்றார் அவ்வளவு தான்.

### யாக்கோபும், அவரின் 12 மகன்களும் மேசியாவின் வம்சமும்:

தேவன் முதலாவது ஆபிரகாமை தெரிவு செய்தார், பிறகு ஈசாக்கு, அதன் பிறகு யாக்கோபு. இப்போது யாக்கோபுக்கு 12 மகன்கள் பிறந்தார்கள். ஆனால், இந்த 12 பேர்களில் ஒருவரின் வம்சத்தில் தான் மேசியா வரவேண்டும். மீதி 11 பேர்களின் வசமத்தில் மேசியா பிறக்கமுடியாது, இதில் எந்த ஒரு வஞ்சகமோ, துரோகமோ கிடையாது. யாக்கோபின் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஒரு வேலை இருந்தது, ஆனால் ஒருவரின் குடும்ப வழியில் தான் மேசியா வரவேண்டும் அல்லது வரமுடியும்! அதற்காக யூதா என்ற மகனின் குடும்பத்தை தேவன் தெரிவு செய்தார், இவருடைய வம்சத்தில் தாவீது இராஜா வந்தார், இவரது வம்சத்தில் மேசியா வந்தார். இதன் அடிப்படையில் தான் மேசியாவின் பட்டப்பெயர்களில் 'யூதாவின் சிங்கம் (Lion of Judah)' என்றும் மற்றும் 'மேசியா தாவீதின் குமாரன்(Son of David)' என்றும் அழைக்கப்பட்டார்.

பைபிளின் பழைய ஏற்பாடு, இஸ்ரேலின் சரித்திரத்தை மட்டும் சொல்லவில்லை, முக்கியமாக ஆதியாகமம் முதல் மல்கியா புத்தகம் வரை, அது மேசியாவின் வருகையை ஆங்காங்கே தீர்க்கதரிசனமாக சொல்லிக்கொண்டே வந்துள்ளது. மேசியா தான் பைபிளின் முக்கிய நடுப்புள்ளி என்பதால், வம்சா வழி பெயர்கள் பைபிளில் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. பழைய ஏற்பாட்டின் சரித்திரம் மற்றும் தீர்க்கதரிசனங்கள் அனைத்தும், மேசியாவை நோக்கியே நகர்ந்துக்கொண்டு வந்துள்ளது என்பதை கவனிக்கவேண்ன்டும்.

**இதனையே இயேசு புதிய ஏற்பாட்டில் சுருக்கமாக, லூக்கா 24ம் அத்தியாயத்தில் கூறியுள்ளார்:**

> அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார். ( லூக்கா 24:43)

மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். ( லூக்கா 24:27)

**பழைய ஏற்பாட்டில் நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்கள் மேசியாவைப் பற்றி கூறப்பட்டுள்ளது.**

1) மேசியா பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பு, ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக தேவன் 'மேசியா ஒரு கன்னியின் வயிற்றில் பிறப்பார்' என்றுச் சொன்னார் (ஏசாயா 7:14)

2) மேசியா பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பு, மீகா தீர்க்கதரிசி மூலமாக தேவன் 'மேசியா பெத்லகேமில் பிறப்பார்' என்று சொல்லியுள்ளார் (மீகா 5:2)

3) மேசியா பிறப்பதற்கு 1000 ஆண்டுகளுக்கு முன்பாக, தாவீது ராஜாவின் மூலமாக, மேசியா எப்படிப்பட்ட ஒரு மரணத்தை சந்திப்பார் என்று தேவன் சொல்லியுள்ளார் (சங்கீதம் 22)

மேற்கண்ட மூன்று மட்டுமல்லாமல், மீதமுள்ள அனைத்து தீர்க்கதரிசங்கள் அனைத்தும் இயேசு மீது நிறைவேறியது.

1500 ஆண்டுகளுக்கும் மேலாக பழைய ஏற்பாடு மேசியாவின் வருகைக்காக காத்திருந்தது. ஆகையால் தான் பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகமாகிய "மல்கியா புத்தகத்தில் தேவன்" கீழ்கண்டவாறு சொல்கிறார்:

**கர்த்தர் உரைக்கிறார்: நான் உன்னை சந்திக்க வருவேன்.**

400 ஆண்டுகள் கழித்து, புதிய ஏற்பாடு, மத்தேயு நற்செய்தி நூலில், ஒரு பரம்பரை பட்டியலோடு தொடங்குகிறது, இந்த பட்டியலைப் படித்து சிலருக்கு சலிப்பு (Boring) உண்டாகிவிடும்...

ஆனால், ஒரு நிமிடம் கவனியுங்கள். மத்தேயு ஏன் இப்படி தொடங்குகிறார் என்று சிந்தித்து பார்த்து இருக்கிறீர்களா?

அவர் என்ன சொல்கிறார்: "நில்லுங்கள் . . . கவனியுங்கள் . . . இதோ, பல நூற்றாண்டுகளாக காத்திருந்த மேசியா இதோ இங்கே இருக்கிறார்" என்றுச் சொல்கிறார்.

இப்போது உங்களுக்கு புரிந்ததா? ஏன் புதிய ஏற்பாடு ஒரு பரம்பரை பட்டியலோடு தொடங்குகிறது என்று?

மேலும் ஏன் கிறிஸ்தவர்கள் பைபிள் சொல்லாத இன்னொரு நற்செய்தியை நம்புவதில்லை என்று இப்போது புரிகின்றதா? மேலும், மேசியாவின் சந்ததியில் அல்லாமல் ஆயிர மைல்களுக்கு அப்பால் ஒரு நபி (முஹம்மது) தோன்றி நான் தான் யெகோவா தேவன் அனுப்பிய நபி என்று சொன்னாலும் ஏன் கிறிஸ்தவர்கள் நம்புவதில்லை என்று புரிகின்றதா? பைபிளின் படி

மேசியா தான் கடைசி தீர்க்கதரிசி மற்றும் அவருக்குப் பிறகு இன்னொரு தீர்க்கதரிசி (இஸ்லாமிய நபி முஹம்மது) தேவையே இல்லை. பைபிளின் இறையியலின் படி, இயேசுவிற்கு பிறகு இன்னொரு நபி தேவையில்லை, அப்படி வந்தால் அவர்கள் கள்ளத்தீர்க்கதரிசி ஆவார்கள்.

பைபிளின் மொத்த சுருக்கத்தைப் இப்போது அறிந்துக்கொண்டீர்களா? இந்த பின்னணியில் பார்த்தால், இஸ்மவேல் என்பவர் ஒரு சாதாரண நபர் தான்.

கடைசியாக, பழைய ஏற்பாடு எப்படி முடிவடைகின்றதோ, அதே போல புதிய ஏற்பாடும் முடிவு பெறுவதைக் காணமுடியும்.

அதாவது, பழைய ஏற்பாடு மேசியாவின் முதல் வருகைக்காக காத்திருப்பதோடு முடிவடைகிறது. புதிய ஏற்பாடு அதே மேசியாவின் இரண்டாம் வருகைக்காக காத்திருப்பதோடு முடிந்திருக்கிறது.

மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். (வெளி 22:20)

### காட்டுக்கழுதை என்பது அவமானப்படுத்துவதா?

> அவன் துஷ்டமனுஷனாயிருப்பான்; அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் இருக்கும்; தன் சகோதரர் எல்லாருக்கும் எதிராகக் குடியிருப்பான் என்றார். (ஆதியாகமம் 16:12)

இஸ்மவேலை "காட்டு கழுதை" என்று அழைப்பதன் மூலம் பைபிள் அவரை அவமதிக்கிறது என்று முஸ்லிம்கள் கூறுகிறார்கள். அது தவறானது.

21 ஆம் நூற்றாண்டை மனதில் வைத்து படிக்கும் போது, இது ஒரு அவமானம் போல் தோன்றலாம். இருப்பினும், 4000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சூழலை நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டால், "காட்டுக்கழுதை" என்றுச் சொல்லப்பட்ட வார்த்தையில் அத்தகைய நோக்கம் இங்கே இல்லை என்பதை புரிந்துக்கொள்ளலாம். ஒரு மிருகத்தின் குணத்தை ஒரு உதாரணத்திற்காக அவருக்கு ஒப்பிட்டு இங்கு பேசுகின்றது. இதில் நல்ல குணங்களும் அடங்கும், கெட்ட குணங்களும் அடங்கும். பொதுவாக பைபிள் அனேக முறை அனேகருக்கு ஒப்பிட்டு இப்படி பேசியுள்ளது, வெறும் இஸ்மவேலுக்கு மட்டும் பைபிள் சொல்வதில்லை.

தன் கடைசி காலத்தில் யாக்கோபு தன் மகன்களை ஆசீர்வதிக்கும் போது, இசக்கார் என்ற மகனைப் பார்த்து, "பலத்த கழுதை" என்று ஒப்பிட்டுச் சொல்கிறார்.

**ஆதியாகமம் 49:14**

> இசக்கார் இரண்டு பொதியின் நடுவே படுத்துக்கொண்டிருக்கிற பலத்த கழுதை.

இப்படி சொல்வதினால் யாக்கோபு தன் மகனை அவமதித்தார் என்று எடுத்துக்கொள்ளலாமா? இல்லை. இசக்காரின் சந்ததிகள் அனைவரும் எழுந்து, என் மூதாதையரை பைபிள் அவமதித்தது என்றுச் சொன்னார்களா? இல்லை.

இந்த இடத்தில், "பலத்த கழுதை" என்றச் சொல் எதனை தெரிவிக்கிறது? அவருடைய சந்ததிகள் பலமுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதையும், அதே நேரத்தில் ஒரு கழுதையைப் போல மற்றவர்கள் இவர்களிடம் அதிகமாக வேலை வாங்குவார்கள் என்பதையும் தெரிவிக்கிறது. இதில் கூட நேர்மறை எதிர்மறை பண்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதே அத்தியாயத்தில், இசக்காரின் சகோதரர் பென்யமீன் “ஒரு கொடூரமான ஓநாய்” என்று அழைக்கப்படுகிறார். இது ஒரு அவமதிப்பா? “ஓநாய் உருவம்” பெஞ்சமின் சந்ததியினர் ஆக்ரோஷமான போர்வீரர்களாக இருப்பார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. இந்த தீர்க்கதரிசனமும் 1 நாளாகமம் 8:40ல் நிறைவேறியது என்றுச் சொல்லலாம்.

> ஊலாமின் குமாரர் பராக்கிரமசாலிகளான வில்வீரராய் இருந்தார்கள்; அவர்களுக்கு அநேகம் புத்திரர் பௌத்திரர் இருந்தார்கள்; அவர்கள் தொகை நூற்றைம்பதுபேர்; இவர்கள் எல்லாரும் பென்யமீன் புத்திரர். (1 நாளாகமம் 8:40)

நப்தலி ஒரு புறாவிற்கு ஒப்பிடப்பட்டார். தான் (Dan) என்பவர் ஒரு பாம்பிற்கு ஒப்பிடப்பட்டார். யோசேப்பு ஒரு சிங்கக்குட்டிக்கு ஒப்பிடப்பட்டார். இவர்கள் அனைவரும் யாக்கோபின் மகன்களே! இவர்களை இப்படி மிருகங்களோடு ஒப்பிட்டதும் அவர்களின் தகப்பனே!

பைபிள் அவர்களை மிருகங்களின் பெயர்களைக் கொண்டு அழைக்கவில்லை அல்லது அவர்கள் மிருகங்கள் போல காணப்பட்டார்கள் என்றும் பைபிள் சொல்லவில்லை. ஆனால், எதிர்காலத்தில் அவர்களின் நேர்மறை எதிர்மறை பண்புகளை மிருகங்களோடு ஒப்பிட்டு பேசியுள்ளது அவ்வளவு தான்.

ஆகையால், ஆதியாகமம் 16:12ல் இஸ்மவேல் ஒரு காட்டுக்கழுதையைப் போல பண்புகளைக் கொண்டு வாழப்போகிறான் என்று சொல்லப்பட்டது. இதன் அர்த்தம் என்ன? இஸ்மவேலின் சந்ததிகள் சுதந்திரமானவர்களாக, கட்டுப்படுத்தமுடியாதவர்களாக, பலமுள்ளவர்களாக இருப்பார்கள் என்று சொல்லப்பட்டது அவ்வளவு தான். இது அவர்கள் பற்றிச் சொல்லப்பட்ட நல்ல நேர்மறை பண்பாகும்.

இதே போல, ஒரு எதிர்மறை பண்பும் சொல்லப்பட்டது. அது என்னவென்றால் அவர்களின் இந்த பலமுள்ள குணம், மற்றவர்களுக்கு எதிராக செயல்படுபவர்களாக காட்டப்படும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

மூலம்: **http://www.faithbrowser.com/ishmael-in-the-bible/**

------ൟൟൟൟൟ------

## 18. இயேசு என்ன சொன்னார்? வித்தியாசமான வினாடி வினா கேள்வி பதில்கள்

ஒரு வித்தியாசமான விளையாட்டை விளையாடுவோம் வாருங்கள். இந்த விளையாட்டின் பெயர் "இயேசு என்ன சொன்னார்" என்பதாகும். முக்கியமாக இந்த வினாடி வினாக்கள் முஸ்லிம்களுக்காக உருவாக்கப்பட்டது.

இந்த விளையாட்டில் 10 கேள்விகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கேள்விக்கும், இரண்டு தெரிவுகள் கொடுக்கப்பட்டு இருக்கும், அதாவது (A) மற்றும் (B). இவைகளில் நீங்கள் சரியான பதிலை தெரிவு செய்யவேண்டும். அந்த கேள்விக்கு உண்மையில் இயேசு என்ன பதில் சொன்னார் என்பதை நீங்கள் தெரிவு செய்யவேண்டும்.

எல்லா கேள்விகளும் இயேசு மக்களிடம் பேசிய உரையாடல்களை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வொரு கேள்விக்கும் நீங்கள் சரியான பதிலை தெரிவு செய்தால், உங்களுக்கு 10 மதிப்பெண்கள் கிடைக்கும். அனைத்து கேள்விகளுக்கும் நீங்கள் சரியான பதில் சொன்னால், உங்களுக்கு 100 மதிப்பெண்கள் கிடைக்கும். நீங்கள் 10 கேள்விகளுக்கும் சரியான பதிலைக் கொடுத்தால், உங்களுக்கு இயேசு பற்றி 100% தெரியும் என்று பொருள். ஒருவேளை சில கேள்விகளுக்கு தவறான பதில் கொடுத்திருந்தால், நீங்கள் இன்னும் இயேசு பற்றி கற்கவேண்டும் என்று பொருள்.

சரி வாருங்கள் கேள்விகளுக்குச் செல்லலாம்:

**கேள்வி 1:** தொழுநோயால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதன் இயேசுவை அணுகி அவர் முன் மண்டியிட்டு, கீழ்கண்டவாறு கூறுகின்றான்.

**மனிதன்:** ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான்

**இதற்கு இயேசு கீழ்கண்ட பதில்களில் ஒரு பதிலைச் சொன்னார்:**

A) இல்லை, இது என் சித்தம் அல்ல. இது தேவனின் விருப்பத்தைப் பொருத்தது. தேவன் விரும்பினால், உன்னை அவர் சுகமாக்குவார், உன் தொழுநோய் நீங்கும், அவர் விரும்பவில்லையென்றால், உன்னை சுகமாக்க என்னால் முடியாது.

B) இயேசு தமது கையை நீட்டி அவனைத்தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார் (உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்)

----*----

**கேள்வி 2:** ஒரு ரோம அரசு அதிகாரி இயேசுவிடம் உதவிக்காக வந்தான்.

**ரோம அரசு அதிகாரி:** ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான்

**இயேசு அந்த அதிகாரியிடம்:**

A) நீ வேறு மருந்துகளை அல்லது ஒட்டகத்தின் சிறுநீரை பயன்படுத்திப் பார்த்தயா? என்றார்

B) இயேசு: நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார்

**----*----**

**கேள்வி 3:** இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஒரு படகில் பயணம் செய்துக்கொண்டு இருந்தார்கள். அப்போது கடுமையான புயல் மற்றும் கடல் கொந்தளிப்பு வருகிறது.

**சீடர்கள்:** "ஆண்டவரே, எங்களைக் காப்பாற்றுங்கள்! நாங்கள் மூழ்கப் போகிறோம்! " என்றார்கள்.

**இயேசு சொன்னார்:**

A) நாம் அனைவரும் ஜெபிப்போம். ஒருவேளை தேவன் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு, நம்மை இந்த கடும் புயலிலிருந்து காப்பாற்றக்கூடும். தேவன் மட்டும் தான் இயற்கையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்.

B) அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி; எழுந்து, இயேசு காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதலுண்டாயிற்று.

**----*----**

**கேள்வி 4:** அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேதக்கல்லறைகளிலிருந்து இயேசுவிற்கு எதிராக வந்தான். அவன் இயேசுவைத் தூரத்திலே கண்டபோது, ஓடிவந்து, அவரைப் பணிந்துகொண்டு, இயேசுவிடம்:

**அசுத்த ஆவிபிடித்த மனிதன்:** இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை ஏன் வேதனைப்படுத்த வந்தீர்? என்னை வேதனைப்படுத்தாதபடிக்குத் தேவன்பேரில் உமக்கு ஆணையென்றுச் சொன்னான். என்னை தொந்தரவு செய்யாதீர் என்றான்.

**அவனுக்கு இயேசு:**

A) பாரப்பா, நான் என் வேலையை பார்க்கிறேன், உன்னை துரத்த நான் வரவில்லை என்று இயேசு சொன்னார்.

B) அசுத்த ஆவியே, இந்த மனுஷனை விட்டுப் புறப்பட்டுப் போ என்று இயேசு சொன்னார்.

----*----

**கேள்வி 5:** பக்கவாதம் நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதன் இயேசுவிடம் கொண்டுவந்தார்கள்.

**இயேசு:** மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்

**அங்கு இருந்த மத தலைவர்கள்:** இது தேவதூஷணம் ஆகும், பாவங்களை மன்னிக்க இறைவனால் மட்டுமே முடியும் (என்று சொன்னார்கள்).

**இதற்கு இயேசு கீழ்கண்டவாறு கூறினார்:**

A) நீங்கள் சொல்வது உண்மை தான். இறைவன் மட்டும் தான் பாவங்களை மன்னிக்கமுடியும், என்னால் மன்னிக்க முடியாது.

B) பாவங்களை மன்னிக்க எனக்கு அதிகாரமுண்டு என்பதை இப்போது நிருபிக்கிறேன் பாருங்கள் என்றுச் சொல்லி அந்த மனிதனை குணமாக்கி அனுப்பினார்.

----*----

**கேள்வி 6:** ஜெபஆலயத்தலைவனாகிய யவீரு என்பவன் இயேசுவிடம் ஒரு உதவிக்காக வந்தான்.

**யவீரு இயேசுவிடம்:** என் மகள் மரண அவஸ்தை படுகிறாள்; ஆகிலும், நீர் வந்து அவள்மேல் உமது கையை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்றான்

**இயேசு யவீருவிடம் இப்படி கூறினார்:**

A) காலதாமதம் ஆகிவிட்டது, அவளை காப்பாற்ற என்னால் முடியாது, இனி தேவன் தான் அவளை காப்பாற்ற முடியும்.

B) பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள் என்றார். (மரித்த அந்த சிறுமியை இயேசு உயிரோடு எழுப்பினார்)

----*----

**கேள்வி 7:** இயேசு தம்முடைய சீடர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்.

**இயேசு:** மக்களை என்னை யார் என்று கூறுகிறார்கள்?

**சீமோன் (பேதுரு) என்ற சீடர்:** நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்

**இதற்கு இயேசு இவ்விதமாக கூறினார்:**

A) இல்லை, நான் தேவகுமாரன் இல்லை. நான் வெறும் ஒரு நபி/தீர்க்கதரிசி மட்டும் தான்

B) யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.

----*----

**கேள்வி 8:** ஒரு முறை சில பெற்றோர்கள் தங்கள் சிறு பிள்ளைகளை இயேசுவிடம் கொண்டு வந்தார்கள். குழந்தைகளின் தலை மீது இயேசு கரங்களை வைத்து ஆசீர்வதிப்பார் என்று எதிர்ப்பார்ப்போடு வந்தார்கள்.

**இயேசுவின் சீடர்கள்:** இங்கேயிருந்து சென்றுவிடுங்கள். இயேசுவிற்கு இதற்கெல்லாம் இப்போது நேரமில்லை என்றனர்.

**இயேசு சீடர்களிடம் இவ்விதமாக கூறினார்:**

A) சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள். நான் திருமணம் செய்யும் படி சிறுமிகளில் யாராவது இருப்பார்களா என்று நான் பார்க்கட்டும்.

B) சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொல்லி, அவர்கள் மேல் கைகளை வைத்து ஆசீர்வதித்தார்.

----*----

**கேள்வி 9:** பத்து குஷ்டரோகிகளை இயேசு குணமாக்கினார். அவர்களில் ஒருவன் மட்டும் இயேசுவிற்கு நன்றி சொல்ல, அவரிடம் வந்தார்.

**குணமாக்கப்பட்ட மனிதன்:** உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தினான்.

**அவனுக்கு இயேசு இவ்விதமாக கூறினார்:**

A) இப்படி எனக்கு நீ நன்றி சொல்லக்கூடாது. நான் ஒரு ஊழியக்காரன் மட்டும்தான். நான் உன்னை சுகமாக்க வில்லை, தேவன் தான் உன்னை சுகமாக்கினார், அவருக்கு நீ நன்றி செலுத்து.

B) சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பதுபேர் எங்கே? தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு, இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக்காணோமே என்றார்.

----*----

**கேள்வி 10:** இயேசு மரித்ததிலிருந்து உயிரோடு எழுந்திருந்து, தம்முடைய சீடர்களுக்கு காணப்பட்டார்.

**தோமா என்ற சீடர் இயேசுவிடம்:** என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்

**அப்பொழுது இயேசு அந்த சீடரிடம்:**

A) கடைசியாகச் சொல்கிறேன் தோமா! இனி இப்படி சொல்லாதே! நிறுத்து. என்னை ஆண்டவர் என்றோ, தேவன் என்றோ சொல்லக்கூடாது என்று எத்தனை முறை உனக்குச் சொல்வது.

B) தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.

**----*----**

[மேற்கண்ட கேள்விகள் பைபிளின் புதிய ஏற்பாட்டின் நற்செய்தி நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன, இந்த அத்தியாயங்களை முழுவதுமாக படிக்க, கொடுக்கப்பட்ட தொடுப்புக்களை சொடுக்கவும்:

- கேள்விகள் 1 லிருந்து 3 வரை **மத்தேயு 8ம் அத்தியாயத்திலிருந்தும்**,
- கேள்வி 4 **மாற்கு 5ம்** அத்தியாயத்திலிருந்தும்,
- கேள்வி 5 **மாற்கு 2ம்** அத்தியாயத்திலிருந்தும்,
- கேள்வி 6 **மத்தேயு 9** மற்றும் **லூக்கா 8ம்** அத்தியாயங்களிலிருந்தும்,
- கேள்வி 7 **மத்தேயு 16ம்** அத்தியாயத்திலிருந்தும்,
- கேள்வி 8 **மத்தேயு 19வது** அத்தியாயத்திலிருந்தும்,
- கேள்வி 9 **லூக்கா 17வது** அத்தியாயத்திலிருந்தும், மற்றும்
- கேள்வி 10 **யோவான் 20வது** அத்தியாயத்திலிருந்தும் எடுக்கப்பட்டுள்ளன]

ஆங்கில மூலம்: http://www.faithbrowser.com/what-did-jesus-say-quiz/

------cscscscscs------

## 19. இயேசுவைப் பற்றி உங்களுக்கு எவ்வளவு தெரியும்?

முஸ்லிம்கள் இயேசுவை நேசிக்கிறார்கள், மதிக்கிறார்கள், அவருடைய போதனைகளைப் பின்பற்றுகிறார்கள் என்று சொல்வதை பலமுறை நான் கேட்டிருக்கிறேன். இது உண்மையான கூற்றா?

முஸ்லிம்களுக்கு எனது கேள்வி என்னவென்றால், நீங்கள் உண்மையில் இயேசுவை அறிவீர்களா? அவரைப் பற்றி உங்களுக்கு எவ்வளவு தெரியும்?

அவர் எங்கு பிறந்தார்? அவர் எங்கே வளர்ந்தார்? அவருக்கு சகோதர சகோதரிகள் இருந்தார்களா? அவர்களின் பெயர்கள் என்ன? அவருடைய

நெருங்கிய நண்பர்கள் யார்? தம்முடைய சீடர்களுக்கு அவர் எவைகளை போதித்தார்? ஜெபத்தைப் பற்றி அவர் என்ன கற்பித்தார்? நோன்பு என்ற உபவாசம் பற்றி அவர் என்ன கற்பித்தார்? அவர் செய்த அற்புதங்கள் என்ன? மூஸா மற்றும் இப்றாஹீம் மற்றும் இதர தீர்க்கதரிசிகள் பற்றி அவர் என்ன சொன்னார்?

முந்தைய வேதங்களைப் பற்றி அவர் என்ன சொன்னார்? சொர்க்கம் மற்றும் நரகத்தைப் பற்றி அவர் என்ன கற்பித்தார்? எதிர்காலத்தைப் பற்றி அவர் என்ன சொன்னார்? அன்பைப் பற்றி அவர் என்ன கற்பித்தார்? பணத்தைப் பற்றி? குடும்பத்தைப் பற்றி? மரணம் பற்றி? இப்படி பல தலைப்புக்கள் பற்றி அவர் பேசியுள்ளாரே, அவைகளை நீங்கள் அறிவீர்களா?

முஸ்லிம் நண்பர்களே! இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி உங்களுக்குத் தெரியாத பல விஷயங்கள் உள்ளன. அவைகளை அறிந்துக்கொள்ளாமலேயே அவர் “எங்கள் தூதர் மற்றும் எங்கள் தீர்க்கதரிசி” என்று நீங்கள் கூறுகிறீர்கள். உங்கள் கூற்றில் நீங்கள் உண்மையுள்ளவராக இருந்தால், இயேசுவின் வாழ்க்கையையும் அவருடைய வார்த்தைகளையும் அவருடைய செயல்களையும் பற்றி மேலும் நீங்கள் அறிந்துக்கொள்ளவேண்டும்.

இயேசுவின் நெருங்கிய சீடர்கள் எழுதிய அவரது வாழ்க்கை வரலாறை படியுங்கள். நீங்கள் ஒரு உண்மையான முஸ்லீமாக இருந்தால், இயேசு ஒரு நபி என்று நம்பி, அவரை மதிக்கிறீர்கள், நேசிக்கிறீர்கள் என்றால், இன்ஜீலில் இருந்து இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி படிக்க நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் படிக்கும் சுவிசேஷத்தை நீங்கள் படிக்க மறுக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும், ஆனால் நற்செய்தி என்று அழைக்கப்படும் இன்ஜிலை இயேசுவை கண்ட சாட்சிகள் அதாவது அவரது சீடர்கள் எழுதினார்கள், எனவே அவரைப் பற்றிய விவரங்களை நீங்கள் அங்கே காணமுடியும்.

உதாரணமாக, இயேசு எங்கு பிறந்தார் என்று உங்களுக்குத் தெரியுமா? இன்ஜிலில் இதனை பார்க்கலாம். குர்ஆனில் இதனை நீங்கள் கண்டுபிடிக்க முடியாது. இன்னொரு முக்கியமான விவரம் என்னவென்றால், இயேசு பிறந்த ஊரின் பெயர், ஹதீஸில் உள்ளது என்று சொன்னால், உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். நஸயீ ஹதீஸ் தொகுப்பு, அத்தியாயம் 5, ஹதீஸ் எண்: 451 ல் இதனை காணலாம் (**https://ahadith.co.uk/permalink.php?id=7731**).

“மத்தேயு அல்லது மாற்கு அல்லது லூக்கா” நற்செய்தி நூல்களில் இயேசுவின் முழு வாழ்க்கையையும் ஏன் நீங்கள் படிக்கக்கூடாது?

தமிழில் இன்ஜிலை படிக்க கீழ்கண்ட தொடுப்புக்களை சொடுக்கவும்:

1. **http://www.tamil-bible.com/chapters.php?Type=Matthew**
2. **http://www.tamil-bible.com/chapters.php?Type=Mark**
3. **http://www.tamil-bible.com/chapters.php?Type=Luke**

உங்களிடம் ஏதேனும் கேள்விகள் அல்லது சந்தேகங்கள் இருந்தால், அதை எழுதுங்கள். மேற்கண்ட இன்ஜிலை ஒருமுறையாவது முழுவதுமாக படித்துப் பாருங்கள்.

ஆங்கில மூலம்: http://www.faithbrowser.com/how-much-do-you-know-about-jesus/

------ര്ഷ്ര്ഷ്ര്ഷ്ര്ഷ്------

## 20. சலீமுடைய குர்ஆன் எங்கே?

"முஸ்லிம்கள் குர்ஆனை கற்க" தகுதியான மற்றும் சிறந்த நான்கு தோழர்களின் பெயர்களை முஹம்மது முன்மொழிந்தார். இந்த நான்கு பேர்களில் சலீம் என்பவர் ஒருவர் ஆவார்.

உண்மையில், முஹம்மதுவின் தோழர்களில் முதன் முதலில் குர்ஆனை எழுத்து வடியில் சேகரித்து எழுதி வைத்திருந்தவர் 'சலீம்' ஆவார். (சுயூதி, அல்இத்கான், பக்கம் 135 - As Suyuti, Al-Itqan fii `Ulum al-Qur'an, Vol.1 p.135).

சலீம் தனது பணியில் மிகவும் அர்ப்பணிப்புடனும் உண்மையுடனும் இருந்தார். சலீமின் இந்த குர்ஆன் எவ்வளவு விலைமதிப்பற்ற, வரலாற்று மதிப்புமிக்க புத்தகமாக இருந்திருக்க வேண்டும்!

துரதிர்ஷ்டவசமாக, யமாமா போரில் சலீம் இறந்தார், ஆனால் அவர் எதிர்காலத்தில் வரவிருக்கும் அனைத்து முஸ்லிம் தலைமுறையினருக்கும் குர்ஆனின் விலைமதிப்பற்ற பொக்கிஷத்தை கொடுத்துச் சென்றார் - அது தான் அவர் தொகுத்திருந்த குர்ஆன் கையெழுத்து பிரதி.

முஹம்மது அறிவுரை கூறியது போன்று இன்றைய முஸ்லிம்களும் சலீமிடமிருந்து அல்லது அவரது குர்ஆன் பிரதியிலிருந்து கற்றுக்கொள்ள முடியுமா?

**துரதிர்ஷ்டவசமாக, இல்லை.**

சலீமின் கையெழுத்துப் பிரதி எரிக்கப்பட வேண்டும் என்று உஸ்மான் கட்டளையிட்டார்! ஏன்? அவர் சலீமின் குர்ஆனைப் பற்றி பொறாமைப்பட்டாரா மற்றும் தன் பெயர் தாங்கிய குர்ஆன் பிரதியை முஸ்லிம்கள் பயன்படுத்தவேண்டும் என்று விரும்பினாரா?

முஹம்மதுவின் கட்டளையின்படி முஸ்லிம்கள் இன்று சலீமிடமிருந்து கற்றுக்கொள்ள வாய்ப்பு இல்லை. இந்த வாய்ப்பை முஸ்லிம்கள் இழப்பதற்கு காரணம் மூன்றாம் கலிஃபா உஸ்மான் அவர்கள் தான். இதற்கு உஸ்மானுக்கு முஸ்லிம்கள் நன்றி சொல்லவேண்டும்!

**முஹம்மதுவின் கட்டளையை உஸ்மான் ஏன் மீறினார்?**

முஹம்மது அங்கீகரித்த சலீமின் குர்ஆன் தொகுப்பு எரிந்து சாம்பளாகிவிட்டது. இன்று முஸ்லிம்கள் யார் தொகுத்த குர்ஆனை பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள்?

முஹம்மதுவின் தொழர்கள் அனைவரும் குர்ஆனை முழுவதுமாக மனப்பாடம் செய்திருந்ததால், சலீம் தொகுத்த குர்ஆன் அழிக்கப்பட்டதில் எந்த பிரச்சனையும் இல்லை என்று முஸ்லிம்களில் சிலர் கூறுகின்றனர்.

அப்படியானால், சலீமின் குர்ஆன் கையெழுத்துப் பிரதி ஏன் அழிக்கப்பட்டது? அவர் அதை சரியாக மனப்பாடம் செய்யவில்லையா? குர்ஆனை ஒரு புத்தகமாக முதலில் சேகரித்தவர் அவர். இன்றைய குர்ஆனில் இல்லாத ஒன்று அதில் உள்ளதா? சலீமின் குர்ஆனில் உஸ்மானுக்கு ஒத்துவராத விவரம் இல்லாமல் இருந்தால், ஏன் அவர் அந்த குர்ஆனை அழிக்க முயன்றார்? உஸ்மானுக்கு சலீமின் குர்ஆனை அழிக்க ஏதாவது ஒரு காரணம் கிடைத்ததா?

உஸ்மானின் கட்டளைப்படி அழிக்கப்பட்டது வெறும் சலீமின் குர்ஆன் கையெழுத்து பிரதி மட்டுமல்ல, முஹம்மதுவினால் நியமிக்கப்பட்ட இதர சிறந்த குர்ஆன் அறிஞர்களின் கையெழுத்துப் பிரதிகளும் அழிக்கப்பட்டன. முஹம்மதுவினால் சிறந்த குர்ஆன் ஓதுபவர்கள் என்று சொல்லப்பட்டவர்களில் அப்துல்லாஹ் இப்னு மஸூஊத் மற்றும் உபய் பின் காப் போன்றவர்களும் இருந்தார்கள். இவர்களின் குர்ஆன் கையெழுத்துப்பிரதிகள் கூட அழிக்கப்பட்டது ஏன்?

இவர்களின் குர்ஆன் ஓதுதலும், கையெழுத்துப் பிரதிகளும் பிழையாக இருக்கும் என்று கூட சொல்லமுடியாது, ஏனென்றால், இவர்களிடத்தில் தவறு இருந்திருந்தால், இவர்களிடம் குர்ஆனை கற்றுக்கொள்ளுங்கள் என்று ஏன் முஹம்மது சொல்லுவார்? இவர்கள் சிறந்த குர்ஆன் ஓதும் அறிஞர்கள் என்று முஹம்மது முடிவு செய்தது தவறு என்று சொல்லமுடியுமா? சிறந்த குர்ஆன் ஆசிரியர்களை அடையாளம் காண்பதில் முஹம்மது தவறு செய்தாரா? இதுமட்டுமல்ல, இவர்களில் உபய் பின் காப் என்பவர் சிறந்த குர்ஆன் ஓதுபவர் என்று ஸஹீஹ் புகாரியிலும் சொல்லப்பட்டுள்ளது. இப்படி இருந்தும், இவருடைய குர்ஆன் கையெழுத்துப் பிரதி கூட அழிக்கப்பட்டது.

முஹம்மதுவின் தோழர்கள் அனைவரும் குர்ஆனை முழுமையாக தவறில்லாமல் மனப்பாடம் செய்திருந்தால் அவர்களின் ஓதுதல், கையெழுத்துப் பிரதிகள் ஏன் தவறாக இருக்கும்? ஒருவேளை ஒவ்வொருவரும் குர்ஆன் முழுவதையும் மனப்பாடம் செய்யாமல், ஒவ்வொருவரும் குர்ஆனின் வெவ்வேறு பகுதிகளை மனப்பாடம் செய்தார்களா? முஹம்மதுவின் தோழர் சலீம் எப்படி குர்ஆனை மனப்பாடம் செய்தாரோ, எப்படி அவர் குர்ஆனை ஓதினாரோ அதே போல நீங்களும் இன்று ஓதுகிறீர்கள் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? அவரது குர்ஆன் அழிக்கப்பட்டுவிட்டதால், இதனை எப்படி நீங்கள் அறிந்துக்கொள்வீர்கள்?

ஆங்கில மூலம்: **http://www.faithbrowser.com/where-is-salims-quran/**

------ഐഞഐഞഐഞഐഞ------

## 21. முஸ்லிம்களே, இஸ்லாமின் படி ஈஸா தம் அழைப்பு பணியில் படுதோல்வி அடைந்தாரா?

முஸ்லிம்களே, இதை சிந்தித்துப் பாருங்கள்.

1. ஈஸா ஒரு இஸ்லாமிய நபி என்றும் இஸ்லாமின் அழைப்புப்பணியை செய்ய வந்தார் என்றும் நீங்கள் நம்புகிறீர்கள். ஆனால், இவருடைய அழைப்பு பணியின் மூலமாக ஒருவரும் இஸ்லாமை ஏற்கவில்லை. கி.பி 1 ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் வேரூன்றியதாக எந்த பதிவும் சரித்திரத்தில் இல்லை.

2. ஈஸாவிற்கு ஒரு புத்தகம் கொடுக்கப்பட்டதாக நீங்கள் நம்புகிறீர்கள். ஆனால், அந்த புத்தகம் இப்போது உலகில் இல்லை. அல்லாஹ் கொடுத்ததாகச் சொல்லப்பட்ட அந்த புத்தகத்தை ஈஸா எப்படியோ தொலைத்துவிட்டார் அல்லது அதனை பாதுகாக்க தவறிவிட்டார். ஆச்சரியம் என்னவென்றால் அல்லாஹ் கொடுத்த அந்த புத்தகத்தின் ஒரு அத்தியாயத்தையும் இன்று ஒரு நபரும் உலகில் அறியமாட்டார்கள்.

3. ஈஸாவை பின்பற்றியவர்கள் (சீடர்கள்) இஸ்லாமிய அழைப்புப்பணியை (தாவா) செய்யவில்லை. அதற்கு பதிலாக, அவர்கள் அல்லாஹ்வால் ஏமாற்றப்பட்டு, அல்லாஹ் சொல்லாத ஈஸா சொல்லாத மார்க்கத்தை பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார்கள். ஒன்று மட்டும் இங்கு சொல்லவேண்டி உள்ளது, அதாவது அல்லாஹ் இறக்கிய புத்தகம் உலகில் இன்று பாதுகாக்கப்படவில்லை, ஆனால், இவர்கள் உருவாக்கிய புத்தகங்கள் இதுவரைக்கும் காக்கப்பட்டுள்ளது. அந்த புத்தகங்களை படித்தால் அல்லாஹ் சொல்லாத செய்திகள் தான் உள்ளது. மேலும் ஈஸா தான் இறைவன் என்று அந்த புத்தகங்கள் சொல்கின்றன. அதனை முஸ்லிம்கள் ஷிர்க் என்றுச் சொல்கிறார்கள். எப்படிப்பட்ட குழப்பத்தை அல்லாஹ் செய்திருக்கிறான் பாருங்கள்.

4. முஸ்லிம்களே, ஈஸா பற்றி இப்படியும் நம்புகிறீர்கள். எந்த மக்களுக்கு ஈஸா இஸ்லாமிய அழைப்புப்பணி (தாவா பணி) செய்ய வந்தாரோ, அந்த மக்களே அவரை கொலை செய்ய முயற்சித்தார்கள். அல்லாஹ் அனுப்பிய ஈஸா உதவியற்ற நிலையில் இருந்தார். ஆனால், அல்லாஹ் ஒரு கோழையைப்போல அவரை காப்பாற்றி, அவரது இடத்தில் வேறு ஒரு நபரை இறக்கிவிட்டான். இப்படி செய்து அல்லாஹ் உலக மக்கள் அனைவரையும் முட்டாள்களாக்கிவிட்டான்.

5. கடைசியாக, தான் செய்த குழப்பங்களை சரி செய்ய அல்லாஹ் ஒரு காரியத்தை கடைசியாகச் செய்தான். இதற்காக அல்லாஹ் தன்னுடைய கடைசி தீர்க்கதரிசியை அனுப்பி, முந்தைய வேதங்கள் தொலைந்துவிட்டன அல்லது கறைபடுத்தப்பட்டுவிட்டன என்றுச் சொல்லி, ஒரு புதிய வேதத்தை

கொடுத்தான். அல்லாஹ் அனுப்பிய ஈஸா அடைந்த தோல்வியை சரி செய்ய, இந்த கடைசி நபி அனுப்பப்பட்டதாக நீங்கள் நம்புகிறீர்கள்.

முஸ்லிம்களே! இந்த கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள். அல்லாஹ் அனுப்பிய ஈஸா எப்படிப்பட்ட நபியாக இருந்தார்? ஈஸா இஸ்லாமிய அழைப்புப்பணியில் ஒரு சதவிகிதம் (1%) கூட வெற்றிப்பெற்றதாகத் தெரியவில்லையே! இப்படி படுதொல்வி அடைந்த ஈஸாவை நீங்கள் கௌரவப்படுத்துகிறீர்கள், அன்பு செலுத்துகிறீர்கள் என்று ஒரு பக்கம் சொல்கிறீர்கள். ஆனால், இன்னொரு பக்கம், அவர் படுதோல்வி அடைந்ததாகச் குர்ஆனும் இஸ்லாமும் சொல்கிறது. இது அவருக்கு அவமானமில்லையா!

**உமரின் முடிவுரை:**

அல்லாஹ் அனுப்பிய ஈஸாவுடைய பிறப்பு விசேஷமானது என்று நம்புகிறீர்கள். ஆணின் துணையின்றி இயற்கைக்கு அப்பாற்பட்ட விதமாக அவர் பிறந்தார் என்று நம்புகிறீர்கள். வேறு எந்த ஒரு அல்லாஹ்வின் நபியும் செய்யாத அற்புதங்கள் அவர் செய்ததாக நம்புகிறீர்கள், இருந்தபோதிலும் அவர் மிகப்பெரிய தோல்வி அடைந்தார் என்று இஸ்லாம் சொல்கிறது.

ஈஸா பற்றி குர்ஆன் சொல்லும் விவரங்கள் அனைத்தையும் சேர்த்து பார்க்கும் போது ஒரு படுதோல்வி அடைந்த நபியாக ஈஸா இருக்கிறார். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? இல்லை, ஈஸா தோல்வி அடையவில்லை! என்று சொல்வீர்களானால், கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து இஸ்லாம் உலகில் இருந்திருக்கவேண்டுமே! அவருக்கு அல்லாஹ் கொடுத்த புத்தகம் உலகில் இருந்திருக்கவேண்டுமே! அல்லாஹ்வின் பெயர் தாங்கிய விளக்கவுரைகள், கடிதங்கள் இஸ்ரேல் நாட்டிலிருந்து எழுதப்பட்டிருக்கவேண்டுமே! ஆனால், உண்மையில் இப்படிப்பட்ட ஒன்றையும் சரித்திரம் பதிவு செய்துவைக்கவில்லையே!

- முஸா நபிக்கு இறக்கப்பட்ட தவ்ராத், தாவூத் நபிக்கு (500+ ஆண்டுகள்) பாதுகாக்கப்பட்டு கிடைத்தது.
- தாவூத் நபிக்கு கொடுக்கப்பட்ட ஜபூர், ஈஸா நபிக்கு (1000+ ஆண்டுகள்) பாதுகாக்கப்பட்டு கிடைத்தது.
- ஆனால், ஈஸா நபிக்கு அல்லாஹ் கொடுத்த புத்தகம் முஹம்மதுவிற்கு, 600+ ஆண்டுகள் பாதுகாக்கப்பட்டு கிடைத்திருக்கவேண்டுமல்லவா!

ஈஸாவிற்கு அல்லாஹ் கொடுத்த புத்தகம் பாதுகாக்கப்படவில்லை என்று முஸ்லிம்கள் சொல்கிறீர்கள், கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து ஒரு முஸ்லிமும் வாழ்ந்ததாக, அல்லாஹ்வை தொழுததாக சரித்திரம் இல்லை, அப்படியானால் இஸ்லாமிய ஈஸா ஒரு படுதோல்வி அடைந்த அல்லாஹ்வின் நபி என்று சொல்லலாமா?

ஆங்கில மூலம்: www.faithbrowser.com/was-isa-pbuh-a-failure/

------ஞஜஞஜஞஜஞஜஞஜ------

## 22. சுலைமான் (சாலமோன்) ராஜா ஒரு முஸ்லிமா?

மன்னன் சுலைமான் அவர்களைப் பற்றி நான் 2 நாளாகமம் 2ம் அத்தியாயத்தில் படித்துக்கொண்டு இருந்தேன். இந்த சுலைமான் நபியைத் தான் என் முஸ்லிம் நண்பர்கள் "**அவர் ஒரு முஸ்லிம் நபி**" என்று சொல்கிறார்கள்.

இந்த அத்தியாயத்தில் படிக்கும் போது, சுலைமான் தன் இறைவனுக்கு (யெகோவா) கனத்தைக் கொடுக்கும்படியாக ஒரு ஆலயத்தை கட்ட ஆயத்தப்படுவதாக வருகிறது (2 நாளாகமம் 2:1). சுலைமான் ஒரு முஸ்லீம் என்று நீங்கள்(முஸ்லிம் நண்பர்கள்) கூறுவதால், அந்த ஆலயத்தை அல்லாஹ்விற்காகத் தானே அவர் கட்டி இருந்திருப்பார்? நான் சொல்வது சரி தானே!

**இறைவனுடைய ஆலயம் பற்றி சுலைமான் எப்படி விவரிக்கின்றார் என்பதை பாருங்கள்:**

> இதோ, என் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாகச் **சுகந்தவர்க்கங்களின் தூபம்காட்டுகிறதற்கும், சமுகத்தப்பங்களை** எப்போதும் வைக்கிறதற்கும், காலையிலும் மாலையிலும், **ஓய்வுநாட்களிலும்**, மாதப்பிறப்புகளிலும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் பண்டிகைகளிலும், இஸ்ரவேல் நித்தியகாலமாகச் செலுத்தவேண்டியபடி **சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துகிறதற்கும்**, அவருடைய நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக் கட்டி அதை அவருக்குப் பிரதிஷ்டைபண்ணும்படி நான் எத்தனித்திருக்கிறேன் (2 நாளாகமம் 2:4).

சுலைமான் அரசனின் மேற்கண்ட வார்த்தைகள் இஸ்லாத்தை விவரிகின்ற மாதிரி உள்ளதா? முஸ்லீம் தீர்க்கதரிசியான சுலைமான் இஸ்லாத்தை மேற்கண்ட விதமாக கடைபிடித்தாரா?

**இஸ்லாமிய தொழுகையில் தேவ சமூகத்து அப்பங்கள் உண்டா?**

இஸ்லாமில் இறைவனுடைய சந்நிதியில் எப்போதும் வைக்கப்படவேண்டிய ரொட்டிகள் (சமுகத்தப்பங்கள்) அல்லது சுகந்த வர்க்கங்கள் கொண்டு தூபம் காட்டுதல் மேலும் சனிக்கிழமை என்ற நாளை விசேஷித்த விதமாக ஆசரிப்பது போன்றவைகள் உண்டா? இவைகளின் முக்கியத்துவம் என்ன? இவை அனைத்தும் அல்லாஹ்வுக்காக செய்யப்பட்டதா? சுலைமான் அரசர் செய்த இவைகள் அனைத்தும் எனக்கு இஸ்லாமுக்கு சம்மந்தப்பட்ட வழிபாடுகள் போன்று தெரியவில்லையே!

சுலைமான் செய்தவைகள் அனைத்தும் எங்கள் இஸ்லாமின் வழிபாடுகள் என்று நீங்கள் சொல்வீர்களானால், சுலைமானின் காலத்திற்கு பிறகு எப்போது இவைகளை அல்லாஹ் மாற்றினான் என்று சொல்லமுடியுமா? அது மட்டும் அல்ல, இதை என்றென்றும் (இஸ்ரவேல் நித்தியகாலமாகச் செலுத்தவேண்டியபடி) செய்யும்படி அவர் இஸ்ரவேலுக்குக் கட்டளையிட்டார்.

**யூதர்களை ஒதுக்கி, இறைவன் அரபியர்களை தெரிவு செய்துக்கொண்டானா?**

இந்த கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்காக, சில முஸ்லிம்கள் "யூதர்களை ஒதுக்கி, இறைவன் அரபியர்களை தெரிவு செய்துக்கொண்டான், அதனால் வழிபாடுகளையும் மாற்றினான்" என்று சொல்லக்கூடும்.

சுலைமான் அரசரிடம் யெகோவா தேவன் நேரடியாக பேசியதாக 1 இராஜாக்கள் 6:11-13 வசனங்கள் கூறுகின்றன. வேறு ஒரு தூதர் மூலமாகவோ அல்லது மத்தியஸ்தர் மூலமாகவோ அல்லாமல், நேரடியாக பேசியதாக வசனங்கள் கூறுகின்றன. அவர் "என் ஜனமாகிய இஸ்ரவேலைக் கைவிடாதிருப்பேன் என்றார்." என்று சுலைமானிடம் கூறினார். சுலைமானிடம் பேசியது அல்லாஹ் என்றால், ஏன் தன் நபியிடம் இப்படிப்பட்ட வார்த்தைகளை அல்லாஹ் பேசுகின்றான்? அதே அல்லாஹ், 1600 ஆண்டுகளுக்கு பிறகு இன்னொரு முஸ்லிம் நபி (முஹம்மது) மூலமாக. யூதர்கள் பன்றிகள் என்று பேசியுள்ளான். சுலைமானிடம் பேசும் போது மட்டும், நான் இஸ்ரவேலை கைவிடாதிருப்பேன் என்றுச் சொன்னார், முஹம்மதுவிடம் மட்டும், அவர்கள் பன்றிகள் என்று ஏன் கூறுகின்றான் அல்லாஹ்? அல்லாஹ் தன் மனதை எப்போது மாற்றிக்கொண்டான்?

மேலும் பார்ப்போம்…

**சுலைமான் அரசர் எப்படி தொழுதுக்கொண்டார் என்று கவனியுங்கள்.**

**1 இராஜாக்கள் : 8:22-23**

> 22 பின்பு சாலொமோன்: கர்த்தருடைய பலிபீடத்திற்குமுன்னே இஸ்ரவேல் சபையாரெல்லாருக்கும் எதிராக நின்று, **வானத்திற்கு நேராய்த் தன் கைகளை விரித்து**:
>
> 23 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, மேலே வானத்திலும் கீழே பூமியிலும் உமக்கு ஒப்பான தேவன் இல்லை, தங்கள் முழு இருதயத்தோடும் உமக்கு முன்பாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காத்துவருகிறீர்.

மேலும் 54ம் வசனத்தில்: . . . **அவன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாகத் தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து, முழங்காற்படியிட்டிருந்ததைவிட்டெழுந்து**,. .. என்று சொல்லப்பட்டுள்ளது

முஸ்லிம்கள் இப்படித்தான் தொழுதுக்கொள்கிறார்களா? ஜெபிக்கிறார்களா? சுலைமான் முழங்கால் படியிட்டு, வானத்தை நோக்கி கைகளை உயர்த்தி தொழுதுக்கொண்டார். இது போல முஸ்லிம்கள் அல்லாஹ்வை தொழுதுக்கொள்கிறார்களா? ஒருவேளை, முஸ்லிம்கள் தொழுதுக்கொள்ளும் முறையை அல்லாஹ் மாற்றிவிட்டானா?

ஆம், அல்லாஹ் மாற்றினான் என்றுச் சொன்னால், எப்போது மாற்றினான்? சுலைமான் காலத்திலிருந்து எப்படி தொழுதுக்கொள்ளவேண்டும் என்று முஸ்லிம்களுக்கு கட்டளையிட்டதாக குர்ஆனிலிருந்து முஸ்லிம்கள் சான்றுகளை வசனங்களை காட்டமுடியுமா?

**இறுதியாக, சுலைமான் கட்டிய ஆலயத்தில் நடந்த வழிபாட்டின் காட்சி இதுதான்.**

> 12. ஆசாப், ஏமான், எதுத்தூனுடைய கூட்டத்தாரும், அவர்களுடைய குமாரர் சகோதரருடைய கூட்டத்தாருமாகிய பாடகரான லேவியரனைவரும் மெல்லியபுடவைகளைத் தரித்து, **கைத்தாளங்களையும் தம்புருகளையும் சுரமண்டலங்களையும்** பிடித்துப் பலிபீடத்திற்குக் கிழக்கே நின்றார்கள்; அவர்களோடும்கூடப் **பூரிகைகளை ஊதுகிற ஆசாரியர்கள்** நூற்றிருபதுபேர் நின்றார்கள்.
>
> 13. அவர்கள் ஒருமிக்கப் பூரிகைகளை ஊதி, **ஏகசத்தமாய்க் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரித்துப் பாடினார்கள்;** ஆசாரியர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையிலும், **பாடகர் பூரிகைகள் தாளங்கள் கீதவாத்தியங்களுடைய சத்தத்தைத் தொனிக்கப்பண்ணி** கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளதென்று அவரை ஸ்தோத்திரிக்கையிலும், கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது.
>
> 14. அந்த மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ்செய்து நிற்கக் கூடாமற்போயிற்று; கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று. (II நாளாகமம் 5:12-14)

மேற்கண்ட வசனங்களில் தொழுதுக்கொள்கின்ற அனைவரும் அல்லாஹ்வையா தொழுதுக் கொண்டிருக்கிறார்கள்? இசைக்கலைஞர்கள், பாடகர்கள் இசைக்கருவிகளைக் கொண்டு பாடிக்கொண்டு தொழுதுக்கொண்டு இருக்கிறார்கள். இப்படித் தான் இன்று முஸ்லிம்கள் தங்கள் மசூதிகளில் அல்லாஹ்வை தொழுதுக்கொள்கிறார்களா? அதாவது பல இசைக்கருவிகளை மீட்டி, பாடிக்கொண்டு தொழுதுக்கொள்கிறார்களா? பாடல் பாடிக்கொண்டும், இசைக்கருவிகளை இசைத்துக்கொண்டும் பாடி தன்னை தொழுதுக்கொள்வதை, எந்த காலத்திலிருந்து அல்லாஹ் மாற்றிவிட்டான்? இசையோடு தன்னை தொழுதுக்கொள்வதை எப்போது அல்லாஹ் முஸ்லிம்களுக்கு தடை செய்தான்?

ஆங்கில மூலம்: http://www.faithbrowser.com/was-king-solomon-a-muslim/

------ꕥꕥꕥꕥꕥꕥꕥꕥ------

## 23. முஸ்லிம்கள் நித்திய ஜீவனைப்பெற என்ன செய்யவேண்டும்?

நித்திய ஜீவனை பெற நான் என்ன செய்யவேண்டும்? இந்த கேள்வியை ஒரு பணக்கார இளைஞன் இயேசுவிடம் கேட்டான் (பார்க்க: மத்தேயு 19: 16-22, மாற்கு 10: 17-22 & லூக்கா 18: 18-23)

அந்த இளைஞனுக்கு இயேசு என்ன பதில் கூறினார்?

. . . நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார் (மத்தேயு 19:17)

குறிப்பு: 'கட்டளை - Law/Commandment' என்ற வார்த்தை பைபிளில் 'கற்பனை' என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

சிலர் முக்கியமாக முஸ்லிம்கள், இந்த உரையாடல் இந்த வசனத்தோடு முடிந்துவிட்டது என்று நினைத்து, அவர்கள் அடுத்தடுத்த வசனங்களை படிப்பதில்லை. அதன் பிறகு முஸ்லிம்கள் ஆச்சரியத்துடன் "பார்த்தீர்களா? நித்திய ஜீவனில் பிரவேசிக்க இயேசு கட்டளைகளுக்கு கீழ்படியவேண்டும்" என்றுச் சொல்கிறார் என்று நம்மிடம் கூறுவார்கள்.

ஆனால், அந்த உரையாடல், அதோடு நின்றுவிடவில்லை, மேற்கொண்டு படித்தால் தான் அந்த இளைஞன் என்ன பதில் கூறினான், அதற்கு இயேசு மறுபடியும் என்ன பதில் அளித்தார் என்று புரியும்.

> அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான் (மத்தேயு 19:20)

என்ன ஆச்சரியம்! அந்த இளைஞன் அனைத்து கட்டளைகளையும் கைகொண்டு இருப்பதாக கூறுகின்றானே! இதனால் நித்திய ஜீவனுக்கு போகும்படியான தகுதி அவனுக்கு முழுவதுமாக இருப்பதாக நாம் கருதலாம் அல்லவா?

அந்த வாலிபனின் பதிலுக்கு இயேசு என்ன உத்தரவு கொடுத்தார்?

"ஓ, நீ அனைத்து கட்டளைகளையும் பின்பற்றினபடியினால் உனக்கு நித்திய ஜீவன் நிச்சயம் உண்டு, நீ கலங்காதே, திகையாதே" என்றுச் சொன்னாரா?

அல்லது

இயேசு தம் சீடர்களைப் பார்த்து, "பார்த்தீர்களா, இந்த வாலிபன் நித்திய ஜீவனுக்கு போகும்படியான தகுதியை பெற்று இருக்கிறான்" என்றுச் சொன்னாரா?

இரண்டு பதில்களையும் இயேசு கூறவில்லை. ஆனால் அதற்கு பதிலாக கீழ்கண்டவாறு கூறினார்:

> இயேசு அதைக் கேட்டு: இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். (லூக்கா 18:22)

என்ன இது? ஒரு மனிதன் கட்டளைகள் அனைத்தையும் கடைபிடித்தாலும், அவனிடம் இன்னும் குறை இருக்குமா?

இதன் அர்த்தம் என்னவென்றால், ஒரு மனிதன் எல்லா கட்டளைகளை பின்பற்றினாலும் அது நித்திய ஜீவனுக்கு போவதற்கு போதாது என்பதாகும்.

ஒரு கசப்பான உண்மை என்னவென்றால், எந்த ஒரு மனிதனாலும் எல்லா கட்டளைகளையும் முழுவதுமாக எல்லா காலங்களிலும் கடைபிடிக்கமுடியாது என்பது தான். நான் எல்லா கட்டளைகளையும் சிறுவயது தொடங்கி பின்பற்றுகிறேன் என்று அந்த இளைஞன் சொன்னதே ஒரு அறியாமை ஆகும். அந்த இளைஞனின் அறியாமையை இயேசு கண்டார். இருந்த போதிலும் அவர் அவனை கடிந்துக் கொள்ளவில்லை.

இதைப் பற்றி மாற்கு 18:21ல் சொல்லும்போது, "இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து" என்று அழகாக சொல்லப்பட்டுள்ளது.

இன்று ஒவ்வொரு மதமும் குறையுள்ள மனிதர்களை எப்படி பார்க்கிறது? மதங்கள் மனிதனை தண்டிக்கிறது, அவர்களை கடிந்துக்கொள்கிறது. ஆனால், இயேசு இவ்விரண்டையும் செய்யவில்லை, அவர் அந்த இளைஞன் மீது அன்பு செலுத்தினார்.

சரி, மையக்கருத்துக்கு வருவோம்.

அந்த இளைஞனிடம் இருந்த ஒரு குறை என்ன? அவன் இன்னும் அதிகமாக கீழ்படிய வேண்டுமா? அல்லது இன்னும் நல்ல செயல்களைச் செய்யவேண்டுமா? - இல்லை.

இயேசு அந்த இளைஞனுக்கு கூறிய அந்த ஒரு காரியம் என்ன தெரியுமா?

> ". . .என்னைப் பின்பற்றிவா என்றார்." (மத்தேயு 19:21, மாற்கு 10:21, லூக்கா 18:22)

கட்டளைகள் அனைத்தையும் கடைபிடித்து கீழ்படிவது நல்லது தான், ஆனால் அந்த ஒரு செயல் நமக்கு நித்திய ஜீவனை கொடுக்க போதாது. நல்ல செயல்களைச் செய்வதும் நல்லது தான், ஆனால் நித்திய ஜீவனை அது சம்பாதித்து நமக்கு கொடுக்காது. அந்த வாலிபன், ஒருவேளை

தன் சொத்துக்களை விற்று ஏழைகளுக்கு கொடுத்தாலும், அது போதாது, இன்னும் ஒரு காரியம் குறைவாக உள்ளது.

உலக மக்களுக்கு நித்திய ஜீவனை கொடுக்கின்ற அந்த ஒரு காரியம் என்னவென்றால், "**இயேசுவை பின் தொடர்வது தான்**". ஏனென்றால், அவர் தான் நித்திய ஜீவனை கொடுப்பவர்.

> என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. (யோவான் 10:27, 28)

இயேசு தான் நித்திய ஜீவனைக் கொடுக்கின்றவர். ஒரு வேளை நீங்கள் உங்கள் வாலிப வயதிலிருந்து அனைத்து நல்ல கட்டளைகளை பின்பற்றுகிறவராக இருக்கலாம், ஆனால் இயேசுவை நீங்கள் பின்பற்றவில்லையென்றால், நித்திய ஜீவனை பெறும்படியான தகுதியை இழந்து விடுகின்றவர்களாக மாறிவிடுவீர்கள்.

இயேசுவை பின்பற்ற முடிவு செய்யுங்கள். அவரிடம் இப்பொழுதே உள்ளத்தில் பேசுங்கள், நான் உங்களை பின்பற்ற விரும்புகிறேன் என்று அவரிடம் சொல்லுங்கள். உங்களின் இந்த ஜெபத்தை அவர் நிச்சயம் கேட்பார், அவர் தனக்கே உரித்தான ஆச்சரியமான முறையில் உங்களுக்கு பதிலும் கொடுப்பார். இயேசுவின் ஆரம்பகால சீடர்களில் ஒருவர் இயேசு கொடுத்த ஒரு வாக்குறுதியை கீழ்கண்டவாறு கூறுகிறார்:

> நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம். (1 யோவான் 2:15)

இந்த வாக்குறுதியை நம்பி, '**இயேசுவை பின்பற்றுவேன்**' என்றுச் சொல்லி, அவரை உண்மையாக பின்பற்றுகிறவர்களுக்கு **நித்திய ஜீவன்** நிச்சயம் உண்டு.

**அடிக்குறிப்பு:**

**[1] நித்திய ஜீவன்:** மரணத்திற்கு பிறகு நித்திய நித்தியமாக இறைவனோடு வாழும் வாழ்க்கை

ஆங்கில மூலம்: http://www.faithbrowser.com/what-must-i-do-to-inherit-eternal-life/

**தேதி: 26th Feb 2020**

------ᘛᘚᘛᘚᘛᘚᘛᘚ------

## 24. முஸ்லிம்கள் இறைவனோடு எப்படி தொடர்பு கொள்ளமுடியும்?

நேரத்திற்குள்ளும் இடத்திற்குள்ளும் கட்டுப்பட்டுள்ள மனிதனால், நேரத்திற்கும் இடத்திற்கும் அப்பாற்பட்ட எல்லையில்லாதவராகிய இறைவனிடம் எவ்வாறு தொடர்பு கொள்ள முடியும்?

உங்களுடன் பேசவேண்டும் என்று ஒரு எறும்பு விரும்புகிறது என்றுச் சொன்னால், நீங்கள் நம்புவீர்களா? படைத்தவருக்கும் (இறைவன்) படைக்கப்பட்டவைகளுக்கும் (மனிதன்) இடையே உரையாடல் நடக்கும் என்றுச் சொல்வது இதை விட பெரிய ஆச்சரியமானதாகும்.

“மனிதன் இறைவனுடன் தொடர்பு கொள்ள முடியும்” என்று நீங்கள் நம்பினால், கீழ்கண்ட இரண்டு தெரிவுகளில் ஏதாவது ஒன்றை தெரிவு செய்யவேண்டி வரும்:

**1. நீங்கள் அவருடைய நிலைக்கு உங்களை உயர்த்திக்கொள்ள வேண்டும்**

அல்லது

**2. நீங்கள் இறைவனை உங்கள் நிலைக்கு இழுத்துக்கொண்டு, அவர் தன்னை தாழ்த்தும் படி செய்யவேண்டும்**

இந்த இரண்டு காரியங்களுக்கும் இஸ்லாமில் ஒரு சொல் உண்டு, அது தான் ஷிர்க். உங்களை இறைவனுக்கு சமமாக நீங்கள் மாற்ற விரும்புகிறீர்கள் என்று இதன் பொருள். இஸ்லாமில் இது மிகப்பெரிய பாவம் (ஷிர்க்) ஆகும்.

இறைவன் மனிதனாக தன்னை தாழ்த்திக்கொண்டு, நம் நிலைக்கு இறங்கி வருவதை கிறிஸ்தவம் "மனித அவதாரம்" என்றுச் சொல்கிறது.

கண்ணுக்குத் தெரியாத இறைவன் மனிதனாக வருவதினால் அவரை பார்க்கமுடிகின்றது, நாம் அவரை அறிந்து கொள்ளமுடிகின்றது. இஸ்லாமிய தெய்வம் அறியப்படாதவராக இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையே!

நாம் புரிந்துக்கொள்ளக் கூடிய வகையில் நம்முடைய இறைவன் தம்மை வெளிப்படுத்துகின்றார். அதனால் தான் அவருக்கு இம்மானுவேல் என்று பெயர். இம்மானுவேல் என்றால் “தேவன் நம்மோடு இருக்கிறார்” என்று அர்த்தம். அவர் தான் இயேசு.

மோசேவுடன் தேவன் எப்படி பேசினார், மோசே தேவனுடன் எப்படி பேசினார் என்பதை சிறிது சிந்தித்தால், இங்கு சொல்லப்படும் விவரம் இன்னும் தெளிவாக புரியும். தேவனுடன் பேசுவதற்காக மோசே தன்னை அவருக்கு சமமாக உயர்த்திக்கொண்டாரா? இல்லை. அதற்கு பதிலாக தேவன் தான் தன்னை மோசேக்கு வெளிப்படுத்துவதற்காக எரியும் புதரிலிருந்து

பேசினார். இப்படி செய்தால் தான் தேவனின் வார்த்தைகளை மோசே கேட்கமுடியும்.

இப்படி சொல்வதினால், நெருப்பு தான் தேவன் என்றோ, எரியும் புதர் தான் தேவன் என்றோ நான் சொல்லவில்லை. எந்த வகையில் பேசினால் மனிதனாகிய மோசே தன்னுடைய புலன்களால் அதாவது கண்களால் கண்டு, காதுகளால் தேவன் பேசுவதை கேட்டு புரிந்துக்கொள்ள முடியுமோ, அப்படி தம்மை தேவன் வெளிப்படுத்தினார்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், எல்லையில்லாதவரும் கண்ணுக்குத் தெரியாதவருமாகிய தேவன், தன்னை ஒரு எல்லைக்குட்படுத்திக் கொண்டு (புதரிலிருந்து பேசியதால்), தன் நிலையிலிருந்து கீழே இறங்கி வந்தார்.

மனிதனின் அறிவுக்கும் அனுபவங்களுக்கும் அப்பாற்பட்டவராக தேவன் இருந்தாலும், மனிதன் தன்னை அறியவேண்டும் என்பதற்காக அவர் தன்னை தாழ்ந்தி வந்தார். இப்படி செய்ததால் தான் மனிதன் தேவனோடு உறவாடவும் அறியவும் முடிந்தது.

**இதனை புதிய ஏற்பாடு கீழ்கண்டவாறு கூறுகின்றது:**

> 5. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; 6. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், 7. **தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.** 8. **அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.** (பிலிப்பியர் 2: 5-8)

இஸ்லாமிய இறைவன் தன்னை மனிதன் அறியவேண்டுமென்று விரும்புவதில்லை, அதனால் தான் அவன் ஏழு வானங்களுக்கு மேலே இருக்கிறான், பூமியில் இறங்கி வருவதில்லை. ஆனால் பைபிளில் தேவன் மனிதன் தன்னை அறிந்துக்கொள்ளவேண்டும் என்று விரும்பி பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார். பழைய ஏற்பாட்டில் மோசேவுடனும், இதர தீர்க்கதரிசிகளுடனும் பூமியில் வந்து உரையாடினார். மனிதனுக்காக அவர் தன்னை தாழ்த்தினார்.

மனிதன் தன்னை தேவனுக்கு சமமாக உயர்த்திக்கொள்வது ஷிர்க் என்று அழைப்பது சரியே, அதே போல, தேவன் தன்னை தாழ்த்தி மனிதனுக்காக இறங்கி வருவதை அன்பு என்று அழைப்பதும் சரி தானே.

**ஆங்கில மூலம்:** www.faithbrowser.com/how-can-you-communicate-with-god/

**தேதி:** 27th Feb 2020

------ꕥꕥꕥꕥꕥꕥꕥꕥ------

## 25. எலியா(எலியாஸ்) நபியின் இறைவன் யார்? - யெகோவா? / அல்லாஹ்?

பைபிளில் வரும் பெயர்களுக்கு அதிக முக்கியத்துவமுள்ளது. மேலும் ஒவ்வொரு பெயருக்கும் ஒரு பொருள் உள்ளது. இந்த எலியா என்ற பெயரின் பொருள் என்ன?

- El + i = My God
- Yah = Yahweh
- Eli-Yah = MY GOD IS YAHWEH

- எல் + இ = என் இறைவன்
- யா = யெகோவா
- எலியா = என் இறைவன் யெகோவா

இது ஒரு அதிசயமான பெயர். தான் வணங்கும் இறைவனின் பெயரையே தன் பெயரில் தாங்கிக்கொண்டு இருக்கிறார் எலியா. இதைப் பற்றி சிந்தித்துக்கொண்டு இருக்கும் போது, பைபிளில் யெகோவா என்ற பெயரை தாங்கிய மற்றவர்களும் இருக்கிறார்களா? என்ற கேள்வி எழுந்தது. உடனே தேட ஆரபித்தேன். யெகோவா என்ற வார்த்தை வரும் பெயர்கள் சிலவற்றை பைபிளிலிருந்து எடுத்து இங்கு தருகிறேன். கீழ்கண்ட பட்டியலைப் பாருங்கள்:

(குறிப்பு: "யா" என்று எபிரேய மொழியில் ஒரு பெயரை முடிக்கும் போது, அது யெகோவா தேவனை குறிக்கும் என்பதை அறியவும். ஆங்கிலத்தில் "Y"விற்கு பதிலாக "J" என்று எழுதுகிறார்கள். ஆக, எலியா என்ற பெயரை ஆங்கிலத்தில் "Elijah" என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள்.)

| எண் | பெயர் | அர்த்தம்/பொருள் | ஆங்கிலத்தில் பெயரும் பொருளும் |
|---|---|---|---|
| 1 | அபியா | யெகோவா என் பிதா | Abijah: My Father is Yahweh |
| 2 | அதோனியா | யெகோவா என் ஆண்டவர் | Adonijah, a son of David. His name means: My Lord is Yahweh |
| 3 | அமரியா | யெகோவா கூறினார் | Amariah, means Yahweh Has Said. |
| 4 | ஆனாயா | யெகோவா பதில் கொடுத்தார் | Anaiah, means Yahweh Has Answered. |
| 5 | அசரியா | யெகோவா உதவி செய்தார் | Azariah, one of Daniel's friends. His name means: Yahweh Has Helped. |
| 6 | அசசியா | யெகோவா வலிமையுள்ளவர் | Azaziah, means Yahweh Is Strong |
| 7 | பெனாயா | யெகோவா கட்டினார் | Benaiah, means Yahweh Has Built |

| | | | |
|---|---|---|---|
| 8 | கெதலியா | யெகோவா பெரியவர் | Gedaliah, means Yahweh is Great |
| 9 | கெமரியா | யெகோவா செய்து முடித்தார் | Gemariah, means Yahweh Has Completed |
| 10 | அனனியா | யெகோவா கிருபையுள்ளவர் | Hananiah, means Yahweh Is Gracious |
| 11 | எசேக்கியா | யெகோவா பெலப்படுத்துகிறார் | Hezekiah, a King of Judah. His name means Yahweh Strengthens |
| 12 | ஒதியா | யெகோவாவின் மாட்சிமை | Hodiah, means Majesty Of Yahweh |
| 13 | ஏசாயா | யெகோவா என் இரட்சிப்பு | Isaiah is one of the major prophets. His name means Yahweh Is Salvation |
| 14 | எகொனியா | யெகோவா ஸ்தாபிப்பார் / நிருபிப்பார் | Jeconiah, means Yahweh Will Establish |
| 15 | யோயாக்கீம் | யெகோவா உயர்த்தினார் | Jehoiakim, means Raised by Yahweh |
| 16 | யோராம் | யெகோவா மேன்மைபடுத்தினார் | Jehoram, name of two kings in Israel. The name means Exalted By Yahweh |
| 17 | யோசபாத் | யெகோவா நியாயந்தீர்த்தார் | Jehoshaphat, a king of Judah. His name means Yahweh Has Judged. |
| 18 | யெகூ | அவர் யெகொவா | Jehu, a king of Israel. His name means Yahweh Is He. |
| 19 | எரேமியா | யெகோவா உயர்த்துவார் | Jeremiah, one of the major prophets. His name means Yahweh Will Exalt. |
| 20 | எரியா | யெகோவா கற்றுக்கொடுத்தார் | Jeriah, means Taught By Yahweh |
| 21 | யோவாப் | யெகோவா பிதா ஆவார் | Joab, a commander of David's army. His name means Yahweh Is Father. |
| 22 | யோவாஸ் | யெகோவாவின் அக்கினி | Joash, a king of Judah. Meaning Fire of Yahweh |
| 23 | யோவேல் | யெகோவா'வே இறைவன் | Joel, name of a prophet. The name means Yahweh Is God. |
| 24 | யோவான் | யெகோவா கிருபையுள்ளவர் | John (Yochanan in Hebrew), means Yahweh Is Gracious |

| | | | |
|---|---|---|---|
| 25 | யோனத்தான் | யெகோவா கொடுத்தார் | Jonathan, son of King Saul and friend of David. Yahweh Has Given |
| 26 | யோசுவா | யெகோவா இரட்சிப்பு | Joshua, successor of Moses. Yahweh Is Salvation |
| 27 | யோசியா | யெகோவா ஆதரிக்கிறார் | Josiah, a king of Judah. The name means Yahweh Supports |
| 28 | யோதாம் | யெகோவா பிழையில்லாதவர் | Jotham, a king of Judah. Means Yahweh Is Perfect |
| 29 | மத்தேயு | யெகோவாவின் பரிசு | Matthew, one of the apostles. His name means Gift Of Yahweh |
| 30 | மிகாயா | யெகோவாவைப் போன்று யாருண்டு | Micaiah, means Who Is Like Yahweh |
| 31 | நெகேமியா | யெகோவா ஆறுதல் செய்கிறார் | Nehemiah, means Yahweh Comforts |
| 32 | நேரியா | யெகோவாவின் விளக்கு | Neriah, means Lamp Of Yahweh |
| 33 | நெத்தனியா | யெகோவா கொடுத்தார் | Nethaniah, means Yahweh Has Given |
| 34 | ஒபதியா | யெகோவாவிற்கு ஊழியம் செய்கிறேன் | Obadiah, name of a prophet. The name means, Serving Yahweh |
| 35 | செராயா | யெகோவா என் ஆட்சியாளர் | Seraiah, means Yahweh Is Ruler |
| 36 | சேமாயா | யெகோவா கேட்டார் | Shemaiah, means Heard By Yahweh |
| 37 | உரியா | யெகோவா என் வெளிச்சம் | Uriah, means Yahweh Is My Light |
| 38 | உசியா | யெகோவா என் பெலன் | Uzziah, a king of Judah. Means, My Power Is Yahweh |
| 39 | செப்பதியா | யெகோவா அளித்தார் | Zebadiah, means Yahweh Has Bestowed |
| 40 | சகரியா | யெகோவா நினைவுகூர்ந்தார் | Zechariah, father of John the Baptist. His name means, Yahweh Remembers |
| 41 | சிதேக்கியா | யெகோவாவின் நீதி | Zedekiah, last king of Judah. Means, Justice Of Yahweh |

| | | | |
|---|---|---|---|
| 42 | செப்பனியா | யெகோவா மறைத்துவைத்தார் | Zephaniah, name of a prophet. His name means, Yahweh Has Hidden |

**முஸ்லிம்களிடம் கேட்க விரும்பும் கேள்விகள்:**

- பைபிளில் அல்லாஹ்வின் பெயர் எங்கே?
- அல்லாஹ் என்ற பெயரை ஒருவரும் கேள்விப்படவில்லையா?
- பைபிளின் நபிகள் அனைவரும் அல்லாஹ்வின் நபிகள் தான் என்று முஸ்லிம்கள் நம்புகிறார்கள். அப்படியானால், அல்லாஹ்வின் பெயர் தான் யெகோவாவா?

உண்மையென்னவென்றால், யெகோவா என்ற பெயரை இஸ்லாம் அங்கீகரிப்பதில்லை.

மேற்கண்ட பட்டியலில் யெகோவாவிற்கு மகிமை உண்டாகும்படி பல பெயர்களை காண்கிறோம், இதில் தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள். ஆனால், அல்லாஹ்வின் பெயரில் ஒரு நபரின் பெயரையும் நம்மால் காணமுடியவில்லை. அல்லாஹ்வின் பெயரைக் கொண்ட ஒருவரின் பெயராவது பைபிளில் இருக்கவேண்டாமா?

முஸ்லிம்கள் நம்மிடம் "**எல்- El**" என்ற எபிரேய சொல் "அல்லாஹ்வை"க் குறிக்கும் சொல் என்றுச் சொல்வார்கள். ஆனால், இது உண்மையில்லை.

“எல் என்பது ஒரு தனிப் பெயர் இல்லை, இது இறைவனைக் குறிக்கும் பொதுப் பெயராகும் (El is not a proper noun. The word El just means God).

**எடுத்துக்காட்டு:**

- எசேக்கியேல் என்ற சொல்லின் பொருள் 'இறைவன் பெலப்படுத்துவார்' என்பதாகும்.
- எசேக்கியா என்ற சொல்லின் பொருள் 'யெகோவா பெலப்படுத்துவார்' என்பதாகும்.

இவ்விரண்டு பெயர்களின் பொருள்களுக்கும் உள்ள வித்தியாசத்தை கவனியுங்கள். “இறைவன்” என்பது பொதுப்பெயர், “யெகொவா” என்பது தனிப்பெயர்.

அரபி மொழியில் எடுத்துக்கொண்டாலும்:

- "**இலா - ila**" என்றால் "இறைவன்/கடவுள்/ஆண்டவர்" என்று பொருள் (பொதுப்பெயர்).

ஆனால்,

- "**அல்லாஹ் - Allah**" என்றால் அது 'இஸ்லாமிய இறைவனாகிய அல்லாஹ்வை மட்டுமே குறிக்கும்' என்று முஸ்லிம்கள் சொல்கிறார்கள் அல்லவா.

இதே போலத்தான், எல் என்பது பொதுப்பெயர், யெகோவா என்பது தனிப் பெயர்.

பைபிளின் இறைவனின் பெயர் யெகோவா ஆகும், பைபிளின் இறைவனின் பெயர் 'இறைவன்' இல்லை.

- But the LORD (Yahweh) is the true God; he is the living God and the everlasting King. Jeremiah 10:10

- கர்த்தரோ (யெகோவா) மெய்யான தெய்வம்; அவர் ஜீவனுள்ள தேவன், நித்திய ராஜா; . . . (எரேமியா 10:10 )

குறிப்பு: தமிழ் பைபிளில், பழைய ஏற்பாட்டை, மொழியாக்கம் செய்யும் போது, "**யெகோவா**" என்ற எபிரேய பெயர் வரும் இடங்களில் "**கர்த்தர்**" என்று மொழியாக்கம் செய்துள்ளார்கள். இந்த இடங்களில் "யெகோவா" என்றே மொழியாக்கம் செய்திருக்கவேண்டும். இதே போன்று ஆங்கில மொழியாக்கங்களில் யெகோவா என்று வரும் இடங்களில் "லாட் - LORD" என்று பெரிய எழுத்துக்களில் மொழியாக்கம் செய்துள்ளார்கள் என்பதை கவனிக்கவும்.

இந்த கட்டுரையின் ஆரம்பத்தில், **எலியா** என்றால் "என் இறைவன் யெகோவா" என்று பொருள் என்பதைப் பார்த்தோம். முஸ்லிம்கள் "எல்" என்றால் அல்லாஹ் என்று சொல்வார்களானால், எலியா என்றால் "**என் அல்லாஹ் யெகோவா ஆவார்**" என்று பொருள் வரும். இதனை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்வார்களா?

இஸ்லாம் முழுவதிலும் அதாவது குர்ஆனிலும், ஹதீஸ்களிலும் எங்கும், யெகோவா என்ற பெயர் ஒரு முறை கூட பயன்படுத்தப்படவில்லை என்பதை கவனிக்கவேண்டும்.

**இம்மானுவேல்:**

இயேசுவின் இன்னொரு பெயர் 'இம்மானுவேல்' என்பதாகும், இதன் பொருள் இறைவன் நம்மோடு இருக்கிறார் என்பதாகும், - அதாவது சரீரதாரியாக வந்த இறைவன் இயேசுவாக நம்மோடு இருக்கிறார்.

முஸ்லிம்கள் "எல்" என்பது அல்லாஹ்வைக் குறிக்கும் என்றுச் சொல்வார்களானால், இம்மானுவேல் என்றால், "அல்லாஹ் நம்மோடு இருக்கிறார்" என்று பொருள் வருகிறது. அப்படியானால், **இயேசு நம்மோடு இருந்தால்**, அதன் அர்த்தம் "அல்லாஹ் நம்மோடு இருக்கிறார்" என்று வருகிறது. இதுவும் இஸ்லாம் சொல்லும் போதனையல்லவே!

அல்லாஹ்வை கனப்படுத்த முஸ்லிம்கள் தங்கள் பெயர்களில் 'லாஹ் - lah' என்பதை சேர்த்துக்கொள்கிறார்கள்.

**எடுத்துக்காட்டு:**

- "அப்துல்லாஹ்" இதன் பொருள் "அல்லாஹ்வின் அடிமை" என்பதாகும்.
- "அமானுல்லாஹ்" இதன் பொருள் "அல்லாஹ்வின் பாதுகாப்பு" என்பதாகும்.

இதே போல, யூத கிறிஸ்தவர்கள் தங்கள் பெயர்களில் "யா" என்ற ஒரு எழுத்தை பெயரின் கடைசியில் அல்லது பெயரின் ஆரம்பத்தில் சேர்த்து, "யெகோவா" தேவனுடைய பெயர் தங்கள் பெயர்களில் வைத்துக்கொண்டு கனப்படுத்துகிறார்கள்.

பைபிளின் எபிரேய தீர்க்கதரிசிகள் யெகோவா தேவனை தொழுதுக்கொண்டார்கள், அவருக்கு ஊழியம் செய்தார்கள். இவர்கள் தங்கள் வாழ்நாளில் அல்லாஹ் என்ற பெயரை கேள்விப்படவும் இல்லை, அப்பெயர் பற்றிய வேறு விவரங்களை அறியவும் இல்லை.

ஆனால், எபிரேய தீர்க்கதரிசிகளை குர்ஆன் கடத்தி வைத்துக்கொண்டு, இவர்கள் அல்லாஹ்வின் தீர்க்கதரிசிகள் என்றுச் சொல்வது அறிவுடமையாகத் தெரியவில்லை. இதில் ஆச்சரியம் என்னவென்றால், குர்ஆன் கடத்திய எபிரேய தீர்க்கதரிசிகளின்

பெயர்களிலேயே யெகோவா தேவனின் பெயர் உள்ளது.

**எடுத்துக்காட்டு**:

- "**எலி-யா**" என்றால் "என் இறைவன் யெகோவா" என்று பொருள்.
- "**ஜகரிய்-யா**" என்றால், "யெகோவா நினைவு கூறினார்" என்று பொருள்.

யெகோவாவின் நபிகளை, அல்லாஹ்வின் நபிகளாக காட்டவேண்டுமென்றால், அல்லாஹ் அவர்களின் பெயர்களை மற்றியிருந்திருக்கலாம்.

- "எலி-யா" என்ற நபியின் பெயரை "எலிலுல்லாஹ்" என்றும்
- "ஜகரிய்-யா" என்ற பெயரை "ஜகருல்லாஹ்" என்று மாற்றியிருந்திருக்கலாம்.

அடுத்தபடியாக இஸ்லாமின்படி, ஒரு பெயர் "லாஹ் -lah" என்று முடிவு பெற்றாலோ, அல்லது "அல்" என்ற இரு எழுத்துக்கள் பெயர்களில் இருந்தாலோ அது அல்லாஹ்வை குறிக்கும் என்று நம்பப்படுவதினால், இப்படிப்பட்ட பெயர்கள் பைபிளில் உள்ளதா என்று தேடிப்பார்க்க முடிவு செய்தேன். அல்லாஹ்வின் பெயருக்கு ஓரளவிற்கு அருகாமையில் வரும் பெயர்களை பைபிளிலிருந்து தேடி கண்டுபிடித்து கீழே கொடுத்துள்ளேன், அவைகளை படிக்கவும்.

இந்த பெயர்களில் அல்லாஹ் இருக்கிறார் என்று முஸ்லிம்கள் சொல்வார்களானால், அதனை ஏற்றுக்கொள்வதற்கு கிறிஸ்தவர்களுக்கு எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை.

| **எண்** | **பெயர்** | **அர்த்தம்/பொருள்** | **ஆங்கிலத்தில் பெயரும் பொருளும்** |
|---|---|---|---|
| 1 | மாகலா (**Maha-lah**) | பெலவீனம் (அ) உடல் நலக்குறைவு | **Maha-lah**, means weak or sick - 1 Chronicles 7:18 |
| 2 | தெலீலாள் (**Deli-lah)** | பெலவீனம் | **Deli-lah**, means weak and languishing - Judges 16:4 |
| 3 | ஏலாள் (**He-lah)** | துரு பிடித்தல் | **He-lah**, means rust - 1 Chronicles 4:5 |
| 4 | உல்தாள்(**Huldah**) | மரநாய் (அ) மோல் என்ற ஒரு உயிரினம் | **Huldah**, means weasel or mole - 2 Kings 22:14 |
| 5 | பேலியாள் (**Belial**) | மதிப்பில்லாத | **Belial**, means worthless - Deuteronomy 13:13 |

ஆங்கில மூலம்: https://www.faithbrowser.com/the-god-of-elijah/

தேதி: 15th Mar 2020

------ஒஐஒஐஒஐஒஐஒஐ------